வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu
வார மலர் ඊළනාඩු

Email : news@eelanadu.lk | மலர் : 05 | 01.12.2024 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 335 | பக்கங்கள் : 16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# உள்ளூராட்சித் தேர்தலுக்கான பழைய வேட்புமனுக்கள் இரத்து!

## புதிதாக மீண்டும் கோருவதற்கு அனைத்து கட்சி கூட்டத்தில் முடிவு



யாழ்ப்பாணம், டிசெம்பர் 01

**உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக முன்னர் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் இரத்து செய்யப்படவுள்ளதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.**

புதிய வேட்புமனுக்களை கோருவதற்கு அனைத்துக் கட்சி தலைவர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர் எனவும் அவர் மேலும் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2022ஆம் ஆண்டு நடைபெறவிருந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக கோரப்பட்டுள்ள வேட்புமனுக்களை இரத்துச் செய்ய அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒன்று கூடி முடிவு எடுத்துள்ளனர்.

பாராளுமன்ற கட்சித் தலைவர்களின் கூட்டம் கடந்த திங்கட்கிழமை மாலை நடைபெற்றபோது இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

முன்னர் தாக்கல் செய்த வேட்புமனுக்களை இரத்துச் செய்துவிட்டு புதிய வேட்புமனுக்களை கோருவதற்கு 15

## யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவராக சந்திரசேகர்

யாழ்ப்பாணம், டிசெ. 01

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பணிப்பின்படி யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 28 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி விடயம் பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் போராசிரியர் ஏ. எச்.எம்.எச். அபயரத்னவால் 15

## பஸில் வரமாட்டார்!

கொழும்பு, டிசெ. 01

உள்ளூராட்சித் தேர்தலின்போதும் பொதுஜன பெரமுன கட்சியை நாமல் ராஜபக்ஷவே வழிநடத்துவார் என்று அக்கட்சி வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முதல்நாள் அமெரிக்கா பறந்த மொட்டு கட்சியின் ஸ்தாபகத் தலைவர் பஸில் ராஜபக்ஷ, பொதுத் தேர்தலின்போதுகூட நாடு திரும்பவில்லை.

இதனால் பொதுத் தேர்தலை நாமல் 15

## மாவீரர் தினப் பிரசாரம் மூவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 01

மாவீரர் தின நிகழ்வுகளை ஊக்குவித்துப் பிரசாரம் செய்த குற்றச்சாட்டின் பேரில் மூன்று சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர்களில் சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய ஒருவர் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் யாழ்ப்பாண உப பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேநேரம், கைதான ஏனைய இருவரில் ஒருவர் பத்தேகம பகுதியைச் சேர்ந்த 28 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது. 15

## எரிபொருள் விலை மாற்றம்!

கொழும்பு, டிசெ. 01

எரிபொருட்களின் விலை நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனம், ஒக்ரைன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலையை 2 ரூபாவினால் குறைத்து 309 ரூபாவாக நிர்ணயித்துள்ளது. அத்துடன், ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 3 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி, அதன் புதிய விலை 286 ரூபாவாகும். 15

## இலங்கையில் புதிய திட்டங்கள் களநிலையை ஆராயும் ஜப்பான்

கொழும்பு, டிசெ. 01

இலங்கை அதிகாரிகளின் கோரிக்கைகளையும், நாட்டின் பொருளாதார நிலையையும் முதலில் ஆராய்ந்த பின்னரே இலங்கையில் புதிய திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் ஜப்பான் பரிசீலிக்கும் என்று ஜப்பானிய தூதரகம் தெரிவித்துள்ளது.

எனினும் கடன் மறுசீரமைப்புக்குப் பின்னர், முன்னர் ஆரம்பிக்கப்பட்ட 11 திட்டங்களை மேற்கொள்வதே தமது முன்னுரிமை என்று தூதரகம் தெரிவித்துள்ளது. 15

## இறந்த உறவுகளை நினைவு கூரும் உரிமை அனைவருக்குமே உண்டு!

### கூறுகின்றது ஐக்கிய தேசிய கட்சி

கொழும்பு, டிசெ. 01


உறவுகளை நினைவு கூரும் விடயத்தை பிழையென கூற முடியாது என ஐ.தே.கவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நவம்பர் மாதத்தில் நிச்சயம் வடக்கு - கிழக்கில் உள்ளவர்கள் மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பர். மறுபுறம் இராணுவத்தினர் அவர்களின் 15

## சுவிஸ் தூதரக அதிகாரிகளை சந்தித்து பேசினார் சிறீதரன்!



யாழ்ப்பாணம், டிசெ. 01

இலங்கைக்கான சுவிஸ் தூதரக மற்றும் குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனை நேரில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள சிறீதரன் எம்.பியின் 15

## அனர்த்தங்களால் 16 பேர் உயிரிழப்பு

### 4 இலட்சத்து 65,746 பேர் பாதிப்பு

கொழும்பு, டிசெ. 01

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நேற்று நண்பகல் 12 மணி வரையான காலப்பகுதியில் 24 மாவட்டங்களில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் அனர்த்தங்களில் சிக்கி இதுவரை 16 பேர் உயிரிழந்ததாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. 15

## விடுதலைப் புலிகளை நினைவு கூரமுடியாது!

### நவீன் திஸாநாயக்க காட்டம்

கொழும்பு, டிசெ. 01

இலங்கையில் விடுதலைப்புலிகளை அஞ்சலிப்பதற்கு அனுமதி வழங்கக்கூடாது என முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

தமிழர் பகுதிகளான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இம்முறை மாவீரர் தினம் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டுள்ள நிலையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில், ஊடகங்களிடம் மேலும் கருத்து தெரிவித்த அவர்- 15

## வெளிநாடுகளில் உள்ள பழைய மாணவர் சங்கங்கள் அனுப்பும் நிதி லஞ்சம், ஊழலை வளர்த்துவிடுகின்றது!

### வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் சுட்டிக்காட்டு




யாழ்ப்பாணம், டிசெ. 01

"யாழ் பாடசாலைகள் சில நேரடியாக வெளிநாடுகளிலிருந்து பழைய மாணவர் சங்கங்களூடாக நிதியைப் பெறுகிறார்கள். ஆனால் அவை எவ்வாறு செலவிடப்படுகின்றது என்ற பொறுப்புக் கூறல் எதுவும் அங்கில்லை. இது ஊழலுக்கே இட்டுச் செல்லும்" என ஆளுநர் நா.வேதநாயகம், ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

யாழில் உள்ள சில முன்னணிப் பாடசாலைகள் சட்டவிரோதமாக அன்பளிப்பு என்ற பெயரில் ஆயிரக்கணக்கிலும் இலட்சக் கணக்கிலும் அன்பளிப்புக் கோருகின்றனர். பாடசாலைகளில் நடைபெறும் எந்தவொரு நிகழ்வுக்கும் மாணவர்களிடமோ 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்முனைவோருக்கு ஊக்குவிப்பு தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டும்

## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 01
"வடக்கு மாகாணத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கான ஊக்குவிப்புகள் கடந்த காலங்களில் வழங்கப்பட்டிருந்தாலும் அவை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டிருக்க வில்லை. அவர்களுக்கு தொடர்ச்சியான ஊக்குவிக்கும், கண்காணிப்பும் இருக்க வேண்டும். இதன் ஊடாகவே தேசிய மொத்த உற்பத்திக்கான வடக்கு மாகாணத்தின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்ய முடியும்"- இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

தொழில் முயற்சியாண்மை, ஆய்வு மற்றும் முன்னெடுப்புகளுக்கான "கேட்" நிறுவனத்தின் அனுசரணையுடன், யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீட வியாபார மேம்பாட்டு இணைப்பு அலகின் ஏற்பாட்டில் நடைபெற்ற "வட மாகாணத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மைகளுக்கான வாய்ப்புகளைத் திறத்தலும், தந்திரோபாய ஈடுபாடும்" என்ற தலைப்பிலான கருத்தரங்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழக விவசாய பீட மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் விருந்தினர்களுள் ஒருவராக இணையவழியில் பங்கேற்று உரையாற்றுகையில் ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், "முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களின் மாவட்டச் செயலராக நான் பணியாற்றிய காலத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோரை மேம்படுத்த பல முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தன. ஆனால், அவை தொடர்ச்சியாக நடைபெறவில்லை. போருக்கு முன்னர் எமது வடக்கு மாகாணத்தில் பல தொழிற்சாலைகள் இருந்தன. போர் மற்றும் அதன் பின்னரான இடப்பெயர்வுகளால் அவை அழிவடைந்தன.

போரின் பின்னர் வடக்கு மாகாணத்தில் வேலைவாய்ப்பு மிக முக்கிய பிரச்னையாக தோற்றம் பெற்றிருக்கின்றது. சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோரைப் பலப்படுத்துவதன் ஊடாக வேலை வாய்ப்பு தொடர்பான பிரச்னைக்கு ஓரளவு தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியும்.

இத்தகைய தொழில்முனைவோர் எதிர்கொள்ளும் முக்கிய சவால்களான நிதி மூலத்தை அடையாளம் காணுதல், அவர்களின் தொழில் முயற்சிகளை அடுத்த தளத்தை நோக்கி விரிவாக்குவதற்குரிய ஆலோசனைகள் என்பன இருக்கின்றன. அவற்றை இப்படியான கருத்தரங்குகள் மூலம் வழங்குவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எடுக்கின்ற முயற்சி வரவேற்கத்தக்கது.

இவற்றுக்கு அப்பால் இத்தகைய தொழில்முனைவோர் தமது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புகள் இல்லாமல் இருக்கின்றன. கண்காட்சிகள் நடத்தப்படும்போது அங்கு கொண்டு வந்து தமது பொருட்களை சந்தைப்படுத்தும் நிலைமையே இருக்கின்றது. அவர்களுக்கு தொடர்ச்சியான சந்தை வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க மாகாண சபை ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் பல முதலீட்டாளர்கள் வடக்கை நோக்கி வரத் தொடங்கியுள்ளனர். இது சாதகமான மாற்றம். இதைப் பயன்படுத்தி தேசிய உற்பத்திக்கான வடக்கின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்ய வேண்டும். அதேநேரம் எமது சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கும் தொடர் ஊக்குவிப்புகளை வழங்கி அவர்களையும் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்த வேண்டும். இதன் ஊடாக புதிதாக இளம் தொழில்முயற்சியாளர்களையும் உருவாக்க முடியும்"- என்றார். (ஏ- 02)

# வவுனியாவில் யானை தாக்கி கடற்படை அதிகாரி மரணம்!

வவுனியா, டிசெ. 01
வவுனியாவில் கடற்படை அதிகாரி ஒருவர் காட்டு யானை தாக்கி உயிரிழந்தார் என்று பூனாவ பொலிஸார் தெரிவித்தனர்.

பணி நிமித்தமாக கொழும்புக்கு சென்று விட்டு பேருந்தில் முகாமுக்கு திரும்பிய அதிகாரி வாகனத்தில் இருந்து இறங்கி முகாமுக்கு சென்று கொண்டிருந்த போது நேற்று முன்தினம் இரவு யானை தாக்கியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பூனாவ கடற்படை முகாமில் கடமையாற்றிய மத்தலான, நிட்டம்புவவை சேர்ந்த கடற்படை அதிகாரியே இவ்வாறு உயிரிழந்தார்.

யானை தாக்கியதில் பலத்த காயமடைந்த அவரை, கடற்படையினர் மற்றும் உள்ளூர் மக்கள் இணைந்து வவுனியா மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். இருப்பினும் அவர் உயிரிழந்தார். (எ-10)

# சாவகச்சேரியில் பூசகரைத் தாக்கி நகை, பணம் பறித்த கும்பல் கைது

## பெண் உட்பட மூவர் சிக்கினர்

யாழ்ப்பாணம், டிசெ. 01
சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கைதடிப் பகுதியில் அமைந்துள்ள ஆலயத்தில் வைத்து கடந்த புதன்கிழமை பூசகரைத் தாக்கி பணம், நகை அபகரித்த கும்பலை சாவகச்சேரி பொலிஸார் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்தனர்.

இதன்போது, பூசகரிடம் இருந்து பறிக்கப்பட்ட ஒன்றரைப் பவுண் சங்கிலி, 40 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் பூசகருடைய சங்கிலியை விற்றுப் பெற்ற இரண்டு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் பணம் என்பனவற்றை பொலிஸார் மீட்டதுடன் பெண் ஒருவர் உட்பட மூவரைக் கைது செய்தனர்.

பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-05)

# திருமறைக் கலாமன்ற தினமும் வைர விழா ஆண்டின் ஆரம்பமும்

யாழ்ப்பாணம், டிசெ. 01
திருமறைக் கலாமன்றம் 1965 ஆம் ஆண்டில் கலைத்தூது நீ. மரிய சேவியர் அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்டது. இம் மன்றம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தனது மன்றத் தினத்தை கொண்டாடுகின்ற நாளில் வைர விழா ஆண்டில் கால்பதிக்கின்றது. இதனை முன்னிட்டு அன்றைய நாள் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

காலை 6. 30 மணிக்கு - இலக்கம்17, மார்ட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைஞான சுரபி தியான இல்லத்தில் நன்றி வழிபாடும், முற்பகல் 10 மணிக்கு இலக்கம் 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது மணிமண்டபத்தில் இரத்ததான முகாமும், மாலை 4 மணிக்கு இலக்கம் 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

மாலை நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் சாம்பசிவம் சுதர்சனும் கலந்துசிறப்பிக்கவுள்ளனர்.

கலைநிகழ்ச்சிகளாக கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவிகளின் நடனம், திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் வழங்கும் 'நஞ்சுண்ட கண்டன்' நாடகம், 'விண்ணக வீரன்' வடமோடி நாடகம் என்பவற்றுடன் கலைஞர் கௌரவிப்பும் நடைபெறவுள்ளது.

திருமறைக் கலாமன்றம் அறுபதாவது ஆண்டில் கால் பதிப்பதை முன்னிட்டு அடுத்த ஆண்டு பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (எ)

# வெள்ள அழிவுகளுக்கு மத்தியில் யானைகளாலும் பெரும் சேதம்

## முல்லைத்தீவு விவசாயிகள் வேதனை

முல்லைத்தீவு, டிசெ. 01
முல்லைத்தீவில் காட்டு யானைகளின் அட்டகாசத்தால் மக்களின் வாழ்வாதாரங்களுக்கு பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு - தெத்தலியாறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள பெரும்போக நெற்செய்கையை மூன்று காட்டு யானைகள் தினமும் இரவு வேளைகளில் சேதப்படுத்தி வருகின்றன.

தற்போது, வெள்ளம் வடிந்து வரும் நிலையில், யானைகள் தொடர்ச்சியாக நெற்பயிர்களை சேதப்படுத்தி வருகின்றன. வெள்ளம் காரணமாக அப்பகுதிக்கு இரவு வேலைகளில் காவலுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கூறினர்.

விதைப்பு மேற்கொள்ளப்பட்டு 40 நாட்கள் கடந்த நிலையில் உள்ள வயல்களை யானைகள் மிதித்து துவம்சம் செய்து வருவதுடன் அப்பயிர்களை மேய்ந்து வருவதாகவும் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலை ஒவ்வொரு வருடமும் தொடர்வதாகவும் நெற்செய்கை மேற்கொள்ளும் தமக்கு அழிவுகளே அதிகமாக ஏற்படுவதாகவும் உரிய நஷ்ட ஈடு வழங்கப்படுவதில்லை எனவும் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.(எ)

# இடைத்தங்கல் முகாம்களிலிருந்து வீடு திரும்பிய வவுனியா மக்கள்

வவுனியா, டிசெ. 01
வவுனியாவில் மழைவீழ்ச்சி குறைந்தமையால் தாழ்நிலப் பகுதிகளில் இருந்து வெள்ளநீர் வடிந்தோடிவருவதுடன் இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்த மக்கள் வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

வங்காளவிரிகுடாவில் ஏற்பட்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக வவுனியாவில் கடந்த சில நாட்களாக கடும் மழை பெய்துவந்தது. இதனால் பல்வேறு பகுதிகளிலும் இடர்நிலமை ஏற்பட்டுள்ளதுடன் பல கிராமங்கள் முற்றாக வெள்ளத்தில் மூழ்கின.

தற்போது மாவட்டத்தில் மழைவீழ்ச்சி குறைவடைந்துள்ளது. இதனால் வெள்ளம் வடிந்தோடி வருகின்றது.

இந்த நிலையில் 3022 பேர் உறவினர்கள் வீடுகளில் தங்கவைக்கப்பட்டிருந்தனர். அத்தோடு, வெள்ளப்பாதிப்பால் 11 இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்த அனைவரும் தமது வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

அத்துடன் சீரற்ற கால நிலையால் இதுவரை 204 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், 55 குளங்களில் பெரும் உடைவு ஏற்பட்டுள்ளது. வவுனியா மாவட்டத்தில் மழை குறைவடைந்துள்ள நிலையில் கடும் குளிரான காலநிலை நிலவி வருகின்றது. (எ-10)

# சர்வதேச சதுரங்கப் போட்டி யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 01
இலங்கை சதுரங்க சம்மேளனம் மற்றும் ஆசிய சதுரங்க சம்மேளனம் ஆகியவற்றின் ஆதரவுடன் யாழ் மாவட்ட சதுரங்க சம்மேளனம் நடத்தும் "யாழ்ப்பாண சர்வதேச சதுரங்க போட்டி 2024" நேற்று ஆரம்பமாகியது.

குறித்த போட்டி எதிர்வரும் டிசெம்பர் 4 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் கொக்குவிலில் இடம்பெறுகிறது.

இப்போட்டியில் சுமார் 750 இற்கு மேற்பட்ட சதுரங்க வீரர்கள் பங்குபற்றுகின்றனர்.

இவர்கள், இந்தியா, பிரித்தானியா மற்றும் இலங்கையின் சகல மாவட்டங்களில் இருந்தும் கலந்து கொண்டுள்ளனர்.

இப்போட்டியில் சுமார் 24 இலட்சம் ரூபா பெறுமதியான பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த பரிசு 150 இற்கு மேற்பட்ட வீரர்களுக்கு கிடைக்கும் விதமாக வரையறுக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியானது யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்ற இரண்டாவது சர்வதேச சதுரங்க போட்டியாகும்.

இன்றைய தொடக்க விழாவில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகம் கலந்து கொண்டு சிறப்பித்ததோடு சிறப்பு விருந்தினராக சிவ பூமி அறக்கட்டளை நிறுவனர் கலாநிதி ஆறு திருமுருகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்., வவுனியா மாவட்டங்களில் காற்றின் தரம் குறைவடையலாம்

## சுற்றாடல் அதிகார சபை எச்சரிக்கை

**கொழும்பு, டிசெ. 01**

**"பெங்கல்" புயல் தாக்கத்தால் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் காற்றின் தரம் குறைவடையலாம் என்று மத்திய சுற்றாடல் அதிகார சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.**

தென்மேற்கு வங்காள விரிகுடாவில் "பெங்கல்" புயலின் தாக்கம் காரணமாக நாட்டில் சில பகுதிகளில் காற்றின் தரம் குறைவடையலாம்.

நாட்டில் சில பகுதிகளில் காற்றின் தரச் சுட்டெண் 92 - 120 வரை காணப்படலாம் எனவும் சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா, குருநாகல், கண்டி, கேகாலை, நுவரெலியா, இரத்தினபுரி, புத்தளம், பதுளை, திருகோணமலை, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, பொலநறுவை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் காற்றின் தரம் குறைவடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

காற்றின் தரம் குறைவடைவதன் மூலம் வளிமண்டலத்தில் மாசு அதிகரிக்கக்கூடும். இதனால் காற்று மாசுபாடு ஏற்படும்.

காற்று மாசுபாடு ஏற்படுவதால் மனிதர்கள் மத்தியில் நோய்கள் அதிகரிக்கும் நிலை ஏற்படலாம். குறிப்பாக சுவாச நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என மத்திய சுற்றாடல் அதிகார சபை அறிவுறுத்தியுள்ளது. (எ)

# 6 கோடி ரூபாய் சொத்துகளை கொள்ளையடித்த 9 பேர் கைது

கொழும்பு, டிசெ. 01

ஆயுதங்களைக் காட்டி அச்சுறுத்தி 6 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியான நீல நிற மாணிக்கக்கல், தங்கப் பொருட்கள் மற்றும் பணம் திருடப்பட்டமை தொடர்பில் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

லக்கல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பிலேயே இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இக் குற்றச் செயலுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மாவத்தகம மற்றும் பொல்பித்திகம பொலிஸ் பிரிவுகளில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து ஒரு கோடி ரூபாய்க்கும் அதிகமான பணம், 7 பவுண் தங்க நகைகள் மற்றும் 2 கைத்துப்பாக்கிகள், கத்தி, வான் என்பனவற்றை பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் தேரர் ஒருவரும் அடங்குவதாக தெரியவருகிறது.

சந்தேகநபர்கள் வத்தேகம, சபுகஸ்கந்த, பொல்பித்திகம, குருநாகல், இரத்தினபுரி மற்றும் வில்கமுவ ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 38 வயதுக்கும் 49 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

# கடும் மழை, வெள்ள பெருக்கால் புத்தளத்தில் 30,598 பேர் பாதிப்பு

புத்தளம், டிசெ. 01



புத்தளம் மாவட்டத்தில் கடும் மழை, வெள்ளப் பெருக்கால் இதுவரை 9034 குடும்பங்களைச் சேர்ந்த 30, 598 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் புத்தளம், முந்தல், கற்பிட்டி, வன்னாத்தவில்லுவ, நாத்தாண்டிய, மாதம்பை, ஆராச்சிக்கட்டுவ, பல்லம, தங்கொட்டுவ, மஹாவெவ, சிலாபம், கருவலகஸ்வெவ மற்றும் வென்னப்புவ ஆகிய 13 பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 176 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த 9034 குடும்பங்களைச் சேர்ந்த 30, 598 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் சிலாபம் பிரதேச செயலாளர் பிரிவிலேயே அதிகளவிலான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதேவேளை, புத்தளம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தத்தினால் 46 வீடுகளும், 3 வர்த்தக நிலையங்களும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

வெள்ளம் காரணமாக புத்தளம் மாவட்டத்தில் இது வரை இருவர் உயிரிழந்தனர். இருவர் காயமடைந்தனர் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# கடத்தலில் ஈடுபடும் எம். பிக்கள் பதவிகளைப் பறிக்க வேண்டும்!

## சட்டம் கொண்டுவர சபாநாயகரிடம் உதுமாலெப்பை எம். பி. வேண்டுகோள்

கொழும்பு, டிசெ. 01

"நமது நாட்டுக்கும் பாராளுமன்றத்துக்கும் அபகீர்த்தி ஏற்படுத்தி கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிகளை பறிக்கக் கூடிய வகையில் புதிய சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும்"- இவ்வாறு அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். உதுமாலெப்பை, சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பத்தாவது பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட



புதிய உறுப்பினர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட திசைமுகப் படுத்தல் செயலமர்வு பாராளுமன்றத்தில் சபாநாயகர் அசோக ரன்வல தலைமையில் நடைபெற்றது. இதன்போதே, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் கூறுகையில், "மக்களின் ஆணையைப் பெற்று பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களில் சிலர் நமது நாட்டுக்கும், பாராளுமன்றத்துக்கும் அபகீர்த்தி ஏற்படுத்தி கடத்தல் செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறான பாராளுமன்ற உறுப்பினர்களை பதவியில் இருந்து நீக்குவதற்கான புதிய சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அதனை சட்டமாக்க சபாநாயகர் ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

பாராளுமன்றத்தில் சட்டமூலம் கொண்டு வந்து கடத்தலில் ஈடுபடும் பாராளுமன்ற உறுப்பினர்களை பதவிலிருந்து நீக்க முடியாத நிலைமை ஏற்படுமாயின், ஜனாதிபதியின் விசேட அதிகாரத்தை பயன்படுத்தி கடத்தலில் ஈடுபடும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு ஜனாதிபதி விசேட குழு ஒன்றை நியமிக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (எ)

# இரண்டு மாத சம்பளத்தை முற்பணமாக வழங்குங்கள்

## ஜனாதிபதியிடம் அவசர கோரிக்கை

கொழும்பு, டிசெ. 01

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு இரண்டு மாத சம்பளத்தை முற்பணமாக வழங்குமாறு தபால் திணைக்கள உத்தியோகத்தர்கள் சங்கத்தால் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தபால் திணைக்கள உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் யூ. எல். எம். பைசரால் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் கடந்த வாரம் ஏற்பட்ட கடும் மழை மற்றும் பெரு வெள்ளம் காரணமாக அதிகளவான அரசாங்க உத்தியோகத்தர்கள் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர். அரசாங்க ஊழியர்கள் என்ற காரணத்தால் அரசாங்கத்தினாலோ அல்லது தனியார் தொண்டு நிறுவனங்களினாலோ வழங்கப்படுகின்ற எந்தவிதமான உதவிகளும் அவர்களுக்கு கிடைக்கவில்லை.

இதனால், பொருளாதார ரீதியாகவும் வாழ்வாதார ரீதியாகவும் நெருக்கடிக்குள்ளாகியுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு இரண்டு மாத அடிப்படைச் சம்பளத்தை முற்பணமாக வழங்குமாறும் அவற்றினை வட்டி இல்லாமல் 24 மாதங்களில் மீளப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் குறித்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ)

# அரிசி இறக்குமதிக்கு விலைமனு கோரல்

கொழும்பு, டிசெ. 01

இந்தியாவிலிருந்து 70, 000 மெற்றிக் தொன் நாட்டு அரிசியை இறக்குமதி செய்வதற்கு விநியோகத்தர்களிடம் இருந்து விலைமனு கோரப்பட்டு வருவதாக லங்கா சதோச நிறுவனத்தின் தலைவர் சமித பெரேரா தெரிவித்தார்.

இதன்படி, அரிசியை இறக்குமதி செய்வது தொடர்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முதல் 7 நாட்களுக்குள் விநியோகத்தர்கள் விண்ணப்பிக்க முடியும். டிசெம்பர் மாதம் முதல் வாரம் அரிசியை இறக்குமதி செய்ய வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (எ)

# ஏனைய ஆசிய நாடுகளை விட இலங்கை அரச துறை பெரியது

கொழும்பு, டிசெ. 01

தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் உள்ள நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் அரச துறையில் பணிபுரிபவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாகவுள்ளது என வெரிட்டே ரிசேர்ச் மேற்கொண்ட ஆய்வில் தெரிய வந்துள்ளது.

2023 ஆம் ஆண்டில் மொத்த தொழில் படையான 8 மில்லியனில் 1. 16 மில்லியன் பேர் அதாவது 15 வீதமானோர் மத்திய அரசாங்கம், துணைத் தேசிய அலகுகள் மற்றும் இராணுவம் உட்பட அரச துறையில் பணி புரிந்துள்ளனர். குறிப்பாக, மொத்த அரச உத்தியோகத்தர்களில் மூன்றில் ஒரு பங்கினர் பாதுகாப்பு மற்றும் பொது மக்கள் பாதுகாப்புத் துறையில் பணியாற்றுகின்றனர். ஒப்பீட்டு ரீதியில், பிராந்தியத்தில் உள்ள ஒரே மாதிரியான பொருளாதார அமைப்புகளைக் கொண்ட நாடுகளில் மிகக் குறைவான அரச உத்தியோகத்தர்களே பணிபுரிகின்றனர்.

தமது தொழில்படையில் இந்தியா 9 வீதமும் வியட்நாம் 8 வீதமும் பங்களாதேஷ் 5 வீத உத்தியோகத்தர்களை மட்டுமே அரச துறையில் பயன்படுத்துகின்றன. அரச துறைக்கு குறைந்த ஊதியம் வழங்கப்பட்டாலும், இதன் காரணமாக அதிக செலவு ஏற்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கம் 940 பில்லியன் ரூபாயை அதன் மீண்டெழும் வரவு - செலவு திட்டத்தில் 20 வீதத்தையும் அதன் வருமானத்தில் 31 வீதத்தையும் அரச துறையினருக்கு சம்பளங்களுக்காகச் செலவிட்டுள்ளது.

கடந்த தசாப்தத்தில் அரச செலவினத்தில் சராசரியாக 23 வீதம் சம்பளங்களுக்காகச் செலவிடப்பட்டுள்ளதுடன் சுகாதாரம், கல்வி மற்றும் உட்கட்டமைப்பு போன்ற முக்கிய துறைகளுக்கு வரையறுக்கப்பட்ட நிதியே எஞ்சியுள்ளமை அந்த ஆய்வு மூலம் வெளிப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் உயிரிழப்புக்கு முப்படையினர்தான் காரணம்!

## ஆளுநரிடம் எடுத்துரைத்தார் ஹக்கீம்



திருகோணமலை, டிசெ. 01

**“காரைதீவு மாவடிப்பள்ளி பாலத்தில் உழவியந்திரம் வெள்ளத்துக்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அரபுக் கல்லூரி மாணவர்கள் உட்பட எட்டுப் பேர் உயரிழந்த துயரச் சம்பவமானது பொலிஸ் மற்றும் முப்படையினரின் அவதானக் குறைவினாலேயே நிகழ்ந்தது”- இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் தொடர்பில் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகரவுடன் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு திருகோணமலையிலுள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, சீரற்ற காலநிலை காரணமாக கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்த பாதிப்புகள் தொடர்பிலும் அனர்த்த முகாமைத்துவம் மற்றும் நிவாரணப் பணிகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

இதேவேளை, மாவடிப்பள்ளி பாலத்தில் உழவியந்திரம் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் எட்டுப் பேர் உயரிழந்த துயரச் சம்பவமானது பொலிஸ் மற்றும் முப்படையினரின் அவதானக் குறைவினாலேயே நிகழ்ந்ததாக ஹக்கீம் சுட்டிக்காட்டினார்.

குறித்த பாலத்துக்கு மேலாக வெள்ளம் பெருக்கெடுத்த நிலையில் பாதையை மூடாமல் போக்குவரத்துக்கு அனுமதியளித்தமையானது பொறுப்பற்ற செயல்பாடாகும்.

உயிரிழந்தவர்களின் வீடுகளுக்கு தாம் சென்றபோது அவர்களின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்து விசனம் வெளியிட்டதாகவும் ஹக்கீம் குறிப்பிட்டார்.

எனவே, இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நிகழாதிருப்பதை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு துரிதமாக இழப்பீடு வழங்கப்பட வேண்டும் எனவும் ஹக்கீம் வேண்டுகோள் விடுத்தார்.

இந்தக் கோரிக்கைகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதாக ஆளுநர் உறுதியளித்தார்.

மேலும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான அவசர உதவிகள், நிவாரண நடவடிக்கைகள் மற்றும் அனர்த்த பாதிப்புகளை நிவர்த்தி செய்து இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட வேண்டும் எனவும் ஆளுநரிடம் ஹக்கீம் வலியுறுத்தினார். (எ)

# நேற்றும் ஒரு சடலம் மீட்பு

## பலி எண்ணிக்கை 8 ஆக அதிகரிப்பு

காரைதீவு, டிசெ. 01

அம்பாறை காரைதீவு மாவடிப்பள்ளி பகுதியில் உழவியந்திரம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போனவர்களில் இதுவரை 8 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன.

உழவியந்திரத்தில் வீடு திரும்பிக்கொண்டிருந்த மத்ரஸா மாணவர்கள் உள்ளிட்ட சிலர் வெள்ளத்தில் சிக்கி காணாமல் போகியிருந்த நிலையில் மீட்புப் படையினரின் தேடுதல் நடவடிக்கையின்போது 5 மாணவர்கள் காப்பாற்றப்பட்டனர்.

மீட்புப் படையினரின் தேடுதல் நடவடிக்கை தொடர்ந்து ஐந்தாவது நாளாக இடம்பெற்று வந்தது.

இதுவரை மொத்தமாக 08 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டு சம்மாந்துறை ஆதார மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

அதில் நிந்தவூர் காஷிபுல் உலூம் அரபுக் கல்லூரி மாணவர்களின் 06 சடலங்களும், சாரதி, மற்றுமொரு இளைஞனின் சடலங்களும் மீட்கப்பட்டன.

மீட்புப் பணியாளர்களால் வெள்ளத்தில் காணாமல் போனவர்களை தொடர்ந்து தேடும் நடவடிக்கை இடம்பெற்று வந்த நிலையில் நேற்றுச் சனிக்கிழமை காலை ஒரு சடலம் மீட்கப்பட்டது.

மத்ரஸா முடிந்து மாணவர்களும் உழவியந்திர சாரதி மற்றும் உதவியாளரும் பயணித்துக் கொண்டிருந்த போது உழவியந்திரம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு இந்த விபத்து இடம்பெற்றது. (எ)

# டெங்கு, எலிக்காய்ச்சல் நோய்கள் பரவும் அபாயம்

கொழும்பு, டிசெ. 01

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக எதிர்வரும் காலங்களில் டெங்கு மற்றும் எலிக்காய்ச்சல் போன்ற நோய்கள் பரவும் அபாயம் அதிகரிக்கலாம் என்று சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது.

வெள்ளம் வடிந்தோடிய பின்னர் டெங்கு பரவுவதை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் சமூக ஆரோக்கியம் தொடர்பான விசேட வைத்தியர் அனோஜா தீரசிங்க கூறினார்.

இதேவேளை, வயல்களில் பணிபுரிபவர்கள் மற்றும் வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் வாழும் மக்கள் எலிக்காய்ச்சலில் இருந்து தற்காத்துக் கொள்ள தேவையான சிகிச்சைகளை பெற்றுக் கொள்வது அவசியம் என்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார். (எ)

2,70,000 ரூபாய் பெறுமதியான

# குளிரூட்டியை இலஞ்சமாக பெற்ற பொலிஸ் பரிசோதகர் சிக்கினார்!

கொழும்பு, டிசெ. 01

நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பிரதான பொலிஸ் பரிசோதகர் ஒருவர் 2,70,000 ரூபாய் பெறுமதியான குளிரூட்டியை இலஞ்சமாக பெற்ற குற்றச்சாட்டின் பேரில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் நீர்கொழும்பு பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவில் பிரதான பொலிஸ் பரிசோதகராக கடமையாற்றுபவர் ஆவார்.

வாடகை அடிப்படையில் வழங்கப்பட்ட கார் ஒன்று தொடர்பான சர்ச்சைக்குரிய வழக்கு விசாரிக்கப்பட்டு நீதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்ட காரை, மீளப் பெற்றுக் கொடுப்பதற்கு இந்த பொலிஸ் பரிசோதகர் 2,70,000 ரூபாய் பெறுமதியான குளிரூட்டியை இலஞ்சமாக பெற்றுள்ளார்.

இது தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவுக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (எ)

# அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்கினால் ஊழலற்ற ஆட்சியை முன்னெடுக்கலாம்

## அஷ்ரப் தாஹிர் எம். பி. தெரிவிப்பு

நிந்தவூர், டிசெ. 01

“அரச அதிகாரிகள் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கி சிக்கனமான முறையில் செயல் திட்டங்களை முன்னெடுப்பதற்கு உதவி வழங்கினால் மாத்திரமே ஊழலற்ற ஆட்சியை முன்னெடுக்க முடியும்”- இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் தெரிவித்தார்.

சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட திடீர் அனர்த்த நிலைமைகள் குறித்து ஆராய்வதற்கான நிந்தவூர் பிரதேச அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நிந்தவூர் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

“நாட்டின் பொருளாதார மேம்பாடுகளை கருத்தில் கொண்டே இந்த அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் அமையும். கடந்த கால ஆட்சியாளர்கள் மீது மக்கள் கொண்ட வெறுப்பு காரணமாகவே மாற்றம் ஒன்றை வேண்டி இந்த அரசாங்கத்துக்கு அதிகமான வாக்குகளை மக்கள் வழங்கியிருக்கின்றார்கள்.

இந்த ஆட்சியில் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒற்றுமையுடன் செயல்படுவதை அறிய முடிகின்றது. அதே போன்று, அரச அதிகாரிகளும் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கி சிக்கனமான முறையில் செயல்திட்டங்களை முன்னெடுப்பதற்கு உதவி வழங்கினால் மாத்திரமே ஊழலற்ற ஆட்சியை முன்னெடுக்க முடியும்”- என்றார். (எ)

# ஒரு ஏக்கருக்கு ரூ. 40, 000 இழப்பீடு!

கொழும்பு, டிசெ. 01

மழை, வெள்ளத்தால் அழிவடைந்த பயிர்களுக்கு ஒரு ஏக்கருக்கு அதிகபட்சமாக 40, 000 ரூபாய் இழப்பீடு வழங்கப்படும் என்று விவசாய பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

“நெல், சோளம், உருளைக்கிழங்கு, சோயா, போஞ்சி, மிளகாய் மற்றும் வெங்காயம் உள்ளிட்ட பயிர்களுக்கு இழப்பீடு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, ஒரு ஏக்கருக்கு அதிகபட்சமாக 40, 000 ரூபாய்க்கு உட்பட்டு இழப்பீடு வழங்கப்படும்.



நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை குறைந்த பின்னர் பயிர்ச் சேதம் தொடர்பான விவரங்களை சேகரித்து நட்டஈடு வழங்கப்படும்.

அழிவடைந்த பயிர்களை மீளப் பயிரிடுவதற்காக விவசாயிகளுக்கு இலவச பயிர் விதைகள் வழங்கும் முறைமை தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட பயிர்களுக்கு மேலதிகமாக மலையகம் மற்றும் தாழ்நில மரக்கறி விவசாயிகள் மற்றும் பழ விவசாயிகளும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கும் [illegible] டும்”-என்றார். (எ)

# ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது

கொழும்பு, டிசெ. 01

ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அரசு கால்நடை மருத்துவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நோயால் பாதிக்கப்படாத பண்ணைகளில் உள்ள பன்றி இறைச்சியை பாதுகாப்பான முறையில் மனித பாவனைக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்தச் சங்கத்தின் தலைவர் சிசிர பியசிறி தெரிவித்தார்.

இதேவேளை, ஆபிரிக்க பன்றிக் காய்ச்சலால் பல பண்ணைகள் முற்றாக அழிந்துள்ளதாக உரிமையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே, தமது தொழில்களை மீளக் கட்டியெழுப்ப அரசாங்கம் உரிய நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
01.12.2024 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், கார்த்திகை 16

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# பொறுப்புமிக்க சிவில் சமூக தலையீடுகள் அவசியம்

தமிழர் அரசியல் தொடர்ந்தும் பலவீனமடைந்தே செல்கின்றது. அரசியல் கட்சிகளின் தலைவர்கள் என்போரின் பொறுப்பற்ற அணுகுமுறைகள் ஒரு காரணம் என்றால் - பொறுப்பற்ற சிவில் சமூகமும் அணுகுமுறைகளும் பிரதான காரணங்களாகும். இன்னொரு காரணம் ஊடகங்கள். அது தொடர்பில் தனியான தலைப்பு ஒன்று தேவையென்பதால் அதனை பின்னர் நோக்குவோம்.

போருக்கு பின்னரான கடந்த பதினைந்து வருடங்களில் அரசியல் கட்சிகளுக்கு சமதையாக சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் கருத்துருவாக்கிகள் என்போரும் தமிழ்த் தேசிய அரசியல் தொடர்பில் தங்களின் கரிசனைகளை வெளிப்படுத்தி வந்திருக்கின்றனர்.

அரசியல் கட்சிகளின் அணுகுமுறைகள் எவ்வாறு மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டுமோ - அதேயளவுக்கு சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் சிவில் சமூகங்களின் பெயரால் ஈடுபாடு காண்பித்த தனிநபர்களின் தலையீடுகளும் அவற்றின் விளைவுகளும் மறுபரிசீலனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும். சிவில் சமூகங்கள் காத்திரமான தலையீடுகளை செய்திருக்கின்றனவா? மக்களின் நலன்களை முன்வைத்து செயல்பட்டிருக்கின்றனவா?

அரசியல் கட்சிகள் பொறுப்பற்று செயல்படுகின்ற போது, அவற்றின் மீது அழுத்தங்களை பிரயோகித்து, அவற்றை சரியான திசைவழி நோக்கி வளைப்பதுதான் சிவில் சமூகங்களின் பணியாக இருக்க வேண்டும். ஆனால், கடந்த பதினைந்து வருடங்களில் இடம்பெற்ற சிவில் சமூக தலையீடுகள் அவ்வாறான அணுமுறையைக் கொண்டிருந்ததா என்னும் கேள்வியுண்டு. ஏனெனில், அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகளுக்கு ஏதோவொரு வகையில் முண்டு கொடுக்கும் காரியங்களிலேயே சிவில் சமூக அமைப்புக்களும், அதன் பெயரில் செயல்பட்ட தனிநபர்களும் செயல்பட்டிருக்கின்றனர்.

சிவில் சமூகங்களின பெயரில் கடந்த பதினைந்து வருடங்களில் இடம்பெற்ற எந்தவொரு விடயமும் தமிழர் அரசியலில் காத்திரமான அதிர்வுகளை ஏற்படுத்தவில்லை. ஐ.நாவிற்கு கடிதம் எழுதுதல் தொடங்கி அரசியல் கட்சிகளை ஒன்றிணைக்கும் சிவில் முயற்சிகள் எவையுமே ஆக்கபூர்மான விளைவுகளை ஏற்படுத்தவில்லை.

இறுதியில் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை முன்னெடுத்ததன் விளைவாகவும் ஆக்கபூர்வான விளைவுகள் எவையும் இடம்பெறவில்லை. தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் ஒப்பீட்டடிப்படையில் அதிகமான கட்சிகளும் சிவில் சமூகங்களும் ஆர்வமுள்ள தனிநபர்களும் ஒன்றிணைந்திருந்தனர் எனினும், சில சிவில் சமூகக் குழுக்களினதும் கருத்துருவாக்கிகள் என்போரும் சமூகப் பொறுப்பற்ற அணுகுமுறைகளால் அனைத்து முயற்சிகளும் விழலுக்கிறைத்த நீரானது.

தேசிய மக்கள் சக்தி வடக்கு, கிழக்கிலும் வெற்றிபெற்றிருப்பதைத் தொடர்ந்து தமிழர் அரசியல் புதிய நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கின்றது. இந்த நெருக்கடிகளை எதிர்கொள்ளும் நோக்கில் பொறுப்புமிக்க சிவில் சமூகத் தலையீடுகள் அவசியம். வெறுமனே தேசியவாத சுலோகங்களை உச்சரிக்கும் வழமையான வாய்ப்பாட்டு அணுகுமுறைகளை புறம்தள்ளி, யதார்த்தமான அணுகுமுறைகளை ஊக்குவிக்கும் சிவில் சமூகத் தலையீடுகளே இன்றையே தேவை. உள்ளூராட்சித் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தலில் தமிழ் தரப்புக்கள் வெற்றிபெறக் கூடிய யதார்த்தபூர்வமான அணுகுமுறைகளில் கட்சிகளை ஒன்றிணைப்பதற்கான சிவில் சமூக அழுத்தங்கள் அவசியம். அதே வேளை, அரசியலமைப்பில் இருக்கின்ற விடயங்களை உச்சபட்சமாகப் பயன்படுத்துவதற்கு ஏற்றவாறான அரசியல் உரையாடல்களும் அவசியம்.

# மருதங்கேணி பாலத்தின் ஊடான போக்குவரத்து சீர்செய்யப்பட்டது

யாழ்ப்பாணம், டிசெ. 01

உடையும் அபாய நிலையில் காணப்பட்ட வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பாலத்தின் இரு முனைகளிலும் மணல் மூடைகள் அடுக்கப்பட்டு பாலத்தின் ஊடான போக்குவரத்து சீர்செய்யப்பட்டது.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பாலத்தின் இரு பகுதிகளும் மண் அரிக்கப்பட்டதன் காரணமாக பாலம் உடையும் அபாய நிலையில் காணப்பட்டது.

இது தொடர்பில் விரைந்து செயற்பட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையினர், செம்பியன்பற்று இராணுவ இராணுவத்தினரின் உதவியுடன் மண் அரிப்பு ஏற்பட்ட இரு பகுதிகளிலும் மணல் மூடைகளை அடுக்கி பாலத்தின் ஊடான போக்குவரத்தை சீர்செய்துள்ளனர்.

இருப்பினும் கனரக வாகனங்கள் பயணிப்பதனை இயன்றவரை குறைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவிப்பு யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு தெரியப்படுத்தியிருப்பதாக மருதங்கேணி பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

அத்துடன் கொடுக்கிளாய் - இயக்கச்சி பாதையில் இருக்கும் அபாய வெளியேற்றப் பாதை, அதிகரித்த வெள்ளம் காரணமாக முழுமையாக சேதமடைந்திருப்பதாகவும் அவர் மேலும் கூறினார். (அ)

# யாழ். அரச அதிபருடன் சிறீதரன் எம்.பி. சந்திப்பு!



யாழ்ப்பாணம், டிசெ. 01

யாழ்ப்பாண மாவட்டபதில் அரசாங்க அதிபர் ம. பிர தீபனை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேற்று அரச அதிபர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இச்சந்திப்பில் தற்போதைய வெள்ள அனர்த்த நிலைமைகள், பாதிக்கப்பட்ட மக்களுக்காக எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. (அ-05)

# சங்கானை பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தால் நிவாரணம்

யாழ்ப்பாணம், டிசெ. 01

சங்கானை பனை, தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தினரால் நேற்று வெள்ள நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டன.

சங்கானை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளர்கள், அங்கத்தவர்கள் ஆகியோருக்கு இந்த நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டன.

சங்கானை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் வசிகரனின் மேற்பர்வையின் கீழ் இந்த நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டன. (அ-05)



# கொழும்பில் 765 கிலோ மஞ்சள் சிக்கியது


கொழும்பு, டிசெ. 01

கொழும்பு-15 இல் உள்ள தனியார் களஞ்சியசாலை ஒன்றில், நுகர்வோர் விவகார அதிகார சபை அதிகாரிகளால், 765 கிலோ கிராம் மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது.

அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலை தொடர்ந்து, சுமார் 40 இலட்சம் ரூபா பெறுமதியான மஞ்சள் கைப்பற்றப்பட்டது.

பற்றுச்சீட்டு இல்லாமல், எந்தத் தகவலும் குறிப்பிடப்படாமல், சந்தையில் விற்பனை செய்வதற்கு தயாராக இருந்த மஞ்சள், இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டதாக, விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)


## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்சாகமூட்டுமா உணர்வு உணரிகள்?

இராதாகிருஷ்ணன்



உள்ளத்து உணர்வுகள் பேச்சில் வெளிப்படுவதன் முன்பாக உடலில் புலப்படுவது உண்டு. பேச்சே இல்லாமல் உடல் வழியான புலப்பாட்டில் மூலமும் கருத்துகளைப் படம் வழியாகவும் உணர்த்த முடியும். இதன் அடிப்படையில், முகநூல், சுட்டுரை, கட்செவி அஞ்சல், படவரி (இன்ஸ்டாகிராம்), எண்ம தகவல் தொடர்புகள் போன்ற அதிகப் பயன்பாடுகளைக் கொண்ட சமூகவலைதளங்களில் தங்களது கருத்துகளை உணர்வுப் பூர்வமாகவும், சுருக்கமாகவும் தெரிவிக்க சிலர் உணர்வு உணரிகளைப் (எமோஜி) பயன்படுத்துகின்றனர்.

ஒரு படம் ஆயிரம் வார்த்தைகளைப் பேசும் என்பதைப் போல உள்ளத்து உணர்ச்சிகளின் செயல்பாட்டில் மனித மனத்தில் தோன்றும் முக்கிய உளப்பாடுகளை இந்த உணர்வு உணரிகள் எளிதில் விளக்கி விடுகின்றன. சொல்ல வந்ததை, அப்படியே கண்ணால் கண்டது போல், காதால் கேட்பது போல் உருவாக்கி அப்படியே கண் முன் நிறுத்துவதே இந்த உணர்வு உணரிகளின் நோக்கம். ஒன்றைப் பற்றி ஆராயாமல், கண்டவுடனேயே அதன் பொருள் எளிதில் நமக்கு விளங்கி விடுகிறது. இந்த உலகம் தோன்றி, மொழிகள் பிறப்பதற்கு முன், கண் ஜாடை, கை ஜாடை, சைகைள் மூலம் தன் உள்ளத்து உணர்ச்சிகளை உருவப்படம் (பிக்டோகிராம்) எனப்படும் ஆதி மொழியான சித்திர மொழிகளைத்தான் பயன்படுத்தி உணர்த்தி வந்துள்ளது மனித இனம்.

ஆதிமொழியான சித்திர மொழிகள் மீண்டும் புது எழிலுடன் 'உணர்வு உணரிகள்' (எமோஜி) என்னும் பெயரில் சமூக வலைதளங்களில் உள்ளத்தைக் கொள்ளைக் கொள்ளும் வகையில் உலா வருகின்றன. அதற்கு காரணம், மின்னணு அறிவியல் தொழில்நுட்பத்தில் உலகம் கட்டுண்டு கிடப்பது தான். இன்றைய இளைய தலைமுறையினர் இதன் மூலம் தங்களது உள்ளத்து உணர்ச்சிகளை சமூக வலைதளங்களில் பயன்படுத்தி வார்த்தை பயன்பாடுகளைத் தவிர்த்து விடுகின்றனர். இந்த உணர்வு உணரிகள், நம் உணர்வுகளை உருமாற்றம் செய்யாமல் அப்படியே காட்டுவதால் உலகம் முழுவதுமுள்ள பல மொழிகளில் குறுஞ்செய்தி அனுப்பும் மக்களுக்கான பொது மொழியாகி விட்டன.

இந்த நவீன உணர்வு உணரிகளின் பிறப்பிடம் ஜப்பான். ஜப்பான் மொழியில் 'எமோஜி' என்றால் படவிளக்கம் என்று பொருள். உணர்ச்சிகளுடன் கூடிய முகபாவனைகளைக் கொண்டுள்ள இந்த உணர்வு உணரிகள் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் கவர்ந்து வருகின்றன.

முன்பெல்லாம் பள்ளியில் படிக்கும் மாணவர்களின் கல்வித் திறனை மதிப்பிடும் வகையில் அவர்கள் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில், வகுப்பிலுள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கைக்கு ஏற்ப எண்ணால் (ரேங்க் சிஸ்டம்) தரவரிசை நிர்ணயிக்கப்பட்டு முன்னேற்ற அறிக்கை அளிக்கப்பட்டது. இது மாணவர்களிடையே தாழ்வு மனப்பான்மையையும், ஏற்றத்தாழ்வுகளையும் உருவாக்கும் என்பதால், மாணவர்கள் பெறும் மதிப்பெண்களை வரம்புவாரியாக, குழுக்களாகப் பிரித்து தர அமைப்பின் மூலம் (கிரோட் சிஸ்டம்) முன்னேற்ற அறிக்கை வழங்கப்பட்டது. இப்போது இதுவும் கடந்து, ஆரம்பக் கல்வியில் மாணவர்களின் கல்வித் திறனை மதிப்பிடுவதற்கு, மாணவர்களுக்கு வழங்கப்படும் முன்னேற்ற அறிக்கையில் சமூகவலைதளங்களில் பயன்படுத்தப்படும் உணர்வு உணரிகள் மற்றும் நட்சத்திரங்கள் பயன்பாட்டுக்கு வந்துள்ளன.

பல நாடுகளில் சில பள்ளிகள், மழலையர் வகுப்பு முதல் இரண்டாம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு உணர்வு உணரிகள் மற்றும் நட்சத்திரங்கள் வழங்கும் முறையை அறிமுகப்படுத்தியுள்ளன. இந்தப் புதியத் திட்டம், மாணவர்களின் கற்றல் திறனை எழுத்துத் தேர்வுகள் மூலம் மதிப்பிடாமல், அவர்களின் செயல்திறன்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்ய வகை செய்கின்றன.

'கைதட்டல், ஆசீர்வதித்தல், நட்சத்திரம், வலது பெருவிரலை உயர்த்திக் காட்டல், நகைமுகம், சிவப்பு அடிக்கோடு 100 போன்ற உணர்வு உணரிகள் மூலம் மாணவர்களின் செயல்திறன்கள் நிர்ணயிக்கப்பட்டால் அவர்கள் பெரும் உற்சாகம் அடைவார்கள். இத்தகைய காட்சிக் குறிப்புகள் மாணவர்களிடையே கற்றல் திறனில் வலுவான தாக்கத்தை ஏற்படுத்தும். இந்தப் புதிய மதிப்பீட்டு முறை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடையே நேர்மறையான கருத்துகளைப் பெற்றுள்ளன. இது மாணவர்களின் சமூக அக்கறையுடன் கூடிய கல்வித் திறனை மேலும் வளர்க்கும். அதே சமயத்தில், கற்றல் மீதான அவர்களின் மன அழுத்தத்தைத் தணித்து, ஊக்கத்துடன் கூடிய செயல் திறனை அதிகரிக்கும். இது தான் இந்த புதிய முறையின் சிறப்பம்சம்' என்கிறார் பள்ளி ஆசிரியர் ஒருவர்.

'இம்முறை மாணவர்களின் திறமைகளை மேலும் வளர்க்கும். அதாவது, இது மாணவர்களின் தாழ்வு மனப்பான்மையை அகற்றி, அவர்களின் மற்றவர்களுடனான தொடர்புத் திறன் அதிகரிப்பதோடு, செயல்பாடுகள் மூலம் கற்றல், ஒட்டு மொத்த ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு போன்ற திறன்களை வளர்ப்பதில் தனி கவனம் செலுத்தும். சீருடையில் நட்சத்திர குறியீட்டை அணிந்து பள்ளிக்குச் செல்வது என்பது ஒரு மாணவருக்கு நிச்சயம் பெருமையாக இருக்கும். எனினும், இதுவரை அனைத்து பள்ளிகளிலும் இந்த முறையை அமல்படுத்த அறிவுறுத்தப்படவில்லை' என்பதும் குறிபிடப்பட வேண்டியது.

ஆரம்ப கல்விப் பயிலும் மாணவர்களுக்கு, இம்மாதிரியான உணர்வு உணரிகள் அவர்களின் கற்றல் திறனுக்கு ஊக்கம் அளிக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால், இன்றைய மாணவர்களுக்கு அடிப்படைத் தேவை, ஒழுக்கத்துடன் கூடிய கல்வி தான். அவற்றை பெற்றோர்களும், ஆசிரியரும் போதிப்பதன் மூலம் தான் மாணவர்களின் எதிர்காலமே அமைந்துள்ளது. வளரும் இளந்தலைமுறையினருக்கு படிப்புடன் கூடிய, நன்னெறி வகுப்புகளை, படங்கள் மூலம் விளக்கி தீயப்பழக்கங்களின் நிழல் அவர்கள் மேல் படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது இன்றைய கல்வியாளர்களின் கடமை.

## இந்தவார ராசிபலன் 01.12.2024 - 07.12.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - கார்த்திகை 16
நல்ல நேரம்: 09.14 - 10.44 ராகு காலம் : 04.44 - 06.11 திதி : அமாவாசை

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் வாழ்க்கையில் எல்லாவித முன்னேற்றங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவர். சிலருக்கு தங்கள் மனதிற்குப் பிடித்த படி அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளிலும் எப்பாடுபட்டாவது வெற்றி அடைவீர்கள். சிலருக்கு வீண் அலைச்சல்கள் ஏற்படும். பணிபுரிபவர்களுக்கு மேலதிகாரிகளின் அனுகூலத்தால் உயர் பதவிகள் கிடைக்கும். அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு புதிய பதவிகள் தேடிவரும். அந்தஸ் தும் உயரும். விவசாயிகளுக்கு எதிர்பார்த்த ஆதாயம் கிட்டும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் நீண்ட நாட்களுக்குப் பிறகு உங்கள் இல்லத்திற்கு விஜயம் செய்யும் விருந்தினரோடு இனிமையாக பொழுதைக் கழிப்பது மகிழ்ச்சி தரும். தாயின் அன்பும், அரவணைப்பும் கவலைகளை மறக்கச் செய்யும். புதிய தொழில் விரிவாக்க முயற்சிகளால், பொருளாதார நிலை உயரும். தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். எதிரிகளின் பணமும் வந்து சேரும். கல்வியில் வெற்றி பெறக் கவனமாகப் படிக்க வேண்டும். வாக்கு வன்மையால் மேடைப் பேச்சாளர்கள் நல்ல முன்னேற்றம் காண்பர்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் பெற்றோர்களால் நன்மை ஏற்படும். குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சி நிலவும். சிலருக்கு குழந்தைப் பிறப்புக்கான வாய்ப்பு உருவாகும். உல்லாசப் பயணங்களால் சந்தோஷம் நிலவும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். மேடைப் பேச்சாளர்கள் தங்கள் பேச்சின் மூலம் வருமானம் ஈட்டுவர். அரசாங்கத் துறைகள் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும். பிரிந்த உறவுகள் சேரும். வாழ்க்கையில் முன்னேற்றங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கை தேவை.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். விருந்தினர் வருகையால் மனம் மகிழ்ச்சி ஏற்படும். அவர்களுடன் சினிமா போன்ற கேளிக்கைகளில் ஈடுபட்டு இன்பம் துய்ப்பீர்கள். வாக்குவன்மை ஓங்கும். வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். புதிய நண்பர்களால் நன்மை ஏற்படும். சிலருக்கு புதிய தொழில் முயற்சிகளில் ஈடுபடாது, இருக்கும் நிலையில் தொடர்ந்தால் ஏற்றம் ஏற்படும். பக்தி சொற்பொழிவுகளைக் கேட்பதால் ஞானம் பெருகும். இடைவிடாத வேலை காரணமாக நேரத்துக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். தொலைதூர செய்திகள் வர இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்லதே நடக்கும். வியாபாரிகளுக்கு புதிய பொருட்களின் வரவால், பணவரத்து அதிகரிக்கும். நல்லோர் சேர்க்கையால் மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. உங்கள் உடலில் சுறுசுறுப்பு குறைந்து, சோம்பல் அதிகரிக்கும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் சுப காரியங்களுக்கு வீடே விழாக் கோலம் பூணும். திடீரென ஏற்படும். பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். இசை ஆர்வத்தால் சங்கீத சபா களுக்குச் சென்று இசை கேட்டு மகிழ்வார்கள். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். நீங்கள் எதிர்பாராத விதத்தில் புதிய இடத்திற்கு பணி மாற்றங்கள் ஏற்படலாம். சிலருக்கு பிரிவும், பகையும் ஏற்படலாம். வாடிக்கையாளரிடம் நட்புப் பாராட்டும் வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் இனிய பயணங்களால் மகிழ்ச்சி அதிகரிக்கும். மனைவி, மக்களின் உடல் நிலையில் மருத்துவச் செலவுகள் ஏற்படலாம். குடும்பத்திற்காக உங்கள் சந்தோஷங்களை தியாகம் செய்வீர்கள். குடும்பத்தினரிடையே வீண் மனஸ்தாபங்கள் தவிர்த்தால் வீட்டில் அமைதி நிலவும். பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும். புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். திடீர்ப் பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் பெண்களால் மன மகிழ்ச்சி ஏற்படும். வீட்டில் சுப காரியங்கள் நடக்கும் போது நெருங்கிய உறவுகளின் ஒத்துழைப்பால் நிகழ்ச்சி சிறப்பாக அமையும். நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொண்டால் மன அமைதி கிடைக்கும். பொருளாதார நிலையைப் பொறுத்தவரை சிரமமான காலம். அதன் காரணமாக சேமிப்புக்களில் இருக்கும் பணத்தில் கை வைக்க வேண்டிய நிலை ஏற்படும். வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் போட்டித் தேர்வுகளில் எதிர்பார்த்த வெற்றி கிட்டும். எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும். உறவுகளை அனுசரித்து சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். சிலருக்கு உழைப்பு அதிகமாகி களைப்பும், சோர்வும் ஏற்படும். கல்வியில் குழந்தைகளின் தேர்ச்சி பெற்றவர்களை பெருமை கொள்ளச் செய்யும். உயர் அதிகாரிகளின் ஆலோசனைகளைக் கேட்டு நடந்தால் எளிதில் பணி உயர்வு கிடைக்கும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் உங்களுக்கு அனைத்து சுக சௌகரியங்கள் அதிகரிக்கும். சுபசெய்திகளால் மனம் மகிழும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தன லாபம் அதிகரிக்கும். வீட்டில் அமைதியும், நிம்மதியும் நிலவும். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். அரசு ஊழியர்களுக்குக் கட்டளைகளை இடும்படியான அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். கல்வியைப் பொறுத்தவரை பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் பல வழிகளில் வருமானம் கூடுதலாக வரும். பூமி அல்லது வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படாது இருக்க அனுசரித்துச் செல்வது நல்லது மனதில் நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல் ஆரோக்கியம் ஏற்படும். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தொழிலில் பணியாளர்கள் ஒத்துழைப்புக் குறைவால், உற்பத்திகள் குறையும் வாய்ப்பு ஏற்படலாம். கடன் கொடுத்தவர்கள் கண்டிப்புடன் நடந்து கொள்வர்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். எதிர்பார்த்த இனங்களில் இருந்து தனவரவு ஏற்படும். குடும்ப உறவுகளின் முழுமையான ஒத்துழைப்பு மூலம் குடும்ப முன்னேற்றம் சாத்தியப்படும். மனங்கவர்ந்த அன்புமிக்க பெண்களால் ஆனந்தம் பெருகும். எச்சரிக்கையுடன் செயல்பட்டு எதிரிகளை முறியடிப்பீர்கள். அரசுப் பதவியில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் தயவால் பயன் பெறுவர். நெருங்கிய நண்பர்களின் உதவியால் கூட்டாளிகளிடையே ஏற்பட இருந்த குழப்பங்கள் சரியாகும். சிறு தொழில் புரிபவர்களுக்கு வங்கிக் கடன் உதவிகள் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர்காலம்




வீரகத்தி தனபாலசிங்கம்

இலங்கை தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர்காலம் என்ன? அண்மைய பாராளுமன்ற தேர்தலை தொடர்ந்து எழுகின்ற இந்த கேள்வியை வெறுமனே தமிழ்க் கட்சிகளின் எதிர்கால தேர்தல் வாய்ப்புக்களுடன் இணைத்து நோக்கக் கூடாது. இது தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகள் நிறைவேறக்கூடிய வாய்ப்புக்கள் பற்றிய எதிர்பார்ப்புகளுடனும் ஏக்கங்களுடனும் சம்பந்தப்பட்ட கேள்வியாகும்.

உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னரான கடந்த பதினைந்து வருடங்களுக்கும் அதிகமான காலப்பகுதியில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்து வந்த தமிழ் தேசியவாத அரசியல் கட்சிகள் இந்த தடவை பாராளுமன்ற தேர்தலில் பெரிய தோல்வியைச் சந்தித்தன. தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்கான கடந்த காலப் போராட்டங்கள் பயன்தராமல் போனதற்கான காரணங்கள் குறித்து சுயபரிசோதனையைச் செய்துபார்ப்பதில் ஒருபோதும் மானசீகமான அக்கறைகாட்டாத இந்த கட்சிகள் இந்த வரலாற்று தோல்விக்கு பிறகாவது தங்களது இதுவரையான அரசியல் பாதையை திரும்பிப்பார்த்து திருந்திக்கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பது கூட கஷ்டமானதாகவே தெரிகிறது.

தமிழ் தேசியவாதக் கட்சிகள் பிளவுபட்டு பல்வேறு பிரிவுகளாக தேர்தலில் போட்டியிட்டதன் விளைவாக வடக்கு, கிழக்கு தமிழர்களின் பாராளுமன்ற பிரதிநிதித் துவம் இந்த தடவை முன்னரை விடவும் மோசமாக பல வீனப்பட்டிருக்கிறது. முன்கூட்டியே விடுக்கப்பட்ட எச்சரிக்கைகளை தமிழ் அரசியல்வாதிகள் பொருட்படுத்தவில்லை.



‘எல்லாவற்றுக்கும் மேலாக, இன்றைய தமிழ் அரசியல்வாதிகள் கடந்த பதினைந்து வருடகாலமாக தாங்கள் கடைப்பிடித்துவந்த கொள்கைகளும் அணுகுமுறைகளும் இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதை நோக்கிய திசையில் ஒரு அங்குலமேனும் முன்னோக்கிய நகர்வுக்கு உதவியிருக்கிறதா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.’

கடந்த பாராளுமன்றத்தில் ஆறு ஆசனங்களை கொண்டிருந்த இலங்கை தமிழரசு கட்சி இந்த தடவை எட்டு ஆசனங்களை பெற்றதை அதன் மக்கள் செல்வாக்கில் ஏற்பட்ட ஒரு அதிகரிப்பாக நினைத்து திருப்திப்பட முடி யாது. இலங்கையின் தேர்தல் வரலாற்றில் சிங்களவர்க ளின் ஆதிக்கத்திலான தேசியக் கட்சி ஒன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஐந்து தேர்தல் மாவட்டங்களி லும் முதற் தடவையாக கூடுதலான ஆசனங்களை கைப்பற்றியிருப்பதன் பின்னணியிலேயே தமிழரசு கட்சி அதன் தேர்தல் செயற்பாட்டை நோக்க வேண்டும்.

தேசிய இனப்பிரச்சினை உட்பட தமிழ் மக்களை அழுத்தும் முக்கியமான பிரச்சினைகளுக்கு உருப்படியான தீர்வு குறித்து எந்த வாக்குறுதியையும் வழங்காமலேயே ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி தமிழ்ப் பகுதிகளில் பெரு வெற்றி பெற்றிருக்கிறது.

இந்த வெற்றி குறித்து யானை பார்த்த குருடர்களைப் போன்று அரசியல்வாதிகளும் அவதானிகளும் பலவிதமான கருத்துக்களை கூறுகிறார்கள். தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் தங்களுக்கு தமிழ் மக்கள் வழங்கிய ஆதரவை தமிழ் இனவாத அரசியலின் நிராகரிப்பாக வியாக்கியானம் செய்கிறார்கள். தென்னிலங்கையில் சிங்கள பௌத்த கடும்போக்கு தேசியவாதிகள் என்று அடையாளம் காணப்பட்ட அரசியல்வாதிகள் இந்த தடவை தேர்தலில் கண்ட தோல்வியை சிங்கள இனவாதத்தின் தோல்வியாக காண்பிக்கவும் அவர்கள் முயற்சிக்கிறார்கள்.

அதேவேளை, சில தமிழ் அரசியல்வாதிகள் வடக்கு, கிழக்கில் தமிழ்க்கட்சிகள் எல்லாவற்றுக்கும் கிடைத்த வாக்குகளை கூட்டிப்பார்த்து அதை தேசிய மக்கள் சக்தி பெற்ற வாக்குகளுடன் ஒப்பிட்டு தமிழ்த் தேசிய வாதத்தை தமிழ் மக்கள் நிராகரிக்கவில்லை என்று ஒரு வாதத்தை முன்வைக்கிறார்கள். தேர்தல் என்று வரும்போது கிடைக்கின்ற ஆசனங்களே முக்கியமானவை. தேர்தலில் தோல்வியைச் சந்தித்த கட்சிகளின் வாக்குகளின் மொத்த தொகையையும் சேர்த்து சான்றாகக்காட்டி தமிழ்த் தேசியவாத உணர்வு மக்கள் மத்தியில் துடிப்புடன் இருக்கிறது என்று நிறுவ முற்படுவதில் அர்த்தமில்லை.

தென்னிலங்கையில் குறிப்பிட்ட சில அரசியல்வாதிகளின் தேர்தல் தோல்வியை எவ்வாறு சிங்கள பௌத்த தேசியவாதத்தின் தோல்வி என்று கூறமுடியாதோ அதே போன்றே வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியவாத கட்சிகளுக்கு கிடைத்த தோல்வியையும் தமிழ்த் தேசியவாதத்தின் தோல்வி என்று கூறமுடியாது.

இலங்கையில் இனவாத அரசியலும் மதத் தீவிரவாதமும் மீண்டும் தலையெடுக்க ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்று புதிய பாராளுமன்றத்தில் தனது கொள்கை விளக்கவுரையில் சூளுரைத்திருக்கும் ஜனாதிபதி திசாநாயக்க அதே இனவாதமும் மதவாதமும் தோற்றுவித்த நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காணாமல் ஒருபோதும் அந்த இலட்சியத்தை அவரால் அடைய முடியாது.

தேசிய இனப்பிரச்சினையைப் பொறுத்தவரை தேசிய மக்கள் சக்தியின் நிலைப்பாடுகளை ஏற்றுக்கொண்டுதான் தமிழ் மக்கள் அவர்களுக்கு பெருமளவில் வாக்களித்தார்கள் என்று ஒருபோதும் கூறமுடியாது. அதே போன்றே தமிழ்க்கட்சிகள் கண்ட தோல்வியை தமிழ் மக்கள் தங்களது நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகள் தொடர்பிலான நீண்டகால அடிப்படைக் கோரிக்கைகளை அலட்சியம் செய்துவிட்டு தேசிய அரசியல் நீரோட்டத்தில் இணைவதற்கு அவர்கள் தயாராகிவிட்டதன் அறிகுறியாகவும் வியாக்கியானம் செய்யமுடியாது.

வடக்கே பருத்தித்துறை தொடக்கம் தெற்கே தேவேந்திரமுனை வரை தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் வாக்களித்திருக்கும் முறையை நோக்கும் போது சிங்கள மக்களைப் போன்றே தமிழ் மக்களும் பாரம்பரியமான அரசியல் கட்சிகளை நிராகரிப்பற்கு சந்தர்ப்பம் ஒன்றுக்காக காத்திருந்தார்கள் என்பதை புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

தங்களை இதுகாலவரை பிரதிநிதித்துவப்படுத்திவந்த தமிழ் தேசியவாத கட்சிகளின் செயற்பாடுகள் மீதான வெறுப்பின் காரணமாகவே தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்தியின் பக்கம் திரும்ப நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பிறகு தங்களது உரிமைப் போராட்டத்தை சமகால உள்நாட்டு மற்றும் சர்வதேச நிலைவரங்களுக்கு பொருத்தமான முறையில் நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறைகளுடன் அடுத்த கட்டத்துக்கு நகர்த்த முடியாமல் இருந்த தமிழ்க் கட்சிகளுக்கு மாற்றாக உருப்படியான அரசியல் இயக்கம் ஒன்று தங்கள் மத்தியில் இல்லாத நிலையில் தமிழ் மக்களுக்கு வேறு வழி இருக்கவில்லை.

அதேவேளை, நிலைவரங்கள் வேண்டி நிற்பதற்கு ஏற்ற முறையில் சிந்தித்துச் செயற்படாமல் வெறுமனே உணர்ச்சியமான தமிழ்த் தேசியவாதச் சுலோகங்களை வாய்ப்பாடு போன்று உச்சரித்துக்கொண்டும் அவ்வப்போது நினைவேந்தல்களை செய்துகொண்டும் திரியும் தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களின் பல்வேறுபட்ட வாழ்வாதாரப் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தாமல் இருந்ததும் அவர்கள் மீதான வெறுப்புக்கு இன்னொரு காரணம்.

இரண்டரை வருடங்களுக்கு முன்னர் முன்னென்றும் இல்லாத வகையிலான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தென்னிலங்கையில் மக்கள் கிளர்ச்சி மூண்டபோது தமிழ் மக்களுக்கு அது ஒரு பிரச்சினை அல்ல என்று கூறிய தமிழ் அரசியல்வாதிகளும் இருக்கிறார்கள். புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் உள்ள தனவந்தர்களை இலங்கையில் சுதந்திரமாக முதலீடு செய்ய அனுமதித்தால் பொருளாதார பிரச்சினைக்கு இடமிருக்காது என்று பாராளுமன்றத்தில் அரசியல்வாதிகள் பேசியதையும் காணக்கூடியதாக இருந்தது.

தாங்கள் இதுவரை காலமும் பிரதிநிதித்துவம் செய்த மக்கள் மத்தியில் அண்மைக்காலமாக ஏற்பட்டுவந்த சிந்தனை மாற்றத்தை தமிழ் அரசியல்வாதிகளினால் புரிந்துகொள்ள முடியவில்லை. பாராளுமன்ற தேர்தலில் தாங்கள் தேசிய மக்கள் சக்திக்கே வாக்களிக்கப் போவதாக தமிழ் அரசியல்வாதிகளிடம் நேரடியாகவே வடக்கில் பல இடங்களில் மக்கள் கூறினார்கள். ஆனால், வழமை போன்று தமிழ்க் கட்சிகளுக்கே அவர்கள் பெருமளவில் வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கையில் அரசியல்வாதிகள் மெத்தனமாக இருந்து விட்டார்கள்.

ஆரம்பக்கட்டப் பிரசாரங்களில் தமிழ்க்கட்சிகள் தங்களுக்கு நேரவிருக்கின்ற ஆபத்தை புரிந்து கொள்ளவில்லை. இறுதிக்கட்டங்களிலேயே அவை நிலைவரத்தை உணர்ந்து தேசிய மக்கள் சக்தி மீது கடுமையான தாக்குதல்களை தொடுத்தன. அதற்கு முதல் யாழ்ப்பாணத்தில் மற்றைய கட்சிகள் மாத்திரமல்ல இலங்கை தமிழரசு கட்சிக்குள் இருந்தவர்களும் ‘தமிழ்த் தேசியவாதத்தைக் காப்பாற்றுவதற்காக” முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனை தோற்கடிப்பதிலேயே தீவிர அக்கறை காட்டினார்கள்.

தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவ கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) கடந்த காலத்தில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு எதிராக கடைப்பிடித்த கொள்கைகளையும் முன்னெடுத்த செயற்பாடுகளையும் தமிழ் அரசியல்வாதிகள் பிரசாரங்களின் போது திரும்பத்திரும்ப சுட்டிக்காட்டிய போதிலும் கூட, மக்களை தங்கள் பக்கம் பெருமளவில் அவர்களால் திருப்பமுடியாமற் போய்விட்டது.

தாங்கள் பல்வேறு அணிகளாகப் பிரிந்து நின்று தேர்தலில் போட்டியிட்டதன் காரணத்தினால் மாத்திரமே தமிழ் மக்கள் தங்கள் மீது ஆத்திரமடைந்து தேசிய மக்கள் சக்தியை ஆதரித்தார்கள் என்று தமிழ் அரசியல்வாதிகள் நினைக்கிறார்கள் போன்று தெரிகிறது. கடந்த சில நாட்களாக அவர்கள் வெளியிட்டு வரும் கருத்துக்களை நோக்கும்போது மீண்டும் ஐக்கியப்பட்டு செயற்பட முன்வந்தால் மக்கள் முன்னரைப் போன்று தங்களுக்கு அமோக ஆதரவை தருவார்கள் என்று அவர்கள் நம்புகிறார்கள் போலும்.

பத்து வருடங்களுக்கு முன்னர் தமிழ்ச் சிவில் சமூக அமைப்புக்களும் அரசியல் கட்சிகளும் சேர்ந்து அமைத்த தமிழ் மக்கள் பேரவை முன்வைத்த அரசியல் தீர்வு யோசனைகளின் அடிப்படையில் மற்றைய தமிழ்க்கட்சிகளுடன் இணைந்து செயற்படுவதற்கு தயாராக இருப்பதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சில தினங்களுக்கு முன்னர் அறிவித்தார். ஆனால், தமிழ்க் கட்சிகளிடமிருந்தது இதுவரையில் பதில் வரவில்லை.

அதேபோன்றே, தமிழரசு கட்சியின் பாராளுமன்ற குழுவின் தலைவரான சிவஞானம் சிறீதரனும் மீண்டும் ஐக்கியப்பட்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பாக செயற்படுவதற்கு தயாராக இருப்பதாக அறிவித்தார். அதற்கும் பதில் வரவில்லை. வேறு அரசியல்வாதிகளும் மீண்டும் ஐக்கியப்பட வேண்டியதன் அவசியம் குறித்து பேசியிருக்கிறார்கள்.

உள்நாட்டுப்போரின் முடிவுக்கு பின்னரான காலப்பகுதியில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பலம்பொருந்திய அரசியல் இயக்கமாக தமிழ் தேசிய கூட்டமைப்பை கட்டியெழுப்புவதற்கு இருந்த வாய்ப்பை தவறவிட்டதன் மூலம் தமிழ் அரசியல் சமுதாயத்தின் இன்றைய சீரழிவுக்கு பொறுப்பான அதே தலைவர்கள் மீண்டும் ஒன்றுபடுவதற்கு முன்வந்தால் கூட தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்புவது சாத்தியமாகுமோ தெரியவில்லை.

தேர்தல் தோல்விக்கு பிறகு கட்சிகளை ஒன்றிணைப்பதற்கு மேற்கொள்ளப்படக்கூடிய எந்த முயற்சியையும் தமிழ் மக்கள் நிச்சயமாக சந்தேகத்துடனேயே நோக்குவார்கள். மீண்டும் ஐக்கியத்தில் நாட்டம் காட்டுவதற்கு மக்கள் மத்தியில் எத்தகைய விளக்கத்தை தமிழ் அரசியல்வாதிகள் முன்வைக்கப் போகிறார்கள்? தமிழ்க்கட்சிகள் மத்தியில் ஏற்பட்ட பிளவுகளுக்கு கொள்கை வேறுபாடுகளை விடவும் தேர்தலில் போட்டியிடுவதற்கான வியூகங்களே பிரதான காரணமாக இருந்தன.

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளும் தேசிய மக்கள் சக்தியிடம் சென்றுவிடுமா?



யதீந்திரா

ஒவ்வோர்அரசியல் அனுபவங்க ளிலிருந்தும் எவ்வாறு கற்றுக் கொள்வது என்று சிந்திப்பதுதான் புத்திசாலித்தனமானது - ஆனால் தமிழர் அரசியல் பரப்பில் நடப்பதோ வேறு. தங்களின் தோல்விக்கான காரணங்களை மற்றவர்கள் மீது போட்டுவிட்டு எப்படி தப்பியோடலாம் என்று சிந்திப்பவர்களே அதிகம். கடந்த பதினைந்து வருடங்களில் இதுதான் நடந்தது. இனியும் அதுதான் நடக்கப் போகின்றது என்றால் தமிழர் அரசியல் தொடர்பில் பேசுவதும் கூட, பயனற்ற ஒன்றாகலாம். கடந்த பதினைந்து வருடங்களில் தமிழ்த் தேசியம் என்று வரையறுக்கப்பட்ட அரசியல் நகர்வுகளால் எந்தவொரு முன்னேற்றத்தையும் நிரூபிக்க முடியவில்லை. ஒருவரை விடவும் மற்றவர் சிறந்தவர் - எங்கள் கொள்கைதான் சிறந்தது - அவர்களோ கைக்கூலிகள், நாங்களோ புனிதர்கள், இப்படித்தான் கடந்த பதினைந்து வருடங்கள் நம்மை கடந்து சென்றிருக்கின்றது.

இறுதியில் மக்களோ தமிழ் கட்சிகள் அனைவரையும் ஒரு தராசில்தான் நிறுத்துப் பார்த்திருக்கின்றனர். இதன் காரணமாகவே, கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் தேசிய மக்கள் சக்தி வெற்றிபெற்றிருக்கின்றது. இப்போதுள்ள கேள்வி, அவர்களது வெற்றியின் அடுத்த கட்டம் எவ்வாறு அமையப் போகின்றது? ஒரு வேளை அவர்கள் தொடர்ந்தும் வடக்கு கிழக்கில் வெற்றி பெறுவார்களாயின் தமிழ்த் தேசியம் என்னும் “வகைப்படுத்தல்” அரசியலுக்கு என்ன நிகழும்? தமிழ்த் தேசிய அரசியல் புதிய சூழலுக்கு ஏற்றவாறு மறுவரைபு செய்யப்பட வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு - எனவே சில கருத்துருவாக்கிகள் வாய்ப்பாடாக பயன்படுத்தி வரும் தமிழ்த் தேசியம் தொடர்பில் இந்தக் கட்டுரை பேசவில்லை, அதே போன்று சிலர் உச்சரிக்கும் வாய்ப்பாடான “தேசமாக திரள்தல்” என்பது பற்றியும் இந்தக் கட்டுரை விவாதிக்கவில்லை. ஏனெனில் இவ்வாறான உரையாடல்கள் காலாவதியாகிவிட்டது. நடைமுறையிலுள்ள சவால்களை எவ்வாறு எதிர்கொள்வது என்பதற்காக சிந்தனைகளை கிளறிவிடுவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

ஏனெனில் நடைமுறையிலுள்ள சவால்களை எதிர்கொள்ள முடியாமல் போகும் சந்தர்ப்பங்களில், தேசியம் பற்றி கதையளப்பதானது, சிறுபிள்ளைகள் “கள்ளன் பொலிஸ்”ஆட்டம் விளையாடுவது போன்றதாகவே அமையும். சிறுபிள்ளைகள் கற்பனையில் தங்களை பொலிசாகவும் கள்ளனாகவும் கற்பனை செய்து கொண்டு விளையாடுவர்கள். கற்பனைதான் அந்த விளையாட்டின் அடிப்படையாக இருக்கும். தேசியம், தேசமாகத் திரள்தல் என்பதெல்லாம் வெறும் கற்பனையிலிருந்து உருவாகக் கூடாது. அதற்கான அடித்தளம் நடைமுறையிலிருந்து உருவாக வேண்டும்.

ஒரு முதிர்ச்சியுள்ள அரசியல் அணுகுமுறை என்பது எப்போதும் தங்களுக்கு முன்னாலுள்ள உடனடி சவால்களை எதிர்கொள்வதிலிருந்தே ஆரம்பிக்கும். நிகழ்காலத்தை கையாள முடியாமல் போகும் போது, நேற்று பற்றிய அனுபவங்களும் பெறுமதியற்றதாகின்றது அதே வேளை, எதிர்காலம் பற்றி நம்பிக்கையையும் இருள் சூழ்ந்து விடுகின்றது. எனவே அரசியலின் அடிப்படை எப்போதும் நிகழ்காலம்தான். எந்த சமூகம் கடந்தகாலத்தை படித்து, நிகழ்காலத்தை சிறப்பாக கையாளுகின்றதோ, அந்தச் சமூகமே வரலாற்றில் முன்னோக்கி நகர்கின்றது. இயலாத சமூகங்கள் கடந்தகாலத்தை எண்ணி தனக்குத்தானே புளகாங்கிதம் கொண்டு, தேங்கிப் போகின்றது. இறுதியில் அதன் தனித்துவத்தை தொலைக்கின்றது.

அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் உள்ளூராட்சித் தேர்தல்கள் இடம்பெறவுள்ளன. அதனைத் தொடர்ந்து மாகாண சபைத் தேர்தல் இடம்பெறும். தற்போதுள்ள நிலையில் யார் முன்னிலை வகிப்பார்கள் என்னும் கேள்விக்கான பதில் மிகவும் இலகுவானது. ஆனால் நாம் அறிய வேண்டிய பதிலோ வேறு - வடக்கு கிழக்கில் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளும் தேசிய மக்கள் சக்தியின் வசமாகிவிடுமா?



வடக்கு மாகாணத்தில் தேசிய மக்கள் சக்தி பெற்றுக்கொண்ட வெற்றியானது, நாடு முழுவதும் அவர்கள் பெற்றிருக்கும் வெற்றியை விடவும் முக்கியமானது. ஏனெனில் சிங்கள மக்கள் தேசிய மக்கள் சக்தியை நோக்கி ஈர்க்கப்பட்டதற்கும் ஈழத் தமிழ் மக்கள் - குறிப்பாக வடக்கு மாகாண தமிழர்கள் அவர்களை நோக்கி ஈர்க்கப்பட்டதற்குமான அரசியல் முற்றிலும் வேறுபட்டது. இந்த நிலைமை தொடருமாயின் தமிழர்களுக்கான தனித்துவ அரசியல் என்று, ஒன்றிருக்கவே முடியாது. இதுவரை தமிழர் தரப்புக்கள் பேசிவந்தவை அனைத்தையும் கைவிட நேரிடும் ஏனெனில் ஒரு நிலைப்பாட்டை மக்கள் ஆதரிக்கவில்லையாயின் அதன் பின்னர் அது பற்றி பேசுவது அரசியல்ரீதியில் பொருத்தமற்றது.

நவம்பர் மாதம் தேசிய மக்கள் சக்தி வடக்கில் பெற்றுக்கொண்ட வெற்றியைக் கொண்டு பலவாறான வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்பட்டது, 2009 மே மாதத்தில் என்றால், கருத்தியல்ரீதியில் புலிகள் தோற்கடிக்கப்பட்டது, நவம்பர், 14, 2024இல் என்று ஒரு வாதம் முன்வைக்கப்படுகின்றது. தேசிய மக்கள் சக்தி வடக்கில் பெற்றுக்கொண்ட வெற்றியுடன், ஈழ அரசியல் முடிந்து விட்டதாகவும் ஒரு வாதம் முன்வைக்கப்படுகின்றது. தர்க்கரீதியில் இவ்வாறான வாதங்களை நிராகரிக்க முடியாது ஏனெனில், தேசிய மக்கள் சக்தியாக முகம் காட்டும் ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி) எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கூட, ஈழத் தமிழர்களின் தனித்துவமான அரசியல் இருப்பை ஏற்றுக்கொண்டதில்லை. ஜே.வி.பியின் ஆரம்ப காலத்தில், அதன் தலைவர் (ருகுணு) றோகண விஜயவீர தமிழர்களுக்கான சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொண்டிருந்ததாக சில பதிவுகள் உண்டு. இது தொடர்பில் ஆரம்பகால ஜே.வி.பி உறுப்பினர்களில் ஒருவரான லயனல் போபகே எழுதியிருக்கின்றார். தானும் அவ்வாறான உரைகளை ஆற்றியிருந்தாகவும் அவர் பதிவு செய்திருக்கின்றார் ஆனால் பிற்காலத்தில் ஜே.வி.பி அதன் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு, தென்னிலங்கையின் பெரும்பான்மை வாதத்திற்குள் கரைந்துவிட்டதாகவே பதிவுகள் உண்டு.

குறிப்பாக, 1982 ஜனாதிபதி தேர்தலில் ஜே.வி.பியின் தலைவர் றோகண விஜயவீர போட்டியிட்டார். இதன் போது, தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமை தொடர்பில் அவர் பேசியிருந்தார் ஆனால் 82 தேர்தலில் எதிர்பார்த்தவாறு ஜே.வி.பிக்கு மக்கள் ஆதரவு கிடைத்திருக்கவில்லை. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொண்டமைதான் விஜயவீரவிற்கு ஏற்பட்ட பின்னடைவுக்கு காரணம் என்றவாறான

> தமிழ் கட்சிகள் என்ன செய்யப் போகின்றன? வழமைபோல் காலாவதியாகிப் போன அரசியல் கட்சிகளின் தலைவர்களோடு தொடர்ந்தும் மல்லுக்கட்டி, மக்களிடமிருந்து விலகிச் செல்லப் போகின்றனவா அல்லது நடைமுறைச் சவால்களை துல்லியமாகப் புரிந்து கொண்டு, அதற்கேற்றவாறான உபாயங்களை கையாண்டு, உள்ளூராட்சியையும் மாகாண சபையையும் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் போகின்றனவா?)

பார்வையும் மேலோங்கியது. இந்தக் காலத்திலிருந்து ஜே.வி.பியின் அணுகுமுறைகள் தென்னிலங்கையின் பிரதான சிங்கள-பௌத்த தேசியவாத கருத்தியலோடு முற்றிலும் ஒத்துப் போவதாக மாறியது. அதன் பின்னர் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு முயற்சிகள் எதனையும் ஜே.வி.பி ஆதரித்ததில்லை.

குறிப்பாக, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவான, 13வது திருத்தச்சட்டத்தின் மீதான எதிர்ப்பை, தென்னிலங்கை மயப்படுத்தியதில் ஜே.வி.பி முதன்மையானது. இந்திய விஸ்தரிப்பு வாதம் தொடர்பான அச்சத்தை மூட்டி, இந்திய எதிர்ப்பையும் தமிழர் விரோதத்தையும் ஒன்றிணைக்கும் கருத்தியலை உட்புகுத்தியதிலும் ஜே.வி.பிதான் முன்னோடி அமைப்பு. 2002இல், விடுதலைப் புலிகளுக்கும் ரணில் அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதான உடன்பாட்டை “மிகப்பெரிய துரோகம்” என்று கூறி, அதனை ஜே.வி.பி கடுமையாக எதிர்த்திருந்தது. அதற்கு தலைமை தாங்கியவர்களில் அனுரவும் ஒருவர். சமாதான உடன்பாட்டின் மூலம் இலங்கையை நோர்வேயின் காலனியாக மாற்ற முற்படுவதான பிரச்சாரத்தையே ஜே.வி.பி தென்னிலங்கையில் முன்னெடுத்திருந்தது. இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் போது, எவ்வாறு இந்திய விஸ்தரிப்பு வாதத்தை கையிலெடுத்ததோ அதனையே நோர்வே எதிர்ப்பு வாதமாக உருமாற்றியது.

இவ்வாறானதொரு பின்னணி கொண்ட தென்னிலங்கை கட்சியொன்றையே வடக்கு மக்கள் தெரிவு செய்திருக்கின்றனர். தற்போது அந்த அமைப்பு குறிப்பிடத்தக்களவு தன்னை மாற்றிக்கொண்டிருக்கின்றது என்பது உண்மைதான். குறிப்பாக அதன் இந்திய எதிர்ப்பு வாதத்தில் மாற்றங்கள் தெரிகின்றன - அப்படித்தான் கூறுகின்றனர். எனினும் அவர்களின் மாற்றத்தை புரிந்து கொள்வதற்கு இன்னும் காலம் தேவை.

இங்குள்ள அடிப்படையான பிரச்சினை வேறு. அதாவது, இவ்வாறானதொரு பின்னணி கொண்ட ஜே.வி.பியை வடக்கு கிழக்கில், குறிப்பாக தமிழ்த் தேசிய அரசியலின் மையம் என்று வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணத்தில் ஆதரித்திருப்பதானது, தமிழ்த் தேசிய அரசியலிலிருந்து தமிழ் மக்கள் விலகிச் செல்கின்றனர் அல்லது பெருமளவில் புதிய தமிழ் தலைமுறை மரபார்ந்த தமிழ்த் தேசிய அரசியலிலிருந்து விலகிச் செல்லவே விரும்புகின்றது என்று ஒருவர் வாதிட்டால், அதனை இலகுவாக நிராகரித்துவிட முடியுமா? இது தற்காலிகமாகவும் இருக்கலாம் ஒரு வேளை நிரந்தரமாகிவிட்டால் என்ன நடக்கும்?

நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றது போன்று, உள்ளூராட்சித் தேர்தலிலும், மாகாண சபைத் தேர்தலிலும் அவர்கள் வடக்கு கிழக்கில் பிரதான சக்தியானால், அதன் பின்னர் மாகாண சபை முறைமையில் கூட, தாங்கள் விரும்பும் மாற்றங்களை ஏற்படுத்த முடியுமல்லவா! தமிழர் அரசியலைப் பொறுத்தவரையில் இது ஒரு அரசியல் நெருக்கடி. 2009இற்கு பின்னர் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளில் இதுவே மிகவும் சிக்கலானது. நாடாளுமன்றத் தேர்தலின் போது, நடைமுறைச் சவால்களை எதிர்கொள்ள முடியாமல் போனது போன்று, உள்ளூராட்சித் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தலிலும் தமிழ் கட்சிகள் பின்னடையப் போகின்றனவா? இந்தச் சவாலை எதிர்கொள்ள தமிழ் கட்சிகள் என்ன செய்யப் போகின்றன? வழமைபோல் காலாவதியாகிப் போன அரசியல் கட்சிகளின் தலைவர்களோடு தொடர்ந்தும் மல்லுக்கட்டி, மக்களிடமிருந்து விலகிச் செல்லப் போகின்றனவா அல்லது நடைமுறைச் சவால்களை துல்லியமாகப் புரிந்து கொண்டு, அதற்கேற்றவாறான உபாயங்களை கையாண்டு, உள்ளூராட்சியையும் மாகாண சபையையும் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் போகின்றனவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த ஆட்சியிலும் முதல் ஆண்டு தேனிலவு! அடுத்த வருட நினைவேந்தலின்போதே அநுர அரசின் நிஜமுகத்தை காணமுடியும்!

பனங்காட்டான்

"மீண்டும் அவர்கள் குரல் கேட்கிறது, மீண்டும் அவர்கள் தூசு தட்டி எழும்புகிறார்கள்".

கொழும்பைத் தளமாகக் கொண்ட ஊடக நண்பர் ஒருவர் சில நாட்களுக்கு முன்னர் தொலைபேசியில் உரையாடும் போது இப்படிச் சொன்னார். இவர் பறங்கிய சமூகத்தைச் சேர்ந்தவர்.

'அவர்கள்' என்று இவர் சுட்டியது, ராஜபக்சக்களின் ஆட்சிக் காலத்தில் இனத்துவேசம் கக்கியும் இனவாத உரைகளை நிகழ்த்தியும் அரசியல் வியாபாரம் செய்தவர்களை. இதனால் பெரும் பிழைப்பும் நடத்தியவர்கள் இவர்கள். பல சட்டமீறல்களுக்காகவும், ஊழல்களுக்காகவும் நீதிமன்றம் ஏறி இறங்கியவர்களும்கூட.

பெயர் சொல்லிக் குறிப்பிடுவதானால் முன்னாள் கடற்படைத் தளபதி சரத் வீரசேகர, முன்னாள் ஜே.வி.பி. பிரமுகர் விமல் வீரவன்ச, சிஹல உறுமய தலைவர் உதய கம்மன்பில, பொதுஜன பெரமுனவின் நிகழ்கால அமைப்பாளர் நாமல் ராஜபக்ச ஆகியோரைச் சொல்லலாம். இவர்கள் அனைவரும் அண்மைக் காலம் வரை ராஜபக்ச சகோதரர்களால் இனவாத சூடேற்றி வளர்க்கப்பட்டவர்கள்.

கடந்த மாத பொதுத்தேர்தல் இவர்களை ஓரம் தள்ளிவிட்டது. கோதபாய ராஜபக்சவின் வியத்மக என்ற புத்திஜீவிகள் அணி ஊடாக சிங்கள பௌத்த அரசியலில் கோலோச்சியவர் சரத் வீரசேகர. சிங்கள மேடைகளில் பீரங்கிப் பேச்சாளர் என்று மகுடம் சூட்டப்பட்டவர் விமல் வீரவன்ச. இவரது 'கோளய' என்று அழைக்கப்படுபவர் நடனமாடும் அரசியல்வாதியான உதய கம்மன்பில.

அடுத்தவர், இந்த நால்வரிலும் வயதில் இளையவரானாலும், எழுபத்தைந்தாண்டு கால அரசியல் குடும்ப பாரம்பரியத்தில் வந்த இளையவரான நாமல் ராஜபக்ச. இவரின் தந்தை, பெரியப்பா, சித்தப்பாமார் மட்டுமன்றி பேரனார், அவரது சகோதரர் - அவரின் பிள்ளைகள் என்று பெருங்கூட்டம் அள்ளுகொள்ளையாக இலங்கை அரசியலில் தொடர்ச்சியாக இருந்து வந்தது. படுதோல்விகளைச் சந்தித்த இந்தப் பரம்பரைக்கு மீண்டும் பிராணவாயு கொடுத்து எழுப்ப முனைந்து கொண்டிருப்பவர் நாமல் ராஜபக்ச.

அண்மைய நாட்களில் இவர்கள் எழுப்பும் கோசங்கள் பற்றி இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் விடுத்த அறிக்கையில் குறிப்பிட்ட விடயம் இங்கு முக்கிய கவனத்தைப் பெறுகிறது. "தோற்றுப்போன அரசியல்வாதிகள் மக்களின் நினைவேந்தல்களை அரசியலாக்குகின்றனர்" என்பது இவரது அறிக்கையின் மூலவாசகம்.

சரத் வீரசேகரவும், உதய கம்மன்பிலவும் தேர்தலில் போட்டியிட்டு மண் கவ்வியவர்கள். தமது தோல்வியை முற்கூட்டியே கணிப்பிட்டு தேர்தலிலிருந்து ஒதுங்கியவர் விமல் வீரவன்ச. கடந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வரலாற்றுப் பதிவு பெற்ற தோல்வியைச் சந்தித்த நாமல் ராஜபக்ச, பொதுத்தேர்தலில் போட்டியிடுவதைத் தவிர்த்து தகப்பனாரின் பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்ற கதிரையைப் பிடித்தவர்.

பெரமுன சமர்ப்பித்த தேசியப் பட்டியலுக்கான 29 பெயர்களில் நாமலின் பெயரே முதலாவதாக இருந்தது. அப்பா - பிள்ளை கட்சியில் பிள்ளைக்கு முதலிடம் என்பது பரம்பரைச் சீதனம் போன்றது. 29 பேர் பட்டியலில் இருவர் பௌத்த பிக்குகள். ஒருவர் முஸ்லிம்.



பெயருக்குக்கூட தமிழர் ஒருவருமில்லை. ராஜபக்சக்களின் பெரமுன இன மத துவேசக் கட்சி என்பதை இதனூடாகப் புரிந்து கொள்ளலாம்.

மாவீரர் நினைவேந்தல் (இதனை மாவீரர் வணக்க நிகழ்வு என்று அழைப்பர்) 1989ல் இந்திய அட்டூழிய ராணுவம் தமிழீழ மண்ணை ஆக்கிரமித்த காலத்தில் ஆரம்பமானது. இந்திய ராணுவத்துக்குத் துணையாக ஈ.பி.ஆர்.எல்.எவ் உட்பட பல ஆயுதக் குழுக்கள் சேர்ந்திருந்து காட்டிக் கொடுத்த வேளையிலும் நினைவேந்தலை எவராலும் தடுத்து நிறுத்த முடியவில்லை.

இலங்கை அரசின் முப்படையினரும் மாவீரர் நிகழ்வுகளை முடக்க எடுத்த செயற்பாடுகள் பல வகையானவை. கைதுகள், நீதிமன்றங்கள் ஊடான தடைகள், சட்ட நடவடிக்கைகள், முழத்துக்கு முழம் படையினரை வீதிகளில் நிறுத்தியமை, துயிலும் இல்லங்களை நிர்மூலமாக்கியமை, வணக்க நிகழ்வுகளின் போது ஈகச் சுடர்களை இரும்புச் சப்பாத்துக் கால்களால் உதைத்து வீழ்த்தியமை என்று இப்பட்டியலை அடுக்கிக் கொண்டே போகலாம்.

முக்கியமாக - 2009 முள்ளிவாய்க்கால் ஆயுத மௌனிப்புக்குப் பின்னர், மாவீரர் நினைவேந்தல் காலங்களில் சிங்களப் படையினரின் தர்பார் மேலோங்கி இருக்கும். அவ்வேளைகளில் ஆட்சியில் இருந்த மகிந்த, கோதபாய போன்றவர்கள் இவ்வகை அட்டூழியங்களைத் தடுக்காது, தமிழர் மீது மேலும் பல தடைகளை ஏற்படுத்தி படையினருக்கு உற்சாகம் ஊட்டி வந்ததே வரலாறு.

விடுதலைப் புலிகளை தாமே தோற்கடித்தது என்று மார்தட்டி, சிங்கள மக்கள் மத்தியில் தங்களை மாமன்னர்களாக பிம்பம் ஏற்படுத்திப் பெற்ற வெற்றியை அறகலய சரியாகப் பதம் பார்த்தது. பழம் நழுவிப் பாலில் விழுந்தது போன்று கிடைத்த வாய்ப்பை ரணில் பற்றிப் பிடித்து பயன்படுத்தி, தேர்தல் மூலம் கிடைக்காத - இனியும் கிடைக்கப் பெறாத பதவியை சுலபமாகப் பெற்றுக்கொண்டார்.

இன்று எல்லாமே முடிவுக்கு(?) வந்துவிட்டது போன்ற தோற்றம் காணப்படுகிறது. இதனை தோற்றம் என்றே சொல்ல வேண்டும். விடுதலைப் புலிகளின் பெயரால் பெற்ற வெற்றியே ராஜபக்சக்களின் அரசியல் அழிவுக்கும் காரணமானது. இப்போது கை நழுவிப் போயிருக்கும் அதிகாரத்தை மீளப்பெற, விடுதலைப் புலிகளின் ஆட்கள் நினைவேந்தல் ஊடாக மீளெழும்புகின்றனர் என்று குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளதை காணமுடிகிறது.

ஆசிரியர் சங்கச் செயலாளர் குறிப்பிட்டது போன்று, நினைவேந்தல்கள் இந்த வருடம்தான் முதன்முறையாக இடம்பெறவில்லை. தங்கள் ஆட்சிக் காலத்தில் இடம்பெறவில்லை போன்றும் புதிய ஜனாதிபதியின் காலத்தில் இதற்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது போன்றும் சிங்கள மக்கள் மத்தியில் அபிப்பிராயத்தை ஏற்படுத்த நாமலும் அவரது சகாக்களும் முனைவது நன்றாகத் தெரிகிறது.

> தோற்றுப்போன சிங்கள அரசியல்வாதிகள் நினைவேந்தலை அரசியலாக்கி ஆதாயமாக்க முனைகின்றனர். நினைவேந்தலை தடையின்றி நிகழ்த்த அனுமதி வழங்கியமைக்காக அநுர குமார ஆட்சிக்கு ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் நன்றி கூறியுள்ளார். யார், எப்போது அனுமதிக்கு விண்ணப்பித்திருந்தனர்? எப்போது அனுமதி வழங்கப்பட்டது? இவ்வருடம் இடம்பெற்றதும் வழமையான தடையுடைக்கும் மக்களின் உணர்வுபூர்வ வணக்க நிகழ்வு. இதனைப் புரியாது நன்றி கூறும் அடிமைப் புத்தி ஏன்?

இவர்களின் ஆட்சிக் காலத்தில் பல்வேறு எதிர்ப்புகளையும் ராணுவ அட்டகாசங்களையும் மீறி நினைவேந்தல் இடம்பெற்றதை மறந்துவிட்டு, விடுதலைப் புலிகளின் மாவீரர்களை எவ்வாறு இன்றைய அரசு அனுமதித்தது என்று பொதுஜன பெரமுனவின் மனோஜ் கமகே கேள்வி எழுப்பியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் நினைவேந்தல் அவர்கள் முன்னோக்கப் பயணிக்க உதவ மாட்டாது என்று தமது பங்குக்கு குரல் கொடுத்துள்ளார் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி. கோதபாய ராஜபக்சவின் சட்டவாளராகப் பணியாற்றிவிட்டு, அதற்கான வெகுமதியாக அவரால் அமைச்சராக நியமிக்கப்பட்டவரே இந்த அலி சப்ரி.

நாடு மெதுமெதுவாக பிரிவினைவாதத்துக்குச் சென்று ஈழம் உருவாகுமா என்ற சந்தேகம் ஏற்படுவதாக புதிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த சுகீஸ்வர பண்டார ஊடகங்கள் வாயிலாக கேட்கின்றார். சிங்கள மக்களை உசுப்பிவிட்டு அரசியல் லாபம் பெற முனையும் இவர்கள், இதனூடாக அநுர அரசின் மீது சிங்கள மக்களை ஏவி விடலாமெனவும் கருதுவதுபோல் தெரிகிறது.

இவ்வாறெல்லாம் தங்களுக்கு எதிராக காய்கள் நகர்த்தப்படுமென்பது அநுர குமார அணியினருக்கு தெரியாததல்ல. அதற்காக, இந்த அரசு மனம் விரும்பியே நினைவேந்தலை விட்டுப் பிடித்தது என்றும் கூற முடியாது. விரைவில் இடம்பெறவுள்ள உள்ளூராட்சிச் சபை தேர்தல், மாகாணசபை தேர்தல் என்பவற்றில் தமிழர் தாயகத்தில் கணிசமாக வெற்றி பெறவும், சில சபைகளை கைப்பற்றவும் ஆட்சித் தரப்பு இப்போதிருந்தே இலக்கு வைத்து செயற்பட ஆரம்பித்துள்ளது. இதற்காக ஓர் இடைவெளியை பொதுவெளியில் வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் இவர்களுக்கு உண்டு. அதன் வெளிப்பாடே நினைவேந்தலுக்கான எதிர்ப்பை வெளிப்படுத்தாது, வெளித்தோற்றத்தில் திறந்த மனதுடன் அரசு செயற்பட்டது போன்று காட்டியது என்றே கூற வேண்டும்.

வல்வெட்டித்துறையில் தேசியத் தலைவர் பிரபாகரன் பிறந்த நாள் நிகழ்வை அவர் பிறந்த வீடிருந்த காணியில் அவரது பிறந்த நாள் படத்தை பிரசுரித்துக் கொண்டாட அரச இயந்திரம் அனுமதிக்கவில்லை. நினைவேந்தல் நிகழ்வுகளில் விடுதலைப் புலிகளின் சின்னங்கள், கொடிகள் போன்றவற்றை பயன்படுத்தவும் தடை விதிக்கப்பட்டிருந்தது. போர்க்காலத்தில் மரணித்த தமது பிள்ளைகளுக்கு நினைவேந்த இடமளித்த அநுர குமார அரசு, மறு தரப்பில் போரில் மரணித்த தங்கள் பிள்ளைகளுக்கு வணக்கம் செலுத்த தடை விதித்தது ஏற்புடையதன்று.

இதனைப் புரிந்து கொள்ளாத ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், நினைவேந்தலுக்கு அனுமதி வழங்கியதற்காக அநுர குமார அரசுக்கு பகிரங்கமாக நன்றி தெரிவித்துள்ளார். யார், எப்போது நினைவேந்தலுக்கு அனுமதி கேட்டு விண்ணப்பித்தனர்? எப்போது அரசு இதற்கு அனுமதி வழங்கியது? இப்படி எதுவுமே நடைபெறவில்லை. இருதரப்பும் ஏதோ ஒரு புரிந்துணர்வுடன் தங்கள் பணியை மேற்கொண்டனர். இதனைப் புரியாதவர், நினைவேந்தலில் பங்குபற்றாதவர் எதற்காக அரசுக்கு நன்றி சொல்ல வேண்டும்? ஏன் இந்த அடிமைப் புத்தி?

விரைவில் நடைபெறவிருக்கும் இரண்டு தேர்தல்கள் முடிந்த பின்னர் வரப்போகும் அடுத்த வருட நினைவேந்தலின் போதுதான் புதிய ஆட்சியாளர்களின் ஆத்மசுத்தியான இனவாத மதவாதம் அற்ற கொள்கையை அறிய முடியும்.

அதுவரை எல்லாமே அப்படி, இப்படித்தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதானியை அமெரிக்கா கைது செய்ய முடியுமா?

62 வயதான கௌதம் அதானி, இந்தியாவின் பணக்கார மற்றும் சக்தி வாய்ந்த தொழிலதிபர்களில் ஒருவர்.

அமெரிக்காவில் அதானி மற்றும் அவரது கூட்டாளிகள் சிலர் மோசடி குற்றச்சாட்டுக்கு ஆளாகியுள்ளனர். இதுவரை அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளில் இதுவே மிகக் கடுமையானதாக உள்ளது.

அமெரிக்க நீதித்துறை , பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணையம் போன்ற அமெரிக்க அரசு அமைப்புகளால் இக்குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டுள்ளன.

இருப்பினும், அதானி குழுமம் இந்த குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்றும் அவற்றை சட்டப்பூர்வமாக எதிர்கொள்வோம் என்றும் கூறியுள்ளது.

இந்த குற்றச்சாட்டுகளால் அதானி குழும நிறுவனப் பங்குகளின் மதிப்பு பெரும் சரிவைக் கண்டது.

குற்றச்சாட்டுகளின் தீவிரத்தையும் அவற்றுக்கான எதிர்வினைகளையும் பார்க்கும் போது, இந்த விஷயம் இத்துடன் நின்றுவிடப் போவதில்லை என்பது தெளிவாகிறது.

அமெரிக்காவில் இந்த வழக்கு தொடர்பான சட்ட நடைமுறை என்னவாக இருக்கும்? இந்த குற்றச்சாட்டுகள் அதானி குழும வணிகத்தில் என்ன மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்தும்?

கௌதம் அதானி மற்றும் அவரது கூட்டாளிகள் சிறைக்குச் செல்ல வாய்ப்புள்ளதா? எதிர்காலத்தில் அதானி குழுமம் தனது திட்டங்களுக்கு வெளிநாட்டில் இருந்து எப்படி நிதி திரட்ட முடியும்? என்பன போன்ற பல கேள்விகள் உள்ளன.

இந்தக் கேள்விகளுக்கான பதில்களைத் தெரிந்து கொள்ள, இந்தியாவிலும் அமெரிக்காவிலும் உள்ள பல நிபுணர்களிடம் பேசியபோது பல விடயங்களைப் புரிந்துகொள்ள முடிந்தது.

### சட்ட செயல்முறை மற்றும் சவால்கள்

கௌதம் அதானி மற்றும் பிறர் மீதான குற்றச்சாட்டுகளுக்கு நியூயார்க்கில் அரசு வழக்கறிஞராக உள்ள பிரையன் பீஸ் விளக்கமளித்தார்.

"பில்லியன் டாலர் மதிப்பிலான ஒப்பந்தங்களைப் பெறுவதற்காக இந்தியாவில் அரசு அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுக்கும் திட்டம் தீட்டப்பட்டது" என்கிறார் பீஸ்.

கௌதம் அதானி, சாகர் அதானி மற்றும் வினீத் ஜெயின் ஆகியோர் அமெரிக்க மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களிடமிருந்து மூலதனத்தை திரட்ட முயன்றனர். அந்த முதலீட்டாளர்களிடம் பொய் சொல்லியுள்ளனர்.

ஆனந்த் அஹூஜா அமெரிக்காவில் வழக்கறிஞராக முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வருகிறார்.

"குற்றச்சாட்டுகளை நிரூபிப்பது அவ்வளவு எளிதாக இருக்காது என்று நினைக்கிறேன். இதற்கு இரண்டு காரணங்களைச் சொல்கிறேன்." என்று அவர் கூறினார்.

முதலாவதாக, "லஞ்சம் பெற்றவர்கள் இந்தியாவில் இருக்கிறார்கள் என்று தெரிகிறது. அப்படியானால், இந்தியாவில் உள்ளவர்களிடம் அமெரிக்க அதிகாரிகள் எவ்வாறு வாக்குமூலம் பெற முடியும்? இதில், இந்தியாவின் சட்ட முறைகளையும் பார்க்க வேண்டும். அதில் யாராவது அரசு அதிகாரியாக இருந்தால், அவருக்கு எதிரான சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அரசிடம் இருந்து முன் அனுமதி பெற வேண்டும். அதனால் இது ஒரு சிக்கலான வழக்காக மாறக்கூடும்." என்று அவர் கூறினார்.

"அமெரிக்காவின் அரசு வழக்கறிஞர்கள் இந்தியாவில் வாழும் மக்களை, குறிப்பாக அரசு அதிகாரிகளை எந்த அளவிற்கு விசாரிக்க முடியும் என்பது குறித்தும் இனி மேல் தான் தெரிந்துகொள்ள வேண்டும். இந்திய உச்ச நீதிமன்றமும் எதிர்காலத்தில் இதில் பங்கு வகிக்கலாம். ஏனென்றால், சட்டம் என்ன சொல்கிறது என்பது பற்றி உச்ச நீதிமன்றம் மட்டுமே தீர்மானிக்க முடியும். குற்றம் சாட்டப்பட்டவரின் செயல் மற்றும் நோக்கம் இரண்டும் ஒரே நேரத்தில் மோசடியை வெளிப்படுத்துகின்றதா? என்பதை நீதிபதி முன்பாக நிரூபிக்க வேண்டும்" . என்றார் அவர்.

மேற்கூறிய இந்த இரண்டு காரணங்களும் குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்கு கடினமானதாக்குவதாக ஆனந்த் அஹூஜா தெரிவிக்கின்றார்.

'உதாரணமாக, நீங்கள் சில வேலைகளைச் செய்தால், அதை தவறான நோக்கத்துடன் செய்யவில்லை என்று உங்களால் நிரூபிக்க முடிந்தால், அதை மோசடி என்று அழைக்க முடியாது. எனவே அமெரிக்க அரசாங்க வழக்கறிஞர்கள் இந்த குற்றச்சாட்டுகளை நிரூபிக்க முடியுமா என்பதையும் பார்க்க வேண்டும்." என்று அவர் தெரிவித்தார்.


### அதானியை அமெரிக்கா கைது செய்ய முடியுமா?

"இது போன்ற முந்தைய வழக்குகளைப் பார்த்தால், வழக்கமாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதிலிருந்து விசாரணை முடியும் வரை ஆறு மாதங்கள் முதல் ஒரு வருடம் வரை ஆகும்" என இந்தக் கேள்விக்கு அஹூஜா பதில் கூறினார்.

"இந்த குற்றச்சாட்டுகள் மிகவும் தீவிரமானவை. அவை நிரூபிக்கப்பட்டால், குற்றம் சாட்டப்பட்டவர் சிறையில் அடைக்கப்படலாம் அல்லது அவர் இழப்பீடு வழங்க வேண்டும். அல்லது இரண்டு தண்டனைகளும் கொடுக்கப்படலாம்" என மூத்த வழக்கறிஞரான ஹெச்பி ரனினா கூறுகிறார்.



## மற்ற நாடுகளிலும் அதானி குழுமத்திற்கு சிக்கல் வருமா?




**அதானி மீதான குற்றச்சாட்டுகள் என்ன?**

**உலக பணக்காரர்களில் முக்கியமான நபராக அறியப்படும் இந்தியாவைச் சேர்ந்த கௌதம் அதானி மீது அமெரிக்காவில் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.**

**அதானி, இந்தியாவில் தனது புதுப்பிக்கத்தக்க ஆற்றல் நிறுவனம் சில ஒப்பந்தங்களை கைப்பற்ற இந்திய அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுக்க ஒப்புக்கொண்டதாகவும், அந்த ஒப்பந்தங்களுக்கான முதலீட்டை அமெரிக்க மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களிடம் பெற்றபோது லஞ்ச விவகாரத்தை மறைத்ததாக கூறி 'மோசடி' குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.**

**துறைமுகங்கள், விமான நிலையங்கள், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உள்ளிட்ட துறைகளில் வர்த்தகம் மேற்கொண்டு வரும் அதானி குழுமத்தின் மீது வைக்கப்பட்டுள்ள இந்த குற்றச்சாட்டுகள் அந்த நிறுவனத்திற்கு பெரும் நெருக்கடியையும் பின்னடைவையும் ஏற்படுத்தியுள்ளது.**

**அமெரிக்காவின் இந்த குற்றச்சாட்டுகளை அதானி குழுமம் மறுத்ததோடு, அதற்கு ஆதாரங்கள் இல்லை என்றும் கூறியுள்ளது.**

'குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி என்று நடுவர் மன்றம் கருதினால், பெரும்பாலும் அங்குள்ள நீதிபதியின் தீர்ப்பைப் பொறுத்து தண்டனை அமையும்.'

ரனினாவின் கூற்றுப்படி, 'அமெரிக்க பாதுகாப்பு மற்றும் பரிவர்த்தனை ஆணையத்தைப் பொருத்தவரை, அவர்கள் சேதங்களுக்கு தீர்வு காண விரும்புவர்.'

'இருப்பினும், குற்றச்சாட்டுகளின் தன்மையைப் பொருத்தவரை, அபராதத்தின் அளவு அதிகமாக இருக்கலாம். அந்த அபராதத்தை செலுத்துவது அதானி குழுமத்தின் மற்ற நிறுவனங்களையும் பாதிக்கலாம்.'

1997-ம் ஆண்டு இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் குற்றவாளிகளை ஒப்படைப்பது தொடர்பான ஒப்பந்தம் ஏற்பட்டது.

கௌதம் அதானியை அமெரிக்கா கைது செய்ய முடியுமா என்ற கேள்விக்கு அப்படி இல்லை நடந்தால் அதற்கு இந்தியாவின் பதில் என்ன?

"இது ஒப்படைப்பு ஒப்பந்தத்தின் விதிமுறைகளைப் பொறுத்தது. இந்த விஷயத்தின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, இரு நாடுகளுக்கும் இடையே ஒருமித்த கருத்து எட்டப்படலாம்" என ரனினா கூறினார்.

அமெரிக்காவின் குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து, அதானி குழுமத்துடனான இரண்டு ஒப்பந்தங்களை ரத்து செய்ய கென்ய அரசு முடிவு செய்துள்ளது.

இந்த ஒப்பந்தங்களின்படி, கென்யாவின் தலைநகரான நைரோபியில் உள்ள ஜோமோ கென்யாட்டா சர்வதேச விமான நிலையத்தில் அதானி குழுமம் 1.85 பில்லியன் டாலர் முதலீடு செய்ய இருந்தது.

அதற்கு ஈடாக விமான நிலையத்தை 30 ஆண்டுகளுக்கு நடத்த ஒப்பந்தம் பெற்று இருந்தது. இது தவிர 736 மில்லியன் டாலருக்கு இன்னொரு ஒப்பந்தமும் செய்யப்பட்டிருந்தது. அதன்படி, அங்கு மின்கம்பி அமைக்கும் பணியை அதானி குழுமம் பெற்றது. இரண்டு ஒப்பந்தங்களிலும் ஊழல் நடந்ததாக புகார் எழுந்துள்ளது.

கென்ய அதிபர் வில்லியம் ருடோ, வியாழக்கிழமையன்று இந்த ஒப்பந்தங்கள் ரத்து செய்யப்பட்டதாக அறிவிக்கும் போது ஊழல் குறித்து மேற்கோள் காட்டினார்.

'ஊழல் பற்றிய மறுக்க முடியாத ஆதாரங்களையும் நம்பத்தகுந்த தகவல்களையும், எங்கள் புலனாய்வு அமைப்புகள் மற்றும் கூட்டணி நாடுகள் வழங்கிய புதிய தகவல்கள் வெளிப்படுத்தியுள்ளன. இது குறித்து நடவடிக்கை எடுக்க தயங்க மாட்டேன்" என கென்ய நாடாளுமன்றத்தில் ரூட்டோ கூறினார்.

அதானி குழும நிறுவனங்கள், கென்யாவைப் போல பல நாடுகளில் இயங்குகின்றன அல்லது அங்கு திட்டங்களைத் தொடங்க முயற்சிக்கின்றன.

இந்தக் குழுமம் இந்தியாவில் உள்ள பல மாநில அரசுகளுடனும், பல வெளிநாட்டு அரசுகளுடனும் ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது.

இருப்பினும், கென்யா நடவடிக்கை எடுத்த விதத்தை போன்று, மற்ற நாடுகளிலும் நடக்குமா என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

கடந்த வியாழக்கிழமை அன்று அதானி குழுமத்தின் பல்வேறு நிறுவனங்களின் பங்கு மதிப்பில் சரிவு ஏற்பட்டது.

இருப்பினும், குற்றச்சாட்டுகள் காரணமாக பங்குகளின் விலையில் வீழ்ச்சி இதற்கு முன்பும் காணப்பட்டுள்ளது. பின்னர் அவற்றில் முன்னேற்றமும் ஏற்பட்டுள்ளது.

### நிபுணர்கள் என்ன சொல்கிறார்கள்?

அம்ப்ரிஷ் பலிகா ஒரு பங்குச் சந்தை நிபுணர். அவர் எந்த நிறுவனத்துடனும் தொடர்புடையவர் அல்ல.

"ஹிண்டன்பர்க் அறிக்கைக்குப் பிறகு நாம் பார்த்ததைப் போல இந்த முறை அதானி குழும நிறுவனங்களின் பங்குகளின் மதிப்பு பெரிய வீழ்ச்சியை சந்திக்காது என்று நான் நினைக்கிறேன்." என பலிகா கூறினார்.

ஜனவரி 2023 இல், 'ஹிண்டன்பர்க் ரிசர்ச்' என்ற அமெரிக்க நிறுவனம் தனது அறிக்கையில் அதானி குழுமத்திற்கு எதிராக கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்தது.

அதே வாரத்தில், அதானி குழும நிறுவனங்களின் மொத்த பங்குச் சந்தை மதிப்பு சுமார் 50 பில்லியன் டாலர் வரை குறைந்தது.

"அதானி குழுமம் சவால்களை சமாளிப்பதில் வெற்றிகரமானதாக இருக்கிறது. ஆனால், அத்தகைய அறிக்கைகள் அந்த குழுமத்தின் நற்பெயரை கேள்விக்குட்படுத்துகின்றன" என்று பலிகா விளக்குகிறார்.

"இதன் காரணமாக, நிதி திரட்டுவது இக்குழுமத்திற்கு தாமதமாகிறது. இந்த முறை குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்ட போது அதானி கிரீன் நிறுவனத்துக்கு நிதி திரட்டிக் கொண்டிருந்தனர். ஹிண்டன்பர்க் அறிக்கை வெளிவந்த போது அதானி எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு நிதி திரட்டிக் கொண்டிருந்தனர்." என்று அவர் கூறினார்.

இந்த சர்ச்சை அதானி குழுமத்தின் நன்மதிப்பைப் பாதிக்கும் என சந்தோஷ் தேசாய் எனும் ஆய்வாளர் கருதுகின்றார்.

"முதலீட்டாளர்கள் பயப்படுவார்கள். எதிர்காலத்தில் அதானி குழுமம் வெளிநாட்டில் நிதி பெறுவது அவ்வளவு எளிதாக இருக்காது" என்று நினைப்பதாக தேசாய் தெரிவிக்கின்றார்.

"ஆனால் கேள்வி என்னவென்றால், அவர் மீதான பொதுமக்களின் பார்வையை இந்த வழக்கு மாற்றுமா? அவரை விரும்பும் மக்கள் அவரை ஒரு வெற்றியடைந்த மனிதராகப் பார்ப்பார்கள். அதனால் அவர் குறிவைக்கப்படுகிறார் என நினைப்பார்கள். அவரைப் பிடிக்காதவர்கள் இந்தக் குழுமத்தைப் பற்றி முன்னமே தாங்கள் சரியாகச் சொன்னதாகச் கூறுவார்கள்." என்று தேசாய் கூறுகிறார்.


சந்தோஷ் தேசாய் கூறுகையில், "முதலீட்டாளர்கள் லாபத்தையும் நிலைத்தன்மையையும் விரும்புகிறார்கள். இந்தியா இதை வழங்க முடிந்தால், எந்த நிறுவனம் என்ன செய்தாலும் செய்யாவிட்டாலும் அது ஒரு பொருட்டாக இருக்காது. அதுபோலவே, வணிக உலகில் ஓரளவு அரசியல் ஆதரவு தேவை என்ற கருத்தும் இந்த வழக்கின் மூலம் மேலும் அதிகரிக்கலாம்." என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர் நினைவேந்தலும் தமிழ்த் தேசியமும்!



கந்தையா அருந்தவபாலன்



இவ்வாண்டுக்கான மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் இலங்கைப் பாதுகாப்புத்தரப்புகளின் கெடுபிடிகள் ஏதுமின்றி அமைதியான முறையில் நடந்து முடிந்துவிட்டன. வழமை போலவே தமிழ் மக்களும், வழமைக்கு மாறாக அரசாங்கமும் இந்நிகழ்வு தொடர்பான அணுகுமுறைகளைக் கடைப்பிடித்ததைக் காணமுடிந்தது. தொடர்மழையும் அதனால் மக்களுக்குப் பாதிப்புகளும் சிரமங்களும் இருந்த போதும் துயிலும் இல்லங்களின் ஒழுங்கமைப்புகளிலும் மாவீரர்களின் உறவுகள் உணர்வுபூர்வமாக தமது கடமைகளை நிறைவேற்றிக் கொள்வதிலும் எவ்வித தொய்வுகளும் காணப்படவில்லை. சில துயிலுமில்லங்களில் மாவீரர்களின் உறவுகளின் வருகை குறைந்திருந்த போதும் இன்னுஞ் சிலவற்றில் வழமையைவிடக் கூடுதலாகவும் இருந்தது. எனினும் இவ்வாண்டு நிகழ்வுகள் சிலருக்குத் திருப்தியைக் கொடுக்கவில்லை என்பதும் உண்மையாகும். இம்முறை தமது நாயக விம்பத்தை மக்களுக்கு வெளிப்படுத்த வாய்ப்பில்லாது போய்விட்டதே என்று சிலரையும், முகநூலில் தமது போர்க்குணத்தை வெளிப்படுத்த வாய்ப்பில்லாது போய்விட்டதே என்று முகநூல் போராளிகளையும் களநிலைமை கவலைப்பட வைத்துவிட்டது. பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்த தமிழ் மக்கள் தங்கள் தெரிவு சரியானதுதான் என மீண்டுமொருமுறை திருப்திப்பட்டுக் கொண்டதையும் காணமுடிந்தது. மறுபுறத்தில் தேர்தல்களில் அடிக்குமேல் அடிவாங்கி எழும்ப முடியாமல் கிடந்த விமல் வீரவங்ச மற்றும் பொதுஜன பெரமுன போன்ற இனவாதத் தரப்புகளுக்கு மெல்ல எழுந்து கதைப்பதற்கான ஊன்றுகோலாக இது அமைந்துள்ளது என்பதும் உண்மையாகும்.

மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் மாவீரர்களது உறவுகளின் உணர்வு வெளிப்பாடுகள் ஆண்டுதோறும் இறங்கு முகமாக இருப்பதை ஒருவரால் அவதானிக்க முடியும். அதாவது தமது உறவின் இழப்பை நினைக்கும்போது தோன்றும் அழுகைகள்,கண்ணீர சிந்துதல், வரமாட்டாயோ என்று ஏங்கக் குரல் எழுப்பி ஒப்பாரி வைத்தல் போன்ற கட்டுப்படுத்த முடியாத உணர்ச்சி வெளிப்பாடுகள் படிப்படியாகக் குறைவடைந்து செல்லும் நிலையே காணப்படுகிறது. இதற்குப் பிரதான காரணமாக இருப்பது கால ஓட்டத்தில் மாவீரர்களின் பெற்றோர்களின் மறைவு. அடுத்து உடன்பிறப்புகளின் மறைவு. இவ்வாறு மாவீரர்களின் நெருங்கிய உறவுகள் ஒவ்வொன்றாக மறைய மறைய உணர்வுகளின் வெளிப்பாடுகளும் அவ்வாறே குறைவடைந்து செல்வது இயல்பானதே. தனது தாயின் இழப்புக்கான மகனின் உணர்ச்சி வெளிப்பாடுகளுக்கும் அவன் மகனது அப்பம்மாவின் இழப்புக்கான வெளிப்பாடுகளுக்கும் உள்ள வேறுபாட்டை ஒத்த நிலையே அது. இவ்வகையில் உணர்வுபூர்வமான நிகழ்விலிருந்து படிப்படியாக மாறி, இன்று பல நாடுகளில் உலகப் போரில் உயிரிழந்த வீர்ர்களை நினைவு கூருவதுபோல சம்பிரதாயபூர்வமாக வருங்காலத்தில் நினைவுகூரப்படும் ஒரு பொதுநிகழ்வாக மாறும்.

எவ்வாறு மாவீர்ர் நினைவேந்தல் நிகழ்வு தமிழ் மக்களின் உணர்வுபூர்வமான நிகழ்வாக இருந்து சம்பிரதாயபூர்வமான நிகழ்வை நோக்கி பரிணாமம் பெற்றுவருகிறதோ அதேபோன்றதொரு நிலைதான் அந்நிகழ்வுக்கும் தமிழ்த் தேசிய உணர்வுக்கும் உள்ள உறவுநிலை.

விடுதலைப் புலிகளின் காலத்தில் மாவீரர் நினைவேந்தல் என்பது பல்பரிமாணங்களைக் கொண்ட ஒரு தமிழ்த் தேசிய நிகழ்வாக அமைந்திருந்தது. வீரமறவர்களின் ஈகையை போற்றும் அதேவேளை இலட்சியம் நோக்கிய விடுதலைப் போரில் மக்களை தமிழ்த் தேசிய உணர்வுடன் இறுகப் பிணைத்து வைத்திருப்பதற்கான ஒரு உத்தியாகவும் அது அமைந்தது. பண்டைத் தமிழர் வீரப்பண்பாட்டின் மீள்பிறப்பாக மக்களின் மனதில் பதியவைக்கப்பட்டது. மாவீரர்களின் உறவுகளுடன் மட்டுப்படுத்தப்பட்டதாகவன்றி தமிழ்த்தேசத்தின் மக்கள் நிகழ்வாகவே அது நடத்தப்பட்டு வந்தது. அந்நிலை இன்று எவ்வாறு சுருங்கி விட்டதோ அவ்வாறே அந்நிகழ்வுக்கும் தமிழ்த் தேசிய உணர்வுக்குமுள்ள உறவு நிலையும் சுருங்கிவிட்டதைக் காணலாம்.

தமிழ்த் தேசிய உணர்வும் நினைவேந்தல் உணர்வும் தமக்கிடையே பிணைப்புகளைக் கொண்டிருந்தாலும் இரண்டும் வேறுபட்டதொரு நிலையிலேயே இன்று நோக்கப்படுகிறது. தமிழ்த்தேசிய உணர்வுள்ள அனைவரும் நினைவேந்தலை மனப்பூர்வமாக வரவேற்பவர்களாகவோ அல்லது ஏதோவொருவகையில் அந்நிகழ்வில் பங்கெடுப்பவர்களாகவோ இல்லை. அதேபோலவே நினைவேந்தலில் பங்கு கொள்பவர்கள் அனைவரும் தமிழ்த் தேசிய உணர்வுடன் செயற்படுகிறார்கள் என்றும் கூறமுடியாது. மாவீரனை நினைவுகூரும் பெற்றோர் அல்லது உரித்துடையோர் முன்னுரிமை அளிப்பது தமது உறவின் பிரிவுக்கும் அவ்வுயிரின் ஆன்ம ஈடேற்றத்துக்குமேயன்றி தமிழ்த் தேசிய உணர்வுக்கல்ல. ஆனால் அவர்களின் ஈடுபாடும் அந்நிகழ்வு தொடர்பான மற்றவர்களின் அறிதலும் புரிதலும் தமிழ்த்தேசிய உணர்வைத் தூண்டும் வல்லமை கொண்டது என்பது மறுக்க முடியாத உண்மை.

தமிழ்த் தேசிய உணர்வு மற்றும் நினைவேந்தல் பிணைப்பு தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களின் நிலைப்பாடுகள் என்ன? இலங்கைத் தமிழரசுக்கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிஸ்,ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எவ், தமிழ் மக்கள் கூட்டணி என்பவற்றுடன் தமிழ்த் தேசிய பசுமை இயக்கம், தமிழ்த் தேசியக் கட்சி போன்றன தமிழ்த் தேசியக் கட்சிகளாகவும் அக்கட்சிகளின் தலைவர்கள் பொதுவாகத் தமிழ்த் தேசியத் தலைவர்கள் என்று சுட்டப்படுகிறார்கள். இத்தலைவர்கள் எல்லோரும் மாவீரர் நினைவேந்தல் தொடர்பாக ஒத்த நிலைப்பாடு கொண்டவர்களல்லர். குறிப்பாக ஈபிஆர்எல்எவ், புளொட், ரெலோ போன்ற கட்சிகளின் பல்மட்டத் தலைவர்கள் ஏனைய கட்சிகளைப் போன்றல்லாது மாவீரர் நினைவேந்தல் தொடர்பில் வேறுபட்ட கருத்துடையவர்கள். அந்நிகழ்வுக்கு எதிரானவர்களல்லர் என்றாலும் அது தங்களுக்குரிய நிகழ்வல்ல என்ற பொதுவான எண்ணங் கொண்டவர்களாகவே உள்ளனர். அந்நிகழ்வை விடுதலைப் புலிகளின் நிகழ்வாகவே அவர்கள் நோக்கும் நிலை அன்றிலிருந்து இன்று வரை தொடர்கிறது. இதற்கு மேலாக அக்கட்சிகளிலுள்ள பலர் இன்றும் விடுதலைப் புலிகள்மீதான வெறுப்பை உமிழ்பவர்களாக உள்ளதையும் காணமுடியும். விடுதலைப் புலிகளுக்கும் இவர்களுக்கும் இடையிலான பழைய பகைகள் இதற்கு அடிப்படையாக இருக்கலாம் என்பதற்கு மேலாக விடுதலைப் போரில் உயிர்களை ஈகம்செய்த தமது இயக்கங்களின் வீரர்கள் நாளை அவர்கள் தனித்தனியாக நினைவுகூர்ந்து வருவதும் இன்னொரு காரணம். தவிர்க்க முடியாத ஓரிரு சந்தர்ப்பங்களில் தவிர இக்கட்சிகளின் தலைவர்கள் மாவீரர் நிகழ்வுகளில் கலந்து கொண்டதில்லை. எனினும் ஒப்பீட்டு ரீதியில் ரெலோ தலைவர்கள் இவ்விடயத்தில் நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிப்பதையும் காணமுடியும். ஆனால் இத்தலைவர்களின் செயற்பாடுகள்மீது சில விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் இவர்கள் தமிழ்த் தேசியம்சார்ந்து சிந்திப்பவர்கள் என்பதில் வேறு கருத்து இருக்க முடியாது. அதேபோன்று மறுபுறத்தில் மாவீரர் நாள் நினைவேந்தலில் முழு ஈடுபாடுகாட்டும் மற்றைய கட்சிகளின் தலைவர்கள் எல்லோரும் தமிழ்த் தேசிய உணர்வினால்தான் அதில் ஈடுபடுகிறார்கள் என்றும் உறுதியாகக் கூறமுடியாது.

தமிழ் மக்களைப் பொறுத்த மட்டிலும் தமிழ்த் தேசிய உணர்வு, மாவீரர்களை நினைவேந்தல் என்பவை தொடர்பில் இதேநிலைதான் காணப்படுகிறது. பெரும்பாலான மாவீரர்களின் பெற்றோர்கள் அல்லது உறவுகள்அல்லது அடித்தட்டு மக்களைப் பொறுத்த மட்டில் அவர்கள் தமிழ்த் தேசிய உணர்வு என்ற கருத்து நிலையை விளங்கிக் கொள்ளும் நிலையிலில்லை. அதனால் அவர்கள் அனைவரும் தமிழ்த் தேசிய உணர்வு அற்றவர்கள் என்பது கருத்தன்று. கடந்த காலத்தேர்தல்களில் டக்ளஸ், அங்கஜன் போன்றோருக்கு வாக்குப் போட்ட பல மாவீரர் குடும்பங்கள் நடந்து முடிந்த தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு வாக்குப் போட்டுள்ளனர். அதுமட்டுமல்ல இக்கட்சிகளின் தேர்தல் முகவர்களாகச் செயற்பட்ட பலர் மாவீரர் குடும்பங்களைச் சேர்ந்தவராக இருந்தத்துடன் அவர்கள் நினைவேந்தல் நாளில் தமது உறவுகளுக்காக சுடரேத்தி அஞ்சலி செலுத்தியதையும் காணமுடிந்தது. எனவே தமிழ்த் தேசிய உணர்வுக்கும் தேர்தலுக்கும் நினைவேந்தலுக்கும் நேர்கோட்டு இணைப்பு எதுவும் கிடையாது. மறுபுறத்தில் தமிழ்த் தேசிய உணர்வைக் கருத்தியல் ரீதியாகவும் உணர்வுரீதியாகவும் புரிந்து கொண்ட மக்கள் பலர் நினைவேந்தல் தொடர்பாக அதிக அக்கறை காட்டுவதில்லை. கருத்தியல் ரீதியில் புரிந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரும் அவ்வாறு புரியாது உணர்வுடனோ அன்றி உறவுகளுக்காகவோ இணைவோரும் சேர்ந்தே நினைவேந்தலைச் செய்கின்றனர் என்பதே உண்மை.

இவ்வகையில் தமிழ்த் தேசியத்தின் முழுமையான பிரதிபலிப்பாக மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு அமைகிறது எனக்கூறமுடியாது. எவ்வாறு தேர்தலில் கட்சிகள் பெறும் வாக்குகளைக் கொண்டு தமிழ்த் தேசியத்தின் ஆதரவு அல்லது மறுதலிப்பு என்பவற்றை மதிப்பிட முடியாதோ அதேபோல நினைவேந்தலை வைத்தும் மதிப்பிட முடியாது. எனினும் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு மக்கள் மத்தியில் தமிழ்த் தேசியத்தையும் தமிழ்ப் பண்பாட்டையும் வளர்ப்பதற்கு பெருமளவுக்கு உதவக்கூடியது. சிதறிவிட்ட தமிழ்த்தேச மக்களை ஒன்றுதிரட்டுவதற்கு மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு பெருமளவுக்கு உதவும். அதனைச் சிறப்பாகச் செய்யுமிடத்து விடுதலைப் புலிகள் காலத்தில் இருந்ததைப் போல தேசத்தின்.இலக்கு நோக்கி மக்களை ஒன்றாக்க முடியும். ●

> தமிழ்த் தேசியத்தின் முழுமையான பிரதிபலிப்பாக மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு அமைகிறது எனக்கூறமுடியாது. எவ்வாறு தேர்தலில் கட்சிகள் பெறும் வாக்குகளைக் கொண்டு தமிழ்த் தேசியத்தின் ஆதரவு அல்லது மறுதலிப்பு என்பவற்றை மதிப்பிட முடியாதோ அதேபோல நினைவேந்தலை வைத்தும் மதிப்பிட முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேர்மனி - தமிழ் வானவையின் 'குருவிக்கூடு' நூல் வெளியீட்டு விழா!

**- சாந்தினி துரையரங்கன்**
(இசை ஆசிரியர்) - யேர்மனி.





யேர்மன் தமிழ் வானவை நடாத்திய குருவிக்கூடு நூல் வெளியீட்டு விழா 26. 10. 2024 சனிக்கிழமை அன்று 2:30 மணிக்கு யேர்மன் டோட்முண்ட் தமிழர் அரங்கத் தில் நடைபெற்றது. யேர்மன் தமிழ் வானவை சூம் ஊடாக நடத்துகின்ற இலக்கிய சந்திப்பின் 56வது நிகழ் வாக இந்நிகழ்வு சபையோர் முன்னிலையில் அரங்கத்தில் நடைபெற்றது.

திருமதி கௌரி சிவபாலன் அவர்களின் உழைப்பின் வெளிப்பாடாக இவ்விழா அமைந்திருந்தது. பிரதம விருந்தினராக முனைவர் மு. க. சு. சிவகுமாரன் (வெற்றி மணி பத்திரிகை, சிவத்தமிழ் சஞ்சியை ஆசிரியர்) அவர்கள் கலந்து சிறப்பித்திருந்தார். திருமதி கௌரி சிவபாலன் அவர்கள் தொடக்கவுரையுடன் ஆரம்பிக்க பல்துறைக்கலைஞன் திரு சிவவினோபன் தனது பாணி யில் நிகழ்ச்சிகளை அழகாக தொகுத்து வழங்கினார்.

பல மங்கையர்களின் மங்கள விளக்கேற்றலுடன் மங்களகரமாக நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. அடுத்து தமிழ்வானவையின் கீதம் காணொளி வடிவில் ஒலிபரப் பானது. தொடர்ந்து எழுத்தாளர் வவுனியா - அகளங் கன் அவர்களால் எழுதப்பட்ட அழகிய தமிழ்தாய் வாழ்த்தினை பிரவீணா தயா அவர்கள் இனிமையாக இசைத்திருந்தார். தொடர்ந்து வரவேற்புரையினை எழுத் தாளர் பொன் புத்திசிகாமணி அவர்கள் நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து நூல் அறிமுகம் இடம் பெற்றது. இதனை கவிஞர் ஜெகதீஸ்வரி மகேந்திரன் அவர்கள் நிகழ்த்தினார். அடுத்து நூல் வெளியீடு இடம் பெற்றது. குருவிக் கூட்டின் முதல் பிரதியை முதியோர் பராமரிப்பு இல்ல இயக்குனர், சமூக செயற்பாட்டாளர் திருமதி வதனி செல்வநாதன் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து அவரின் உரை இடம்பெற்றது. மூத்தோர் பராமரிப்பு எங்கள் சமூ கத்தினர்களுக்கு இங்கு அவசிய மானது. இது தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அவரது உரை இடம்பெற்றிருந்தது.

நூலின் இரண்டாவது பிரதியை கவிஞர் தமிழ்மணி சிவநேசன் பெற்றுக் கொண்டார். இவர் அன்றைய நிகழ்விற்கு அனுசரணை வழங்கியதுடன் காணொளி பதிவுகளை நேரடியாக முகநூல் மூலம் ஒளிபரப்பிக் கொண்டும் இருந்தார்.

அடுத்து விழாவுக்கு வந்திருந்த அனைவரும் நூல் களை பெற்றுக் கொண்டனர். அதனைத் தொடர்ந்து நூ லின் விமர்சனத்தினை இந்நூல் உருவாகுவதற்கு தூண்டி யாக இருந்த முனைவர் மு இளங்கோவன் உரை காணொளியாக காண்பிக்கப்பட்டது.

அடுத்து வெற்றிமணி ஆசிரியரின் 70 அகவை நிறைவிற்காக கௌசியவர்களால் தயாரிக்கப்பட்ட காணொளிப்பதிவு காண்பிக்கப்பட்டது. ஆசிரியரின் வாழ்க்கைக் குறிப்புகள், அவரின் செயற்திறங்கள் அதில் விதந்துரைக்கப்பட்டன.

தொடர்ந்து பிரதமவிருந்தினர் உரை இடம்பெற்றது. கௌசி வெற்றிமணி பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதிவரும் ஆக்கங்கள் பற்றியும் அவரது கால நேரம் தவறாத ஒழுங்கு பற்றியும் கூறினார்.

வாழ்த்துரைகள் தொடருகின்ற நிகழ்வாக அமைந்தி ருந்தன. (14ஆம் பக்கம் பார்க்க)




# வியுக்தியார் பதில்கள்

**இரா. இராஜேஸ்கரன்,**
**ஸ்ரேசன் வீதி, வவுனியா.**

**கேள்வி:** இலங்கையில் உள்ள சீனத் தூதுவர் இலங் கையில் இடம்பெற்ற தேர்தல் முடிவுகள் தொடர்பில் முரண்பாடான தகவல்களை கூறுவது ஏற்கக்கூடிய விடயம் அல்ல என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந் திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளாரே. சீனத் தூதுவர் தனது தூதுவர் பதவிக்கு பொருத்தம் இல்லாத விடயங்களில் தலையிடுவதையும் தமிழ் மக்கள் மத்தி யில் இனவாத கருத்துக்களை விதைப்பதையும் தவிர்த்து கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார். அப்படி அவர் என்ன தான் கூறியிருக்கிறார்.?

**வியுக்தியார்:** அவர் சொல்வது சரியானதுதானே? இதற்கு முன்னரும் பலதடவைகள் சீனத்தூதுவர் யாழ்ப் பாணம் வந்திருக்கிறார். அப்போதெல்லாம் அவரிடம் ஊடகவியலாளர்களோ அல்லது அவரைச் சந்தித்த சிவில் சமூக பிரதிநிதிகளோ, இலங்கை தமிழர் பிரச்னை யில் தலையிடுமாறு கேட்கின்றபோதெல்லாம், தமது நாடு ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடுவ தில்லை என்று பதிலளிப்பதையே வழக்கமாகக் கொண் டிருந்தவர் அவர். இப்போது மட்டும் ஒரு ராஜதந்திரி என்பதை மறந்து உள்நாட்டு அரசிலில் - அதாவது கடந்த தேர்தலில் தமிழ் மக்ககள் வாக்களித்த முறை பற்றி தமது கருத்தை அவர் சொல்லியிருப்பதை கண்டிக் கத்தானே வேண்டும். 'தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு

வாக்களித்து விட்டார்கள். இரண்டு தரப்புக்களும் ஒன்றிணைந்து செயற்பட ஆரம்பித்து விட்டன" என்று அவர் கூறியது ஏற்புடையதல்ல.

---

**அ. சிவகணேஸ்,**
**மறவன்புலவு, சாவகச்சேரி.**

**கேள்வி:** மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கை களை தீர்மானிப்பதற்கான கலந்துரையாடல் அடுத்த வாரம் இடம்பெறவுள்ளதாக, பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள் ளது. அதேவேளை, 'பொலிஸ் அதிகாரம், நிதியம் அமைக்கும் அதிகாரம் உட்பட மாகாணசபைகளுக்கு இதுவரை வழங்கப்படாத அதிகாரங்களை வழங்குவ தற்கு முயற்சி எடுக்கப்படுமானால் அதனை தடுப்பதற்கு முன்னின்று செயற்படுவோம்." - என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீர வன்ஸ தெரிவித்துள் ளாரே?.

**வியுக்தியார்:** ஏற்கனவே செயற்பாட்டில் இருந்த மாகாணசபைகளுக்கு தேர்தல் நடாத்துவது பற்றித்தான் அரச தரப்பில் ஆராயப்படுவதாக செய்திகள் வெளிவந்தி ருக்கின்றன. புதிதாக அதிகாரங்கள் வழங்குவது பற்றி யாரும் எங்கும் பேசியதாக இதுவரை தெரியவர வில்லை. அதைவிட முக்கியமானது விமல் வீரவன்சவும் தற்போ தைய ஆட்சியாளர்களான ஜேவிபியினருடன் இருந்த போது, அவர்கள் எப்படி இலங்கை இந்திய ஒப்பந்தத் தையும் இந்த மாகாண சபைகளையும் எதிர்த்தார்கள் என்பது விமல் வீரவன்சவுக்கு தெரியாததல்ல. மாகாண சபைகள் என்பது யானைகளை கட்டிவைத்து தீனிபோடு வதுபோன்ற அவசியமற்ற செலவுகளையே ஏற்படுத்து கின்றது என்று கூறிக்கொண்டிருந்தவர்கள்தான். ஆனால் நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலில் அவர்கள் வடக்கு கிழக்கில் வெற்றிபெற்றதும், அந்த வெற்றியைத் தொடர்ந்து உள்ளூராட்சி தேர்தலிலும் மாகாணசபைத் தேர்தலிலும் வெற்றிபெற்றால், இந்த நாட்டின் வரலாற் றையே மாற்றிவிடலாம் என்று அவர்கள் விரும்புவதும் நாம் புரிந்துகொள்ளக்கூடியதுதான். அதனால்தான் அவர்கள் தேர்தலை நடாத்த விரும்புகின்றார்கள் என்று தெரிகின்றது. ஆனால் விமல் வீரவன்ச போன்றவர்கள் இதுபோலக் கூறுவது அவர்கள் தாம் இழந்துபோன அரசியலை மீண்டும் தூக்கி நிறுத்துவதற்காகவே என் பது நமக்கு தெரிந்ததுதானே.

---

**எம். கௌதம்,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காகக் கோரப்பட்ட வேட்புமனுவை இரத்து செய்து மீண்டும் புதிய வேட்பு மனு கோரப்பட வேண்டும் என்று பொது ஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவ சம் தெரிவித்துள்ளாரே. கடந்த ஆண்டு வேட்புமனுவை தாக்கல்செய்தபோது நான்கு ஆண்டுகளுக்கான ஆட்சிக் காகத்தானே போட்டியிட வேட்புமனு தாக்கல் செய் தார்கள். பிறகு எதற்காக அதனை இரத்துச் செய்துவிட்டு புதிதாக வேட்புமனு கோரவேண்டும் என்று கேட்கிறார்கள்?

**வியுக்தியார்:** நியாயமான கேள்விதான். அவர்கள் நான்கு ஆண்டுகளுக்கான ஆட்சிக்காகத்தான் வேட்பு மனு தாக்கல்செய்தார்கள். ஆனால் அப்போது அவர் களது கட்சியிலிருந்தவர்கள் - அதாவது அவர்களின் வேட்பாளர் பட்டியலில் இருப்பவர்கள் இப்போது எந்தக் கட்சியில் இருக்கிறார்கள் என்பதே அவர்களுக்கு தெரிந்திருக்குமோ தெரியவில்லையே. அவர்களுக்கு மாத்திரமல்ல, அனேகமாக எல்லாக்கட்சிகளின் நிலை யும் இதுதான். ஆனால், தேசிய மக்கள் சக்தியில் மாத்தி ரம் அந்தச் சிக்கல் இருக்காது என்றாலும், இப்போது அவர்களின் கட்சியில் போட்டியிட பலரும் விரும்பு வார்கள் என்பதால் அவர்களும் சில வேளை புதியதாக வேட்புமனு கோரப்படுவதை விரும்பலாம். அதிகம் ஏன், யாழ்ப்பாண மாநகர சபைக்கு வேட்புமனுவை அவர்கள் தாக்கல் செய்த[illegible] ஒருவர் [illegible]வது வெற்றிபெறவேண்டும் என்ற நினைப்பில்தான் ஆட் களை வேட்பாளர்களாக தெரிவுசெய்திருப்பார்கள். இப் போது மாநகர ஆட்சியையே அவர்கள் கைப்பற்றலாம் என்பதால், அவர்கள் கட்சியில் போட்டியிட பலரும் விரும்புவதாகவும் கூறப்படுகிறதே. இதனால் புதிய வேட்மனுவை தாக்கல்செய்வதை அவர்களும் விரும்பு வார்கள். பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

---

**செல்வா. கேசவன்**
**சாங்கிலியன் வீதி, நல்லூர்.**

**கேள்வி:** தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் புகைப்படத்தை முகநூலில் பகிர்ந்தார் என்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தில் ஒரு வரை, பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் கைது செய்துள் ளனரே. மாவீரர் வாரத்தை மக்கள் நினைவு கூர்வதற்கு எதுவித தடையையும் ஏற்படுத்தாக ஆட்சியா ளர்கள், ஒரு மாவீரர் படத்தை பகிர்ந்ததற்காக எப்படி ஒருவரை கைதுசெய்திருக்கின்றனர்?. அவர் ஒரு இயக்கத் தலைவர் என்றாலும், அவரும் நினைவுகூரப்படுவது தவறில்லைத் தானே?

**வியுக்தியார்:** உங்கள் கேள்வி நியாயமானதுதான். அதுவல்ல, எமக்கு உறுத்துவது, புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாளன்று அவரது படத்து டன் அவருக்கு எழுபதாவது பிறந்தநாள் வாழ்த்துச் சொல்லி யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரி கைகள் எல்லாம் முதல் பக்கத்தில் செய்திவெளியிட்ட னவே. பத்திரிகைகளுக்கு இந்தச் சுதந்திரத்தை வழங்கிய பொலிசார், அப்பாவிகள் தமது விருப்பத்திற்கு எதையா வது செய்கின்றபோது அவர்களைக் கைதுசெய்வதைத் தான் புரிந்துகொள்ளமுடியவில்லை.

---

**ரி. ஜீவன்குமார்**
**வெள்ளவத்தை, கொழும்பு.**

**கேள்வி:** அம்பாறை மாவட்டத்தின் காரைதீவு மாவ டிப்பள்ளி பகுதியில் உழவுயந்திரம் வெள்ளத்தில் அடித் துச் செல்லப்பட்டதில் பலர் உயிரிழந்துள்ள அதே வேளையில் பலர் காணமல் போயுள்ளனர். அந்த அனர்த் தத்தில் நிந்தவூர் மதராசா கல்லூரி மாணவர்களும் பலியாகியிருக்கின்றனர். அதனால் அந்தக் கல்லூரி அதிபர் மற்றும் நிர்வாகிகள் கைதுசெய்யப்பட்டிருக் கின்றனர். இவர்கள் கைதுசெய்யப்பட்டது சரியானது என்று நினைக்கின்றீர்களா?

**வியுக்தியார்:** அவர்கள் கைதுசெய்யப்பட்ட பின்னர் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளதால், அது நீதிமன்ற விவகாரம் என்பதால் அதுகுறித்து கருத்துசெல்வது சரியானது அல்ல. ஆனால் பாலம் ஒன்றைக்கடந்து செல்லவேண்டிய பாதை ஒன்று வெள்ளத்தில் மூழ்கிவிட்டதால், அந்த பாதையூடாக உழவு யந்திரங்களில் மட்டும் மக்கள் பயணிக்க படையி னரும் பொலிசாரும் அனுமதி வழங்கியிருக்கின்றனர். அதிலும் கொடுமை என்னவென்றால், அந்த உழவு யந்திரத்தை செலுத்திய சாரதி பதினேழு வயதே நிரம் பிய சிறுவன் என்பதும், அவனும் இந்த அனர்த்தத்தில் பலியாகியிருப்பதும்தான். அந்த பாதையால் உழவுயந்தி ரம் மட்டுமே செல்லமுடியும் என்று தடைசெய்த பொலிசார், உழவுயந்திரத்தை சிறுவன் ஓட்டிச் சென்றதை கவனிக்காமல் இருந்திருக்கின்றனர் என்றால், முதலில் தண்டிக்கப்படவேண்டியவர்கள் இந்த அதிகாரிகள்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுப்பிக்கப்பட்ட ரஷ்ய அணுசக்தி கோட்பாடு:

ஐங்கரன் விக்கினேஸ்வரா

# அணு ஆயுத போருக்கு ரஷ்யா தயாராகிறதா?



ரஷ்யாவிற்குள் ஆழமாக சென்று தாக்க அமெரிக்க நீண்ட தூர ஏவுகணைகளை பயன்படுத்த உக்ரைனுக்கு பைடென் அரசு ஒப்புதல் அளித்த பிறகு, ரஷ்யாவின் அதிபர் புட்டின் அணுசக்தி கோட்பாட்டை மாற்றியுள்ளார்.

மூன்றாம் உலகப் போரைத் தடுப்பது குறித்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் பேச வேண்டிய சூழ் நிலையும் ஏற்பட்டுள்ளது. நாங்கள் இப்போது அணுசக்தி நிறைந்த மூன்றாம் உலகப் போருக்கு நெருங்க வேண்டியதாகி உள்ளது. இதற்கு முன்னைய பைடென் அரசே காரணம் என்று டிரம்ப் கூறியுள்ளார்.

நீண்ட காலமாக மேற்கத்திய நாடுகள் உக்ரைனுக்கு உதவுவதை நிறுத்த வேண்டும் என்று புட்டின் தொடர்ந்து எச்சரித்து வந்தார். எனினும், மேற்கத்திய நாடுகள் உக்ரைனுக்கு ராணுவ உதவிகளை வழங்கி வந்தன. அமெரிக்கா மற்றும் நேட்டோ நாடுகள், தாங்கள் வழங்கிய நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணையை பயன்படுத்த உக்ரைனுக்கு அனுமதி வழங்கினால், ரஷ்யா மற்றும் நேட்டோ இடையிலான போராக அது மாறும் என்று புட்டின் எச்சரித்திருந்தார்.

மேலும், அணு ஆயுதப் பயன்பாட்டுக் கொள்கையில் மாற்றம் கொண்டுவரப் போவதாக ரஷ்யா கூறி வந்தது. கடந்த செப்டம்பர் மாதத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. இந்நிலையில், தற்போது உக்ரைனுக்கு எதிரான போரில் அணு ஆயுதங்களைப் பயன்படுத்தும் வகையில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது. ரஷ்யாவின் இந்த அறிவிப்பு காரணமாக, ரஷ்யா - உக்ரைன் போர் தீவிரமடையும் சூழல் உருவாகியுள்ளது.

இதனிடையே, அமெரிக்க வழங்கிய நீண்ட தூரம் சென்று இலக்குகளை துல்லியமாக தாக்கும் ஏவுகணைகளை தங்கள் நாட்டின் மீது உக்ரைன் ஏவியாதாக ரஷ்ய ராணுவம் தெரிவித்துள்ளது.



### புதுப்பிக்கப்பட்ட ரஷ்ய அணுசக்தி கோட்பாடு:

ரஷ்ய அதிபர் புட்டின் "தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்ப எங்களது அணு ஆயுதக் கொள்கைகளில் மாற்றம் கொண்டு வருவது முக்கியம். அணு ஆயுதங்களை தவிர்ப்பதற்கான வழிகளையே நாங்கள் பார்க்கிறோம். ஆனால், அவற்றைப் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டால், எங்களுக்கு வேறு வழியில்லை. நாங்கள் அணு ஆயுதங்களைப் பயன்படுத்த நேரிடும். அணு ஆயுதம் இல்லாத நாடு அணு ஆயுதம் வைத்திருக்கும் நாட்டுடன் இணைந்து போரில் ஈடுபட்டால் அது கூட்டுத் தாக்குதலாகவே கருதப்படும்" என்று தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவும் அதன் நட்பு நாடுகளுக்கு எதிரான எதிரியின் சாத்தியமான ஆக்கிரமிப்பை நிறுத்துவது தனது அரசாங்கத்தின் முதன்மையான முன்னுரிமைகளில் ஒன்றாகும்.

ரஷ்யா, பெலாரஸ் ஆகிய இரு நாடுகளின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கு கடுமையான அச்சுறுத்தல் ஏற்பட்டால் ரஷ்யா அணு ஆயுதங்களைப் பயன்படுத்தலாம்.

அத்துடன் அணு ஆயுதங்களைப் பயன்படுத்த ரஷ்யாவின் தயார்நிலை மற்றும் உறுதிப்பாடு அணுசக்தி கட்டுப்பாட்டை உறுதி செய்யும். அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கான நிபந்தனைகளில் ஒன்று ரஷ்யாவில் பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஏவுவதாகும்.

ரஷ்யாவுக்கும் நட்பு நாடுகளுக்கு எதிராக பேரழிவு ஆயுதங்களைப் பயன்படுத்தினால் , பதிலாக அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கான உரிமையை ரஷ்யா கொண்டுள்ளது. அதன் போது ரஷ்யாவின் ஜனாதிபதி அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதில் முடிவெடுப்பார்.


தேவைப்பட்டால், அதைப் பயன்படுத்த ரஷ்யாவின் இந்த விஷயத்தில் அதன் முடிவைப் பற்றி மற்ற நாடுகளுக் கும் சர்வதேச அமைப்புகளுக்கும் தெரிவிக்க முடியும். ரஷ்ய அணுசக்தி கட்டுப்பாட்டு துறையில் அரசின் கொள்கையானது அணுசக்தி கட்டுப்பாட்டுக்கு போதுமான அளவில் அணுசக்திகளின் திறன்களை பராமரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இது தொடர்பான புதுப்பிக்கப்பட்ட ஆவணங்களில் ரஷ்ய அதிபர் புட்டின் கடந்த வாரம் 19.11.24இல் கையெழுத்திட்டுள்ளார்.


### ரஷ்ய அணு ஆயுதங்கள் தயார்:


ரஷ்யாவிடம் தற்போது 4,380 அணு ஆயுதங்கள் செயல்பாட்டில் இருப்பதாக அமெரிக்க விஞ்ஞானிகள் குழு நம்புகின்றனர். அதில், 1,700 எண்ணிக்கை தாக்குதலுக்கு தயாரான நிலையில் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அமெரிக்க விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

தரையிலும், கடலிலும், அணு ஆயுதங்களுடனும் ரஷ்யா எந்த நேரத்திலும் தாக்குதலுக்கு தயாராக உள்ளது என பல ஆண்டுகள் விளாடிமிர் புடினுடன் பணியாற்றிய மூத்த அதிகாரி ஒருவர் வெளிப்படுத்தியுள்ளார்.






ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு ரகசிய தளத்தில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் ஆயுதங்கள் தேவைப்படும் எந்த பகுதிக்கும் எப்போது வேண்டுமானாலும் அனுப்பி வைக்க தயாராக உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைன் மீதான போர் துவங்கிய முதல் நாளிலேயே ஆயுதங்கள்அந்த ரகசிய இடத்தில் குவிக்கப்பட்டுள்ளதாகவும், இப்படியான ஒரு நெருக்கடி உருவாகும் என விளாடிமிர் புட்டினுக்கு அப்போதே தெரியும் என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை கடல், நிலம், வான்வழி மற்றும் அணுசக்தி தாக்குதலுக்கும் கூட ரஷ்யா தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ரஷ்ய நாட்டுக்கு ஆபத்து என உணர்ந்தால் புட்டினால் உடனடியாக அணு ஆயுதங்களைப் பயன்படுத்த முடியும் என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### உக்ரைன் தளபதியின் மூன்றாம் உலகப் போர்?

மூன்றாம் உலகப் போர் அதிகாரப்பூர்வமாக துவங்கியுள்ளதாக உக்ரைன் முன்னாள் தளபதி வாலெரி ஜலுச்னி கூறியுள்ளமை பலத்த சர்ச்சையை உருவாக்கி உள்ளது. தற்போது ரஷ்யா - உக்ரைன் இடையிலான போரில் அமெரிக்கா நேரடியாக ஈடுபட்டுள்ளதுடன், வடகொரியா, ஈரான், சீனாவும் களத்தில் குதித்துள்ளன.

இதுகுறித்து உக்ரைன் முன்னாள் தளபதி வாலெரி ஜலுச்னி அளித்த பேட்டியில், 2024ம் ஆண்டில், ரஷ்யா - உக்ரைன் இடையிலான போரின் பரிமாணங்கள் மாற்றமடைந்துவிட்டன. உக்ரைன் தற்போது ரஷ்யாவுக்கு எதிராக மட்டுமல்ல, வட கொரிய சிப்பாய்களுக்கும் எதிராக போராடி வருகிறது.

உக்ரைனின் வெற்றி உறுதியானதில்லை. மேம்பட்ட தொழில்நுட்ப மற்றும் மேலதிக ஆதரவைப் பெறும் போது மட்டுமே சாத்தியமாகும். இன்றைய நிலையில் மூன்றாம் உலகப் போர் அதிகாரப்பூர்வமாக துவங்கியுள்ளது என்றே கூறலாம்.

முன்னதாக ரஷ்ய அதிபர் புட்டின், அமெரிக்க விமான எதிர்ப்பு ஏவுகணைகளை வெற்றிக்கரமாக பரிசோத்தித்தாக கூறியுள்ளார். இந்த ஏவுகணை ஒலியின் வேகத்தை விட பத்து மடங்கு வேகத்தில் பாயும் என்றும் கூறியுள்ளார்.

### அணு ஆயுத பாவனை?

அமெரிக்கா வழங்கிய நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்தும் பட்சத்தில், அந்நாட்டின் மீதான போரில் அணு ஆயுதங்களைப் பயன்படுத்த இருப்பதாக ரஷ்யா எச்சரித்து இருந்தது.

ரஷ்யா மீது தாக்குதல் நடத்த உக்ரைனுக்கு அமெரிக்கா உட்பட மேற்கத்திய நாடுகள் ராணுவ உதவி வழங்கி வந்தன. அதன் அடிப்படையில், நீண்ட தூரம் சென்று இலக்குகளை துல்லியமாக தாக்கும் ஏவுகணைகளை உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்கி இருந்தது.

எனினும், இந்த ஏவுகணைகளைப் பயன்படுத்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. தற்போது அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் பதவிக்காலம் முடிவடைய உள்ள நிலையில் தாங்கள் வழங்கிய நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணைகளை பயன்படுத்த உக்ரைனுக்கு பைடன் அனுமதி வழங்கியுள்ளார்.

இந்த ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்தும் பட்சத்தில் ரஷ்யாவுக்கு தீவிர பாதிப்பு ஏற்படும். இந்தச் சூழலில், உக்ரைனுக்கு எதிரான போரில் அணு ஆயுதங்களைப் பயன்படுத்த ரஷ்யா முடிவு செய்துள்ளது. இதற்கேற்ப தன் அணு ஆயுதக் கொள்கையில் ரஷ்யா மாற்றம் கொண்டு வந்துள்ளது.

அணு ஆயுதம் இல்லாத நாடான உக்ரைனுடன், அணு ஆயுதம் வைத்திருக்கும் நாடான அமெரிக்கா கூட்டணி வைத்து ரஷ்யா மீது போர்த் தாக்குதல் மேற்கொண்டால், பதிலுக்கு அந்நாட்டின் மீது ரஷ்யாவும் அணு ஆயுதங்களைப் பயன்படுத்தும் என்று ரஷ்யா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, பாலிஸ்டிக் ஏவுகணை உள்ளிட்ட நவீன ஏவுகணைகள், ட்ரோன்கள் மூலம் ரஷ்யா மீது வான்வழித் தாக்குதல் மேற்கொள்ளப்படும் பட்சத்தில், பதிலுக்கு அணு ஆயுதங்களைப் பயன்படுத்த நேரிடும் என்று ரஷ்யா எச்சரித்துள்ளமை உலகளாவிய அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுணாவில் பொது நூலகத்துக்குள் வைத்து பசுவை இறைச்சியாக்கிய இருவர் கைது!

## ஊழியரை காப்பாற்ற முற்பட்ட அதிகாரிகள்

யாழ்ப்பாணம், டிசெ. 01

சாவகச்சேரி நகர சபையின் நுணாவில் பொது நூலகத்தில் வைத்து பசு மாட்டை இறைச்சியாக்கி விற்பனை செய்த பொது நூலக ஊழியர் உட்பட்ட இருவர் அப்பகுதி இளைஞர்களால் பிடிக்கப்பட்டு சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நுணாவில் பொதுநூலகத்துக்கு அருகிலுள்ள காணியில் மேய்ச்சலுக்காக கட்டப்பட்ட பசுமாடு காணாமல் போனது.

இந்த நிலையில் பசுவின் உரிமையாளரும் அப்பகுதி இளைஞர்களும் தேடுதல் நடத்திய போது நூலக மதிலுக்கு அருகில் மாட்டின் தலை உள்ளிட்ட பாகங்களைக் கண்டனர்.

இதையடுத்து நூலகத்துக்குள் நுழைந்து பார்த்த பொழுது நூலக குளியலறைக்குள் வைத்து பசுவை இறைச்சியாக் கிய இரத்தக்கறைகளைக் கண்டுள்ளனர்.

இதனால் நூலக ஊழியர் மீது சந்தேகமடைந்த இளைஞர்கள் ஊழியரை விசாரித்த பொழுது இன்னொருவருடன் இணைந்து புதன்கிழமை கடமை நேரத்தில் மதியம் 1.00 மணியளவில் பசுவை இறைச்சியாக்கியதை ஒப்புக்கொண்டுள்ளார்.

இதையடுத்து மற்றையவரையும் பிடித்த இளைஞர்கள் நூலகத்தை உடனடியாகவே மூடி சாவகச்சேரி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்து இருவரையும் ஒப்படைத்தனர். இருவரையும் கைதுசெய்த பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளனர்.

இந்த நிலையில் சாவகச்சேரி நகர சபை நூலக ஊழியர் பசு மாட்டைத் திருடி இறைச்சியாக்கி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட விடயம் வெளியில் தெரிந்தால் நகர சபையின் பெயருக்கு அவதூறு ஏற்படும் எனத் தெரிவித்து இளைஞர்களோடு சமரச முயற்சியில் நகர சபை அதிகாரிகள் சிலர் ஈடுபட்ட போதும் இளைஞர்கள் அதற்கு சம்மதிக்காமல் இப்படியான ஊழியர்கள் பணியில் இருந்து நிரந்தரமாக நீக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர். (எ-05)

# 7 கஞ்சா தோட்டங்கள் சுற்றிவளைப்பு நான்கு துப்பாக்கிகளுடன் 8 பேர் கைது

கொழும்பு, டிசெ. 01

அம்பாந்தோட்டை, லுணுகம்வெஹெர காட்டுப் பகுதியில் 9 ஏக்கர் நிலப்பரப்பில் 7 கஞ்சா தோட்டங்கள் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டதோடு, 4 உள்நாட்டுத் துப்பாக்கிகளுடன் 8 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

புத்தல பொலிஸ் விசேட அதிரடிப் படை முகாமின் அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர்கள் தனமல்வெவ, சூரியவெவ பிரதேசங்களை சேர்ந்த 29 - 65 வயதுக்குட்பட்டவர்கள் ஆவர்.

சந்தேக நபர்களிடமிருந்து 4 உள்நாட்டுத் துப்பாக்கிகள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன. (எ)

# விசேட அதிரடிப்படையினருக்கு எதிராக சமூக ஊடகங்கள் மூலம் விசம பிரசாரம்

## ரூ. 6 கோடி செலவு செய்யப்பட்டதாக தகவல்

கொழும்பு, டிசெ. 01

போதைப்பொருள் கடத்தல் கும்பல் மற்றும் பாதாள உலகக் குழுக்களை எதிர்த்துப் போராடுவதில் தனித்துவமான பங்கை வகிக்கும் பொலிஸ் விசேட அதிரடிப்படையில் உள்ள உத்தியோகத்தர்களை இலக்கு வைத்து பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் சமூக ஊடக நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

விசேட அதிரடிப்படையில் உள்ள உத்தியோகத்தர்களை இலக்கு வைத்து, அவர்களுக்கு எதிராக சமூக ஊடகங்கள் மூலம் பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைத்து குறித்த பதவியில் இருந்து நீக்குவதற்கு தேவையான சூழலை உருவாக்க முயற்சிப்பதாக தெரியவந்துள்ளது.

போதைப்பொருள் கடத்தல் கும்பல் மற்றும் பாதாள உலகக் குழுவை ஒழிப்பதில் தனித்துவமான பங்கை வகிக்கும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கடந்த 4 மாதங்களில் மாத்திரம் ஏராளமான போதைப்பொருட்களை கைப்பற்றியுள்ளனர்.

350 கிலோ கிராம் ஹெரோயின், 140 கிலோ ஐஸ் போதைப்பொருள், 6,860 கிலோ கிராம் கேரள கஞ்சா உள்ளிட்ட மேலும் பல போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.சில நாட்களுக்கு முன்னர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது மீகொட பிரதேசத்தில் 'உனகுருவே ஷாந்த' என்பவருக்கு சொந்தமான ஒரு தொகை போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

மேலும், பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த பலரைக் கைது செய்து, தொடர்ந்து விசேட அதிரடிப்படையினர் பாதாள உலக எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் காரணமாக தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள ரத்கம விதுர, ஷிரான் பாசிக், மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள தெமட்டகொட சமிந்தவின் மகன் மலிஷ குணரத்ன, பெலாரஸில் கைது செய்யப்பட்ட லொக்கு பெட்டி, படுவத்த சாமர மற்றும் கஞ்சிபான இம்ரான் ஆகியோர் தலைமையில் சுமார் 6 கோடி ரூபாய் செலவில் சமூக ஊடக நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக படைத் தரப்பினர் கண்டுபிடித்துள்ளனர்.

வெளிநாட்டில் இருந்து பல யூ- ரியூப் சனல்களை நடத்தி வரும் குழுக்களிடம் பணத்தை கொடுத்து சமூகத்தின் நம்பகத்தன்மையை உடைக்கும் வகையில் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் செயலில் உள்ள அதிகாரிகள் குறித்து பொய்யான செய்திகளை பரப்புமாறு கூறியதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த அதிகாரிகள் தொடர்பில் சமூகத்தில் தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்தி அவர்களை இடமாற்றம் செய்து நாட்டில் தடையின்றி தமது கடத்தல் நடவடிக்கைகளை தொடர்வதே போதைப் பொருள் வியாபாரிகள் மற்றும் பாதாள உலகக் குழு உறுப்பினர்களின் இலக்கு எனவும் படைத் தரப்பினர் கூறியுள்ளனர். (எ)

# பன்றி வளர்ப்பு தொழில் முற்றாக அழியும் அபாயம்

கொழும்பு, டிசெ. 01

ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல் வைரஸ் வேகமாக பரவி வருவதால் கொஸ்கம மற்றும் பாதுக்க கால்நடை வைத்திய அதிகாரி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பன்றி வளர்ப்புத் தொழில் முற்றாக அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், தாங்கள் மிகவும் ஆதரவற்ற நிலையில் உள்ளதாக பன்றிப் பண்ணை உரிமையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கொஸ்கம மற்றும் பாதுக்க கால்நடை வைத்திய அதிகாரியின் எல்லைக்குட்பட்ட 176 பதிவு செய்யப்பட்ட பன்றிப் பண்ணைகளில் சுமார் 25,000 விலங்குகள் இருந்தன, ஆனால், தற்போது அந்த எண்ணிக்கை சுமார் 3,000 ஆகக்குறைந்துள்ளது.

இதனால், குறித்த தொழிலில் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஈடுபட்டு வந்த சுமார் 50, 000 பேர் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

ஆபிரிக்க பன்றிக் காய்ச்சலுக்கான தடுப்பூசி இல்லாதது நோய் வேகமாக பரவுவதற்கு காரணமாக இருப்பதாக கால்நடை அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ)

# தமிழ்த் தேசியவாத அரசியலின்...

(07ம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை கால அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது தமிழ் அரசியல் கட்சிகளிடையே ஐக்கியத்தை அல்லது ஒருமித்த அணுகுமுறையை எதிர்பார்ப்பதை போன்ற வீணான செயல் வேறு எதுவும் இருக்கப் போவதில்லை. கொள்கை வேறுபாடுகளுக்கு அப்பால் காலங்காலமாக தலைவர்களுக்கு இடையிலான தன்னகம்பாவமும் ஆளுமைப் போட்டியும் தமிழர் அரசியலின் பின்னடைவுக்கு முக்கியமான காரணிகளாக இருந்து வந்திருக்கின்றன. மிதவாத அரசியல் தலைவர்களை விடவும் ஆயுதமேந்திய தமிழ்த் தீவிரவாத இயக்கங்களின் தலைவர்கள் இதுவிடயத்தில் பல படிகள் மேலே சகோதரப் படுகொலைகளை சர்வசாதாரணமாகச் செய்தார்கள். அத்தகைய விபரீதமான போக்கு இப்போதும் வெவ்வேறு வடிவங்களில் தொடருகிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக, இன்றைய தமிழ் அரசியல்வாதிகள் கடந்த பதினைந்து வருடகாலமாக தாங்கள் கடைப்பிடித்துவந்த கொள்கைகளும் அணுகுமுறைகளும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதை நோக்கிய திசையில் ஒரு அங்குலமேனும் முன்னோக்கிய நகர்வுக்கு உதவியிருக்கிறதா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அரசியல் தீர்வைத் தரவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு என்ற போதிலும், இலங்கையில் தொடர்ந்தும் வாழ்ந்தால் தங்களுக்கு ஒரு எதிர்காலம் இருக்கும் என்று தமிழ் மக்களுக்கு கொஞ்சமேனும் நம்பிக்கை ஏற்படக்கூடியதாக தங்களது இதுவரையான செயற்பாடுகள் அமைந்திருந்தனவா என்பதையும் தமிழ் அரசியல்வாதிகள் ஆழமாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

தமிழ்த் தேசியவாதம் பாதுகாக்கப்பட வேண்டுமானால் நிலப்பிராந்தியம் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கு அந்த நிலப்பிராந்தியத்தில் மக்கள் வாழவேண்டும். மக்களும் நிலமும் இல்லாமல் எந்த தேசியவாதத்தையும் பாதுகாக்க முடியாது.

வடக்கு, கிழக்கில் தொடர்ந்து வாழ்ந்தால் தங்களுக்கும் தங்களது எதிர்காலச் சந்ததிகளுக்கும் நல்ல எதிர்காலம் இருக்கும் என்ற நம்பிக்கை இல்லாவிட்டால் வடக்கு, கிழக்கில் தமிழர்களில் கணிசமான பிரிவினர் அங்கே தொடர்ந்து வாழ விரும்பப்போவதில்லை. அரசியல்வாதிகள் வீடுவீடாகச் சென்று ஒரு ஆய்வைச் செய்து பார்த்தால் எத்தனை தமிழர்கள் வெளிநாடுகளுக்கு செல்வதில் நாட்டம் காட்டுகிறார்கள் என்பதை அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். மக்கள் இல்லாத மண்ணில் தேசியவாதத்தைக் காப்பாற்றுவதற்கு என்ன இருக்கிறது?

தற்போது பாராளுமன்றத்துக்கு தெரிவாகியிருக்கும் தமிழ்ப் பிரதிநிதிகள் தேர்தலில் மக்கள் புகட்டிய பாடத்துக்கு பின்னராவது தங்களது முன்னைய போக்குகளை மாற்றிக்கொண்டு ஒன்றுபட்டுச் செயற்படுவார்களா என்பது முக்கியமான ஒரு கேள்வி.

தேர்தலுக்கு பிறகு கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரை தனித்தனியாகச் சந்தித்த கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் தமிழரசு கட்சியின் பாராளுமன்ற குழுவும் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா இலங்கையின் புதிய அரசாங்கத்தின் மீது நெருக்குதல்களைக் கொடுக்கவேண்டிய அவசியம் பற்றியே வலியுறுத்தியதாக தெரியவருகிறது.

இந்தியா உட்பட சர்வதேச வல்லாதிக்க நாடுகள் இலங்கை மீது நெருக்குதல்களைக் கொடுக்கும் என்ற நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு இதுவரை கடைப்பிடித்த அணுகுமுறைகள் எந்தளவுக்கு பயனளித்திருக்கின்றன என்பதையும் தமிழ்க் கட்சிகள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். முன்னைய அரசாங்கங்களுடன் கடைப்பிடித்த அதே அணுகுமுறைகளை விடுத்து வேறுவிதமாக புதிய அரசாங்கத்தைக் கையாளுவதற்கான சாத்தியங்கள் குறித்தும் ஆராயவேண்டும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிய அரசியலமைப்பை கொண்டுவரப்போவதாக அறிவித்திருக்கும் நிலையில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பெரும் பொறுப்பு காத்திருக்கிறது. நிலைவரங்கள் வேண்டிநிற்பதற்கு ஏற்ற முறையில் தொலைநோக்குடனும் அரசியல் விவேகத்துடனும் அவர்கள் செயற்படத் தவறினால் அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தையும் கைவிட்டு இறுதியில் எதையுமே பெறமுடியாத ஒரு மக்கள் கூட்டமாக தமிழ் மக்கள் விடப்படும் நிலையே உருவாகும்.

இறுதியாக, இலங்கை தமிழர்களின் அரசியலை தங்களது விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றமுறையில் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் நோக்குடன் பணத்தை வீசியெறிந்த புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் உள்ள சக்திகளுக்கும் பாராளுமன்றத் தேர்தல் ஒரு பாடமாக அமைந்திருக்கிறது. ●

# யேர்மனி - தமிழ்...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

கவிஞர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், இலக்கியவாதிகள் எனப் பலர் வாழ்த்துரை நிகழ்த்தினார்கள். நூலாசிரியர் சந்திரகௌரி சிவபாலன் அவர்களின் செயத்திறங்கள் பற்றியும் நூல் பற்றியும் பல கருத்துகளை முன்வைத்து பாராட்டியிருந்தனர்.

இறுதி நிகழ்வாக ஏற்புரையுடன் நன்றி உரையையும் இணைத்து நூலாசிரியரான கௌரி சிவபாலன் அவர்கள் நிகழ்த்தினார். நூல் எழுதத்தொடங்கியதில் இருந்து வெளியீட்டு விழா நடைபெறும் வரை உதவியவர்களை நன்றியுடன் நினைவு கூர்ந்தார். நிகழ்வில் கலந்து சிறப்பித்தவர்களையும் பாராட்டி நன்றி கூறினார்.

குருவிக்கூடு நூல் முதலில் இந்தியாவில் முச்சங்கம் அமைத்து முத்தமிழ்வளர்த்த மதுரை தமிழ் சங்கத்தில் அரங்கேற்றம் செய்யப்பட்டமை இந்நூலின் தரத்தினை பறைசாற்றி நிற்கின்றது. எழுத்துலகில் கௌசி என்ற அடையாளத்துடன் பவனிவந்துகொண்டிருக்கும் நூலாசிரியர் இன்னும் பல இலக்கியங்களை உருவாக்கி சிறப்புகள் பல பெற்று வாழ மனதார வாழ்த்தி மகிழ்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஸில்...

ராஜபக்ஷவே வழிநடத்தினார். ஓரிரு
கூட்டங் களில் கட்சித் தலைவர் மகிந்த
ராஜபக்ஷ பங்கேற்றிருந்தார்.

இந்நிலையில் உள்ளூராட்சித் தேர்
தலை வழிநடத்த பஸில் வரவேண்டும்
என கட்சிச் செயற்பட்டாளர்கள் சிலர்
கோரி இருந்தாலும், அமெரிக்கா வில்
இருந்து நாடு திரும்பும் எண்ணம்
இல்லை என பஸில் தரப்பில் அறிவிக்கப்
பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலை கட்சியின்
தேசிய அமைப்பாளரான நாமல் ராஜ
பக்ஷவே வழிநடத்துவார் எனவும்,
இரண்டாம் தலைமைத்துவத்தை உரு
வாக்குவதற்கான ஒத்திகைக் களமாக
உள்ளூராட்சித் தேர்தல் பயன்படுத்தப்
படவுள்ளது எனவும் பஸில் தரப்பில்
தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## உள்ளூராட்சி...

அனைத்துக் கட்சி தலைவர்களும்
இணக்கம் தெரிவித்துள்ளனர். நாங்க
ளும் அதற்கு இணக்கம் தெரிவித்தோம்-
என்றார்.

அமைச்சர் பிமல் ரத்நாயக்க, ஏனைய
கட்சித் தலைவர்களான சஜித் பிரேம
தாச, நாமல் ராஜபக்ஷ, எம். சிறீதரன்,
ரவூப் ஹக்கீம், ரவி கருணாநாயக்க
மற்றும் சபாநாயகர் கலாநிதி அசோக
ரன்வல, பிரதமர் கலாநிதி ஹரிணி
அமரசூரிய ஆகியோரும் இந்தக் கட்சித்
தலைவர்கள் கூட்டத்தில் பங்கேற்றனர்.

இதன்படி, 2022ஆம் ஆண்டு நடை
பெறவிருந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்
தலுக்காக கோரப்பட்ட வேட்புமனுக்
களை இரத்துச் செய்வதற்கு சிறப்பு
தீர்மானம் ஒன்று பாராளுமன்றத்தில்
கொண்டு வரப்படவுள்ளது.

மேலும், 2022ஆம் ஆண்டு வாக்கா
ளர் பட்டியலைப் பயன்படுத்தி வாக்குப்
பதிவு நடத்தப்பட்டால், பதிவு செய்யப்
பட்ட சுமார் 4 லட்சம் வாக்காளர்க
ளுக்கு பெரும் அநீதி ஏற்படும் என்று
இந்தக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்
டுள்ளது. (அ)

## இலங்கையில்...

புதிய அரசாங்கம் அமைக்கப்பட்ட
பின்னர் ஜப்பான் புதிய திட்டங்களை
உறுதியளித்துள்ளதா என்ற கேள்விக்கே
தூதரகம் இந்த பதிலை வழங்கியுள்ளது.

தற்போது நடைபெற்று வரும் 11
திட்டங்களின் நிலை குறித்து கருத்து
ரைத்துள்ள தூதரகம், பண்டாரநாயக்க
சர்வதேச விமான நிலைய விரிவாக்க
திட்டம் உட்பட பெரும்பாலானவை
சுமுகமாக மேற்கொள்ளப்பட்டு வருவ
தாக தெரிவித்துள்ளது.

இதன்படி, ஜப்பானிய நிதியுதவியு
டன் களு கங்கை நீர் வழங்கல் விரிவாக்
கத் திட்டம், அனுராதபுர வடக்கு நீர்
வழங்கல் திட்டம், கண்டி நகர கழிவு நீர்
முகாமைத்துவத் திட்டம், மேல் மாகாண
திண்மக் கழிவு முகாமைத்துவத்தை உரு
வாக்குவதற்கான திட்டம், திறன் அபிவி
ருத்திக்கான திட்டம், நகர்ப்புற திட்ட
மிடல், நீர் பொறியியல் மற்றும் பயன்
பாட்டு மேலாண்மை எதிர்கால தலை
வர்கள் பயிற்சி திட்டம், மனித வள
மேம்பாட்டுக்கான திட்டம் புலமைப்
பரிசில், பயனுள்ள பொது முதலீட்டு
முகாமைத்துவத்திற்கான திறன் மேம்
பாட்டுக்கான திட்டம், டெரஸ்ட்ரியல்
ரிவி ஒளிபரப்பு திட்டத்தின் டிஜிற்றல்
மயமாக்கல் மற்றும் இலங்கையில்
வடக்கு மாகாணத்தில் உள்ள மீன்பிடி
மற்றும் விவசாய கிராமங்கள், பால்வள
மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை
ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2024, ஜூலை 22 அன்று இலங்கை
தொடர்பில் அனைத்து அதிகாரபூர்வ
கடன் குழு உறுப்பினர்களும் புரிந்து
ணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட
தைத் தொடர்ந்து ஜப்பான், இலங்கை
யில் அதிகாரபூர்வமாக 11 கடன் திட்
டங்களை மீண்டும் ஆரம்பிக்க முடிவு
செய்தது. (அ)

## விடுதலைப்...

மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுக
ளுக்கு நாம் முழுமையான எதிர்ப்பைப்
பதிவு செய்கின்றோம்.

விடுதலைப்புலிகள் அமைப்பு
என்பது அமைப்பாகும் எனவே அந்த
அமைப்பை நினைவுகூர முடியாது.
எனது தந்தையையும் விடுதலைப்புலி
களே கொலை செய்தனர்.

புலிகளுடன் தொடர்புடையவர்
களை நினைவுகூருவதற்கு நிரந்தரத்
தடை விதிப்பது தொடர்பான உறுதி
யான முடிவை அநுர அரசு எடுக்க
வேண்டும் - என்றார். (அ)

## சுவிஸ்...

இல்லத்தில் நேற்று முன்தினம்
நடைபெற்ற இந்த சந்திப்பின்போது,
இலங்கையிலிருந்து சுவிஸ் நாட்டுக்கு
புலம்பெயர்ந்த தமிழர்களின் புகலிடக்
கோரிக்கைகள் தொடர்பில் சுவிஸ்
அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பி
லும், இந்த ஆண்டு தமிழ்த்தேசிய
மாவீரர் நாள் ஏற்பாடுகள் உள்ளிட்ட சம
கால அரசியல் நிலைவரங்கள் தொடர்
பில் கலந்துரையாடப்பட்டமை குறிப்பி
டத்தக்கது. (அ)

## எரிபொருள்...

அதேநேரம் மண்ணெண்ணெயின்
விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு
அதன் புதிய விலை 188 ரூபாவாக நிர்ண
யிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஒக்ரைன் 95 ரக
பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 371
ரூபாவாகவும், சுப்பர் டீசல் லீற்றர்
ஒன்றின் விலை 313 ரூபாவாகவும்
மாற்றமின்றி தொடரும் என தெரிவிக்
கப்பட்டுள்ளது. (அ)

## இறந்த...

உயிரிழந்த உறவுகளை உரிய தினத்தில்
நினைவு கூர்வர். அவ்வாறாக உறவுகளை
நினைவு கூர அனைவருக்கும்
உரிமையுண்டு. பயங்கரவாத்தின்
அடிப்படையில் செல்லாது சாதாரண
முறையில் இடம்பெற்றால் அதில்
எமக்கு எதிர்ப்பு இல்லை.

ஐக்கிய தேசிய கட்சி அதனை
பிழையாக பார்க்காது. மாறாக அந்த
போர்வையில் மீண்டும் இனவாத்தை தூ
ண்ட இடமளிக்க முடியாது.எது
எவ்வாறாக இருப்பினும் பாராளுமன்ற
உறுப்பினர் இனவாத்தை தூண்டி அர
சாங்கத்தை காட்டிக்கொடுப்பிற்குள் உள்
ளாக்கினால் அதனை ஏற்றுக்கொள்ள
முடியாது.

இந்த விடயத்தில் திரிவுபடுத்தப்
பட்ட செய்திகளும் பரப்பப்படுகின்றன.
ஆகவே நாட்டினுள் தேசிய நல்லிணக்
கத்திற்கு பங்கம் விளைவிக்கும் விட
யத்தை மேற்கொள்ள முடியாது - என்
றார். (அ)

## வெளிநாடுகளில்...

ஆசிரியர்களிடமோ பணம் கோரக்
கூடாது என ஆளுநர் அங்கு அழுத்தம்
திருத்தமாகத் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு
அலுவல்கள் விளையாட்டுத்துறை
இளைஞர் விவகார அமைச்சின்
துறைசார் மீளாய்வுக் கூட்டத்திலேயே
இக்கருத்தை ஆளுநர் வெளியிட்டார்.
"வடக்கில் 12 மாணவர்களுக்கு ஒரு
ஆசிரியர் இருக்கின்றார். ஆனால்
நாட்டில் சராசரியாக 17
மாணவர்களுக்கே ஒரு ஆசிரியர்" எனச்
சுட்டிக்காட்டிய வடக்கு மாகாணக்
கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக்
டிறஞ்சன், வடக்கில் பாட ரீதியாகவே
ஆசிரியர் பற்றாக்குறை இருப்பதாகக்
குறிப்பிட்டார்.

யாழ் பல்கலைக்கழகத்தின்
கலைப்பீடப் பட்டதாரி ஆசிரியர்களால்
கலைப்பாடங்களுக்கான ஆசிரியர்கள்
தேவைக்கதிகமாக குவிக்கப்பட்டுள்ளது
எனவும் சுட்டிக்காட்டப்பட்டது. (அ)

# மதுப் பாவனையில் இருந்த கணவனை திருத்த முயற்சித்த மனைவி உடலில் தீப்பற்றி மரணம்!

யாழ்ப்பாணம்,டிசெ.01

மதுப் பாவனையில் இருந்த கண
வனை திருத்த முயற்சித்த மனைவி உட
லில் தீப்பற்றி உயிரிழந்துள்ளார். இதன்
போது பாலையூற்று, திருகோண மலை
யைச் சேர்ந்த பிரதீபன் நளினி (வயது 31)
என்ற ஒரு பிள்ளையின் தாயே இவ்வாறு
உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய
வருகையில்,

குறித்த பெண்ணின் கணவர் தினமும்
மது அருந்தி வந்துள்ளார். இந்நிலையில்
அவரை திருத்துவதற்காக குறித்த பெண்
கடந்த 21ஆம் திகதி தனது உடலில் மண்
ணெண்ணெயை ஊற்றிவிட்டு தீப்பெட்
டியில் இருந்து தீ மூட்டுவேன் என்று
கணவனை மிரட்டிக்கொண்டிருந்த
வேளை திடீர் அவர்மீது தீப்பற்றியது.
அவரை காப்பாற்ற முயன்ற கணவனின்
மீதும் தீப்பற்றியது.

இதன்போது இருவரும் திருகோண
மலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்
பட்டனர்.

மனைவியை பின்னர் மேலதிக
சிகிச்சைக்காக கடந்த 27ஆம் திகதி
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை
யில் சேர்க்கப்பட்டார் எனினும் சிகிச்சை
பலனின்றி அவர் நேற்றுமுன்தினம்
உயிரிழந்தார்.

மரண விசாரணையை திடீர் மரண
விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்
குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரி
சோதனைகளின் பின்னர் சடலம் உறவி
னர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (05)

# 3,75,000 ஏக்கர் பயிர்ச்செய்கை சீரற்ற காலநிலையால் பாதிப்பு

கொழும்பு, டிசெ. 01

சீரற்ற காலநிலையால் சுமார் 3, 75,
000 ஏக்கர் பயிர்ச்செய்கை நிலம் நீரில்
மூழ்கியுள்ளதாக விவசாய மற்றும் கமநல
காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

வெள்ளம் வடிந்தவுடன் பயிர்ச்சேத
மதிப்பீடுகள் ஆரம்பிக்கப்படும் என்று
அந்தச் சபையின் தலைவர் ஹேமசிறி
ஜசிங்கராச்சி தெரிவித்தார்.

இதேவேளை, வெள்ளத்தால் அழி
வடைந்த ஆறு வகையான பயிர்களுக்கு
இழப்பீடு வழங்கப்படும் என்று விவசாய
பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன
அறிவித்துள்ளார்.(எ)

# தந்தையும் மகனும் இணைந்து மோசடி!

## மூடப்படும் அபாயத்தில் தனியார் வங்கி

கொழும்பு, டிசெ. 01

இலங்கையில் தந்தையும் மகனும்
இணைந்து செய்த மோசடியினால் தனி
யார் வங்கி ஒன்று மூடப்படும் அபாயம்
தோன்றியுள்ளதாக கொழும்பில் இருந்து
வெளிவரும் இணையத்தளம் ஒன்று
செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று முன் தினம்
வெள்ளிக்கிழமை வெளியான அந்த
இணையத்தளத்தின் முழுமையான
செய்தியில்-

இலங்கையில் அண்மைய நாட்களாக
பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய பல
பில்லியன் ரூபா சுங்க வரி மோசடியில்
ஈடுபட்ட நிறுவனம் ஒன்றின் தலைவர்
கள் இருவரினால் மேற்கொள்ளப்பட்ட
நிதி மோசடி காரணமாக தனியார் வங்கி
ஒன்று ஆபத்தில் சிக்கியுள்ளதாக தெரி
விக்கப்படுகின்றது.

நிறுவனத்தின் உரிமையாளரான
தந்தை மற்றும் மகன் இருவரும்
இணைந்து மூன்று பில்லியன் ரூபா
மோசடி செய்ததன் காரணமாக, இந்த
தனியார் வங்கி பெரும் அச்சுறுத்தலுக்கு
உள்ளாகியுள்ளது.

குறித்த மகன், தவறான நிதிப் பதி
வேடுகளைக் காட்டி, வங்கிக் கடன்
ஒன்றின் ஊடாக 2.4 பில்லியன்
ரூபாவுக்கு பிரித்தானியாவில் வங்கு
ரோத்தான நிறுவனம் ஒன்றை வாங்கிய
துடன், அந்த நிறுவனத்திடம் கடனைத்
தவிர வேறு சொத்துக்கள் எதுவும்
இல்லை என பின்னர் தெரியவந்துள்
ளது.

தந்தையும் மகனும் நிறுவனப்
பணியாளர்களை ஏமாற்றியுள்ளதாகவும்,
இருவரும் வெளிநாட்டு குடியுரிமை
பெற்றவர்கள் என்பதால், அவர்கள் மீது
நடவடிக்கை எடுப்பதில் அரசுக்கு சிரமம்
ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படு
கின்றது.

இந்த நிறுவனத்தின் மொத்த
மாதாந்த வருமானத்தை விட கடன்
வட்டி அதிகரித்துள்ளதாகவும், அடுத்த
சில மாதங்களில் இது தொடர்பான
மூன்று பில்லியன் வாராக் கடனாக
மாறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம்
எனவும், இது இடம்பெற்றால் இந்த
தனியார் வங்கிக்கு பாரிய நிதி நெருக்கடி
ஏற்படும் அபாயம் உருவாகும்.

இந்த நிறுவனத்தின் தலைமை நிதி
அதிகாரி மற்றும் தலைமை செயல்
அதிகாரி ஆகியோர் தங்களது பணி
விலகல் கடிதத்தை தற்போது கைய
ளித்துள்ளதாகவும் தெரியவருவதாக
தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## அனர்த்தங்களால்...

மழை, வெள்ளம் போன்ற அனர்த்
தங்களால் ஓர் இலட்சத்து 38 ஆயிரத்து
944 குடும்பங்களைச் சேர்ந்த 4 இலட்
சத்து 65 ஆயிரத்து 746 பேர் பாதிக்கப்
பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்
துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்
ளது.

சீரற்ற வானிலையால் ஏற்பட்ட
அனர்த்தத்தில் சிக்கி இதுவரை 19 பேர்
காயமடைந்துள்ளனர்.

இதேவேளை, 98 வீடுகள் முழுமையா
கவும் 2,333 வீடுகள் பகுதியளவிலும்
சேதமடைந்துள்ளன.

நாடளாவிய ரீதியில் 245 இடைத்
தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ள
நிலையில், 8 ஆயிரத்து 984 குடும்பங்க
ளைச் சேர்ந்த 29 ஆயிரத்து 596 பேர்
இடைத்தங்கல் முகாம்களிலும் உறவினர்
கள் வீடுகளிலும் தங்கவைக்கப்பட்டுள்
ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(எ)

## யாழ்.மாவட்ட...

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்
வளங்கள் அமைச்சருக்கும் யாழ்ப்பாண
மாவட்ட அரசாங்க அதிபருக்கும் கடி
தம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.
(அ-05)

## மாவீரர்...

மற்றொருவர் நேற்று கைது செய்யப்
பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.
குறித்த நபர், மாவீரர் தின நிகழ்வுகளை
ஊக்குவித்ததாகக் கூறப்படும் பேஸ்புக்
கணக்குக்கு உரித்துடையவர் எனவும்
தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

## தென்மராட்சி பிரதேசத்தில் மட்டும் 20 இடைத்தங்கல் முகாம்களில் இதுவரை மக்கள் தங்கவைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 01

மழை, வெள்ள அனர்த்தம் காரணமாக யாழ். தென்மராட்சி பிரதேசத்தில், இடம்பெயர்ந்த மக்கள் 20 இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 415 குடும்பங்களைச் சேர்ந்த 1,477 பேர் இவ்வாறு தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வீடுகளுக்குள் வெள்ளம் நிறைந்துள்ளதால் அவற்றை வெளியேற்றும் நடவடிக்கையில் சாவகச்சேரி பிரதேச செயலகம், சாவகச்சேரி பிரதேச சபை ஆகியவற்றுடன் இணைந்து இராணுவத்தினரும் ஈடுபட்டுள்ளனர். (எ)

## சஜித் தாய் வீடு திரும்பவேண்டும்

### அழைக்கிறார் நவீன் திஸாநாயக்க

கொழும்பு, டிசெ. 01

**ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஐக்கிய தேசியக் கட்சிக்கு திரும்பவேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார் முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

கட்சி பிளவுபட்டிருந்தால் தோல்விகள்தான் குவியும். நாம் இணைந்தால்தான் வெற்றியை நோக்கி நகரமுடியும். எனவே, எதிர்காலத்தில் நாம் அனைவரும் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சியாக பயணிக்கவேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறிய எனது தந்தை காமினி திஸாநாயக்க, 1994 இல் ஐக்கிய தேசியக் கட்சிக்கு திரும்பினார். பிரதித் தலைவராகி, ஜனாதிபதி தேர்தலிலும் போட்டியிட்டார். அதேபோன்றதொரு நடவடிக்கையை சஜித் முன்னெடுக்கவேண்டும்.

அவர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வரவேண்டும். கட்சியின் எதிர்கால வேலைத்திட்டம் தொடர்பில் கட்சி தலைவர் ரணிலுடன் கலந்துரையாடி முன்னோக்கிச் செல்லவேண் டும்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு இரண்டாம் தலைமைத்துவமொன்று உருவாக்கப்பட வேண்டும் - என்றார். (அ)

## தற்காலிகமாக மூடப்பட்டது சென்னை விமான நிலையம்

சென்னை, டிசெ. 01

பெங்கால் புயல், கனமழை காரணமாக சென்னை விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சென்னையில் பலத்த காற்றுடன் கனமழை பெய்து வருவதால் விமானங்கள் இயக்குவதில் சிரமம் காரணமாக விமான நிலையம் மூடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இண்டிகோ விமானங்கள் அனைத்தும் இரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து சென்னைக்கு வந்து சேர வேண்டிய 12 விமானங்கள் இரத்து செய்யப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டது. விமான ஓடுபாதையில் மழை நீர் சூழ்ந்திருப்பதால் விமான நிலையம் தற்காலிகமாக மூடப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## அரசாங்க வைத்தியசாலைகளில் மருந்துப் பொருள் பற்றாக்குறை!

கொழும்பு, டிசெ. 01

அரசாங்க வைத்தியசாலைகளில் மருந்துப் பொருட்களுக்கு பற்றாக்குறை நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மருத்துவ விநியோகப் பிரிவின் அறிக்கைகளின் பிரகாரம் சுமார் 300 மருந்துப் பொருட்களுக்கு பற்றாக்குறையாக காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களது சங்கத்தின் அழைப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சமால் சஞ்சீவ இந்த விடயத்தை தெரிவித்தார்.

வைத்தியசாலைகளுக்கு தேவையான மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்யும் பொறிமுறைமையில் ஏற்பட்டுள்ள கால தாமதம் காரணமாக இவ்வாறு மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு இடையூறு ஏற்படுத்தும் அதிகாரிகள் இருந்தால் அவர்களை பணி நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென அவர் தெரிவித்தார்.

நீரிழிவு நோயாளிகள், நோய் எதிர்ப்பு சக்தி குறைவானவர்கள் உள்ளிட்ட பல்வேறு நோயாளிகளுக்கு வழங்கப்படவேண்டிய மருந்துப்பொருட்கள் இவ்வாறு பற்றாக்குறையாக காணப்படுகின்றது என தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களிலும் இந்த மருந்துப் பொருட்கள் பற்றாக்குறையாக காணப்பட்டதாகவும் இதனால் சில மரணங்கள் பதிவானதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த சம்பவங்கள் தொடர்பிலும் விரிவான விசாரணைகள் நடத்தப்படவேண்டுமென மருத்துவர் சமால் சஞ்சீவ கோரியுள்ளார். (அ)

## ஐக்கிய மக்கள் சக்தியை மறுசீரமைக்கவேண்டும்!

### ஹிருணிகா கோரிக்கை

கொழும்பு, டிசெ. 01

ஐக்கிய மக்கள் சக்தி மறுசீரமைக்கப்பட வேண்டும் என்று அக்கட்சியின் மகளிர் அணி தேசிய அமைப்பாளர் ஹிருணிகா பிரேமச்சந்திர வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

அநுரகுமார திஸாநாயக்க தலைமைத்துவத்தை ஏற்ற பின்னரும் ஜே.வி.பி. தோல்வி கண்டது. எனினும், பாரிய மாற்றங்களை அநுர ஏற்படுத்தினார். ஜே.வி.பி. தேசிய மக்கள் சக்தியாக மாறியது. தனது நடை, உடை என எல்லா விதத்திலும் அநுர மாறினார்.

ஜே.வி.பியின் கொள்கைகளும் தகர்த்தப்பட்டன. இறுதியில் இன்று ஆட்சியைக் கைப்பிடித்துள்ளனர். ஜே.வி.பியாகவே இருந்திருந்தால் அவர்களால் இன்று ஆட்சியை பிடித்திருக்க முடியாது.

அதிகாரத்தை பெறுவதுதான் அரசியல்வாதிகளின் இலக்காக இருக்கவேண்டும். எனவே, ஐக்கிய மக்கள் சக்தியும் மறுசீரமைக்கப்படவேண்டும்.

தலைமைப் பதவியில் சஜித் இருக்கட்டும். இரண்டாம் தலைமைத்துவமொன்று உருவாக்கப்பட வேண்டும். உண்மையான சஜித் யார் என்பதை மக்கள் மயப்படுத்த வேண்டும். ஐக்கிய மக்கள் சக்திக்குரிய சமூக ஊடகக் கட்டமைப்பையும் வலுப்படுத்த வேண்டும் - என்றார். (அ)

## வவுனியா வைத்தியசாலையில் முதன்முறையாக ஒரே சூலில் உருவாகிய 4 குழந்தைகள் பிரசவிப்பு!

வவுனியா, டிசெ. 01

பதவியாவைச்சேர்ந்த கர்ப்பவதியொருவர் நேற்று முன் தினம் இரவு பிரசவ வலியுடன் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவருக்கு சிசேரியன் அறுவைச் சிகிச்சை மூலம் 4 குழந்தைகள் பிரசவித்தன.

மேற்படி தாயார் மகப்பேற்று வைத்திய நிபுணர் காமினியால் தொடர்ச்சியாக பரிசோதிக்கப்பட்டு வந்துள்ளதுடன் அவரது மகப்பேற்று வைத்திய விடுதியாகிய 7ஆம் விடுதியில் அனுமதிக்கப்பட்டு வைத்தியர் திலீபனால் சிசேரியன் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு நான்கு குழந்தைகளும் பிரசவித்தன.

குறிப்பாக வவுனியா வைத்தியசாலையில் நான்கு குழந்தைகள் ஒரே பிரசவத்தில் பிரசவிக்கப்படுவது இதுவே முதன்முறையாகும்.

மேற்படி தாயாரும் குழந்தைகளும் நலமாகவுள்ளதுடன், நான்கு குழந்தைகளும் சிறப்பு குழந்தை நலப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. (அ-10)

## மண்சரிவு எச்சரிக்கை நீடிப்பு

கொழும்பு, டிசெ. 01

சீரற்ற காலநிலை காரணமாக, 9 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை இன்று மாலை 4.00 மணி வரை மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

பதுளை, கண்டி, கேகாலை, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களுக்கு, இரண்டாம் நிலை அபாயத்தை வழங்க, தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டது.

இதுதவிர, கொழும்பு, கம்பஹா, குருணாகல் மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில், மண்சரிவு அபாயம் உள்ள பகுதிகளுக்கும், மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

## ஹெரோயினுடன் ஒருவர் கைது!

கொழும்பு, டிசெ. 01

கொழும்பு , மொரட்டுவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முரவத்த பிரதேசத்தில் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்று கைது செய்யப் பட்டுள்ளதாக மொறட்டுவை பொலிஸார் தெரிவித்தனர்.

மொறட்டுவை பொலிாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின்போதே சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் இருந்து 07 கிராம் 260 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மொறட்டுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டு; பொலிஸ் அதிகாரி கைதானார்

கொழும்பு, டிசெ. 01

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தின் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி ஒருவர் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டார்.

வாடகை அடிப்படையில் வழங்கப்பட்ட மோட்டார் வாகனம் தொடர்பான பிரச்சினையை விசாரிப்பதற்கும் நீதிமன்றத்தினால் மோட்டார் வாகனத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்கு உதவுவதற்கும் குறித்த பொலிஸ் அதிகாரி 2 இரண்டு 70 ஆயிரம் ரூபா பெறுமதியான குளிரூட்டியை இலஞ்சமாக கேட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

## கொடுக்குளாய் - இயக்கச்சி வீதி தற்காலிகமாகப் புனரமைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 01

வடமராட்சி கிழக்கு கொடுக்குளாய் இயக்கச்சி அபாயவெளி வீதியின் ஒரு பகுதி, பருத்தித்துறை பிரதேச சபையால் தற்காலிகமாக புனரமைக்கப்பட்டுள்ளது.

ஆழியவளையிலிருந்து இயக்கச்சி செல்கின்ற அபாய வெளியேற்ற வீதி, மழை வெள்ளம் காரணமாக கடுமையாக சேதமடைந்திருந்த நிலையில் அதனை புனரமைக்கும் பணியில் நேற்று முன் தினம் பருத்தித்துறை பிரதேச சபையினர் ஈடுபட்டனர்.

குறித்த வீதி சேதமடைந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டதால் நாளாந்தம் வர்த்தக ரீதியிலான பயணத்தில் ஈடுபடுவோர் பெரிதும் பாதிக்கப்பட்டதுடன் பணிகளுக்குச் செல்வோரும் பல சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

மக்களின் தொடர் கோரிக்கைக்கு அமைய நேற்று முன்தினம் பருத்தித்துறை பிரதேச சபையால் வீதியின் ஒரு பகுதி தற்காலிகமாக புனர்நிர்மானம் செய்யப்பட்டது. (அ)

## வெள்ள அனர்த்தத்தினால் நோய்கள் பரவும் அபாயம்

கொழும்பு, டிசெ. 01

வெள்ள அனர்த்த நிலைமை காரணமாக, வைரஸ் காய்ச்சல் உள்ளிட்ட தொற்று நோய்கள் பரவும் அபாயம் இருப்பதாக, சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் ஜி.விஜேசூரிய தெரிவித்தார்.

உணவு மற்றும் பானங்களை கொள்வனவு செய்யும் போதும், அவற்றை உட்கொள்ளும்போதும், பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றவேண்டும்.

வடக்கு-கிழக்கில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், விசேட டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் ஜி.விஜேசூரிய குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.12.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.